Registered as a Newspaper

பக்கங்கள் 16+8

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 162

ஞாயிற்றுக்கிழமை 07 மே 2023

சித்திரை 24 ஆம் நாள் - வள்ளுவர் ஆண்டு 2054



# சிங்கள - பௌத்தமயமாக்கலுக்கு விரைந்து முடிவு கட்டவேண்டும்!

## இந்தியத் தூதுவரிடம் வலியுறுத்தினார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், மே 7
சிங்கள - பௌத்தமயமாக்கலுக்கு முடிவு கட்டவேண்டும். நிரந்தர அரசியல் தீர்வு காணப்படவேண்டும். இந்த விடயங்களை இந்தியத் தூதுவர் கோபால்பாக்லேயிடம் வலியுறுத்தினேன். இதே கருத்துக்களை ஜனாதிபதியுடனான சந்திப்பிலும் முன்வைப்பேன் - இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழுத் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற »15

### படையினருக்காக அமைக்கப்பட்ட

# தையிட்டி விகாரையை ஒருபோதும் அகற்றோம்!



### பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா திட்டவட்டம்

**கொழும்பு, மே 7**

**தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை இராணுவத்தினரின் வழிபாட்டுக்காகவே உருவாக்கப்பட்டது. அதனை ஒருபோதும் அகற்றமுடியாது - இவ்வாறு பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.** »15

கந்தரோடையில்

## விகாரை அமைப்பதற்கு எதிர்ப்பு: இன்று போராட்டத்துக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், மே 7
கந்தரோடையில் தனியார் காணியைக் கொள்வனவு செய்துள்ள பிக்கு அதில் விகாரை அமைப்பதற்கு எடுத்துவரும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று கவனவீர்ப்புப் »15

## தையிட்டி விகாரை சட்டபூர்வமானதே!!!

### அதனை அகற்றக் கோருவது நியாயமில்லை என்கிறார் மஹிந்த



கொழும்பு, மே 7
உரிய அனுமதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள தையிட்டி விகாரையை அகற்றக்கோருவது நியாயமான செயலன்று - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜ »15

## தமிழ் அரசு, ரெலோ, புளொட்டை தனியாகச் சந்திக்கிறார் ரணில்

யாழ்ப்பாணம், மே 7
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ மற்றும் புளொட் ஆகியவற்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் செவ்வாய்க் »15

### கிழக்கு எம்.பி.க்களை அழைக்காவிட்டால்

## ரணிலுடனான பேச்சை புறக்கணிக்க முடிவு

யாழ்ப்பாணம், மே 7
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான 3 நாள் தொடர் பேச்சுக்களுக்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களையும் »15

## கீரிச் சம்பாவுக்கு தட்டுப்பாடு

கொழும்பு, மே 7
கடந்த ஒரு மாதமாக சந்தையில் கீரிச் சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சிறு »15

## வங்காள விரிகுடாவில் காற்றமுத்த தாழ்வுநிலை

### 'மொச்சா' புயலுக்கும் வாய்ப்பு? மீனவர்களுக்கு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 7
வங்காள விரிகுடாவில் உருவாகும் காற்றமுத்த தாழ்வுநிலை சிலவேளைகளில் புயலாகவும் மாற்றம் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது. இருப்பினும் இதன் காரணமாக இலங்கையின் »15

## வெடுக்குநாறிமலையில் சேதங்கள் மேல் நீதிமன்றத்தை நாடுவோம்!!!

### ஆலயத்தில் வைத்து வீரசேகர தெரிவிப்பு

வவுனியா, மே 7
வெடுக்குநாறிமலையில் சேதங்களை விளைவித்தமைக்கு எதிராக மேல்நீதிமன்றை நாடவுள்ளதாக அமைச்சர் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார்.
வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்துக்கு அமைச்சர் சரத்வீரசேகர தலைமையிலான குழுவினர் நேற்றுச்சென்றனர். »15

### யாழ்ப்பாணத்தில்

## 3 மணி நேரத்தில் 40 மி.மீ. மழை

யாழ்ப்பாணம், மே 7
யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து 11.30 மணிவரையிலான 3 மணித்தியாலங்களில் 39.9 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக [illegible] »15



சஞ்சீவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## வெடுக்குநாறிமலைக்கு நேரில் சென்ற வீரசேகர


வவுனியா, மே 7

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் நேற்றுச் சென்றுள்ளனர்.

வவுனியா வடக்கு, ஒலுமடு ஆதி சிவன் ஆலயத்தில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை மீள பிரதிஸ்டை செய்ய வவுனியா நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்த நிலையில், கடந்த 28 ஆம் திகதி ஆலயத்தில் விக்கிரகங்கள் பிரதிஸ்டை செய்யப்பட்டு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றிருந்தன.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தலைமையிலான குழுவினர் வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தையும், அதன் சூழவுள்ள பகுதிகளையும் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

இதன்போது, நெடுங்கேணி பொலிஸார் மற்றும் சிங்கள மக்களும் உடன் சென்றிருந்தனர். (எ-18,110)

STEP IN TO A CAREER IN **BANKING**

**TRAINEE BANKING ASSISTANTS**
NORTHERN PROVINCE

If you are looking to build a career in Banking and are a dynamic and self-motivated individual meeting the below prerequisites we would like to talk to you

- Below 24 years
- Passed GCE O/L with credit passes for Mathematics and English
  or
- Passed Edexcel or Cambridge (O/L) Examination with 06 subjects with 03 "B" passes, including English and Mathematics

**And any one of the following qualifications ;**

- Passed GCE A/L with 3 passes (excluding General English)
- CIMA completed up to Operational Level
- ACCA completed up to Skill Level
- CIM (UK) completed up to Diploma Level
- IABF completed at Institute of Bankers of Sri Lanka
- AAT – Passed Finalist
- Diploma in Information Technology (full time) from an institute approved by the University Grants Commission. If either of the above is not met, Intermediate Applied Banking & Finance - IBSL qualification will be accepted
- Good interpersonal skills
- Flair for customer service

School leavers awaiting GCE A/L examination results can apply

**Walk-in Interviews**
**Saturday, 13 May 2023 (9.00 am to 12.00 pm)**
**Training Centre, Zonal Office,**
**Union Bank, 398, Hospital Road, Jaffna**

Please make sure to bring your CV and NIC. Shortlisted candidates from the interview process will be selected subject to a written examination on the same day

**We are an Equal Opportunity Employer**

Union Bank is a private commercial bank with over 25 years of experience in the financial services sector in Sri Lanka with a strong financial standing offering a complete range of products and services to customers in the personal, corporate and SME banking segments with an island-wide branch network. The Union Bank group consists of its subsidiaries National Asset Management Ltd and UB Finance Company Ltd.

UNION BANK


## விதிமுறையை மீறி பயணித்த பேருந்து

### சாரதிக்கு எச்சரிக்கை !

சாவகச்சேரி, மே 7

விதிமுறைகளை மீறிப் பயணித்த தனியார் பேருந்தின் சாரதி பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டார்.

நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து, முன்னால் சென்ற அரச பேருந்தை முந்திச் செல்ல விதிமுறைகளை மீறி ஆபத்தான நிலையில் பயணித்துள்ளது. இதனை அரசபேருந்தில் பயணித்த பொலிஸ் அதிகாரி ஒருவர் அவதானித்து, மற்றைய பொலிஸ் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தினார். அதையடுத்து குறித்த தனியார் பேருந்து, சாவகச்சேரி பேருந்து நிலையத்தில் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டது. அதன்பின்னர் அரச பேருந்தில் வந்த பொலிஸ் அதிகாரி தனியார் பேருந்தின் சாரதியை எச்சரிக்கை செய்து பேருந்தை தொடர்ந்து பயணிக்க அனுமதி வழங்கினார். (எ-14,9)



கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்பாள் தீர்த்தத் திருவிழா இரணைமடுக் குளத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை சிறப்பாக இடம் பெற்றது. (எ-14,113)

# ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை விரைவில் பகிரங்கமாகும்!

## கத்தோலிக்க ஆயர் பேரவை தெரிவிப்பு

கொழும்பு, மே 7

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் முழுமையான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அது தொடர்பான நிலைப்பாடு விரைவில் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும் என இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் துணை செயலாளர் நாயகம் அருட்தந்தை டோனி மார்டின் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸால் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை கத்தோலிக்க ஆயர் பேரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை தொடர்பில் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் நிலைப்பாட்டை வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இந்த அறிக்கை இறுவட்டுக்களாகவே கிடைத்துள்ளது. அதை இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் சட்டத்தரணிகள் குழாம் ஆராய்ந்து வருகிறது. அறிக்கை முழுமையாக ஆராயப்பட்ட பின்னர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் அது தொடர்பான எமது நிலைப்பாடுகள் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும். தற்போது வரை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஏனையோர் அறிந்துள்ள உண்மைகள் மாத்திரமே எமக்கும் தெரியும். எதிர்வரும் ஓரிரு வாரங்களுக்குள் எமது நிலைப்பாட்டை அறிவிக்க முடியும் என்றார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கை தமக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை மற்றும் கொழும்பு பேராயர் இல்லத்தால் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையிலேயே கடந்த மாதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய இந்த அறிக்கை குருணாகல் மாவட்ட ஆயர் ஹெரல்ட் அன்ரனி ஆண்டகையிடம் கையளிக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிக்கை கிடைத்த பின்னரே தையிட்டி பிரச்சினைக்குத் தீர்வு

## அமைச்சர் விதுர கூறுகின்றார்



**யாழ்ப்பாணம், மே 7**

**யாழ்ப்பாணம் - தையிட்டியில் விகாரை அமைக்கப்பட்டுள்ளமை தற்போது பேசுபொருளாகியுள்ளது. மதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் விளையாட்டுக்களில் அரசியல்வாதிகள் ஈடுபடுகிறார்கள். யாழ்ப்பாணம் - தையிட்டி விகாரை சர்ச்சை தொடர்பில் முழுமையான அறிக்கை கோரப்பட்டுள்ளது. அறிக்கை கிடைத்ததும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும்.**

இவ்வாறு புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தையிட்டி விகாரையை அகற்றக் கோரி முன்னெடுக்கப்படும் போராட்டம் தொடர்பில் வினவிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மற்றும் கிழக்கில் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்ந்தும் ஏற்படுகின்றன. இதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்பது எமக்குத் தெரியவில்லை. அரசியல்வாதிகள் தமக்கான வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே இவ்வாறு செயற்படுகின்றனர். எம்மை இனவாதிகளெனக் கூறுபவர்கள், இறுதியில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விவகாரத்திலும் இவ்வாறே இடம்பெற்றது. அரசியல்வாதிகள் அனைவரையும் இந்தச் செயற்பாடுகளிலிருந்து நீக்கவேண்டும். இலங்கையிலுள்ள 7 புராதன சிவன் ஆலயங்களை மீளப் புனரமைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

அரசியல்வாதிகளிடம் ஒழுக்கமும், சகிப்புத்தன்மையும் காணப்பட்டால், ஏனையோருக்கிடையிலும் சகிப்புத் தன்மையை உருவாக்கமுடியும். இவை இந்து மற்றும் பௌத்தவாதங்களின் அடிப்படையாகும்.

மதத்தை அடிப்படையாகக் கொண்டு அரசியல் விளையாட்டுக்களை விளையாட வேண்டாமென அரசியல்வாதிகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

தையிட்டி விகாரை கட்டுமானம் தொடர்பில் அடுத்த வாரம் அறிக்கை கிடைக்கப்பெறும்.

அதனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானம் எடுக்கப்படும்.

நாட்டிலுள்ள ஒவ்வொரு பிரஜைகளும் தமக்கிடையில் புரிதலை ஏற்படுத்திக் கொண்டால் பிரிவினைவாதம் தோற்றம் பெறாது - என்றார். (ச-இ)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த கஞ்சா மீட்பு!

சென்னை, மே 7

**இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த கஞ்சாப் பொதிகள், இராமநாதபுரத்தில் மீட்கப்பட்டன என்று தமிழக மண்டபம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இராமநாதபுரம் ராமேஸ்வரம் தேவஸ் தானத்திலுள்ள கார் தரிப்பிடத்தில், சந்தேகத்துக்கிடமான முறையில் கார் ஒன்று நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இரவு முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்று மத்திய புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தகவலையடுத்து அங்கு விரைந்த மத்திய புலனாய்வுப் பிரிவு, கியூ பிரிவு, எஸ்.பி. தனிப்பிரிவு உள்ளிட்ட பொலிஸார், மீட்பு வாகனத்தை வரவழைத்து காரை மண்டபம் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கு காரை உடைத்துப் பார்த்தபோது காரில் பொதி செய்து வைக்கப்பட்டிருந்த சுமார் 158 கிலோ கஞ்சாவை மீட்டனர்.

கஞ்சாப் பொதிகள் இலங்கைக்குக் கடத்துவதற்காக வைக்கப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். கார் தரிப்பிடத்திலுள்ள சி.சி.ரி.வி. கமராக்களின் பதிவுகள் மூலம் சந்தேகநபரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-14)

### வேட்புமனுத் தாக்கல் செய்த

## அரச பணியாளர்களுக்கான விசேட சுற்றறிக்கை நாளை

கொழும்பு, மே 7

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு சம்பளமற்ற விடுமுறையில் முன்வந்த அரச ஊழியர்களை மீண்டும் பணிக்கு சமூகமளிக்க அனுமதிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அரச சேவையாளர்கள் மீண்டும் சேவையில் ஈடுபடுவது தொடர்பான விசேட சுற்றறிக்கை நாளை திங்கட்கிழமை வெளியிடப்படும் என மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்பர தெரிவித்தார்.

அதற்கமைய தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத்தாக்கல் செய்த தொகுதியைத் தவிர பிறிதொரு தேர்தல் தொகுதியில் அரச பணியில் சேவையாற்ற அனுமதிக்கப்படுவர் என மாகாணசபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வாக்கெடுப்பு தொடர்ந்து இழுபறி நிலையிலுள்ளது. தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுத்தாக்கல் செய்ய 7 ஆயிரத்துக்கும் அதிகமான அரச சேவையாளர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வாக்கெடுப்பு நிச்சயமற்ற தன்மையில் விடுமுறையில் உள்ள பாதிக்கப்பட்ட அரச சேவையாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அரச சேவையாளர் போட்டியிடவுள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொகுதியில் சேவையாற்றாமல் பிறிதொரு தேர்தல் தொகுதியில் சத்தியக் கடதாசியூடாக சேவையாற்ற அனுமதிக்க முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோசனை வழங்கியது. இந்த ஆலோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (ச-இ)

## வெளிநாட்டு நிறுவனங்களின் எரிபொருள் திட்டம் ஆரம்பம்!

### எரிபொருள் விலை குறையும் மின்சக்தி அமைச்சு தெரிவிப்பு



கொழும்பு, மே 7

**வெளிநாட்டு எரிபொருள் நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகளை ஒருமாத காலத்துக்குள் இலங்கையில் ஆரம்பிக்கவுள்ளன. விரைவில் எரிபொருள் விலைகள் குறைக்கப்படுவதுடன் மின்கட்டணத்தில் சலுகைகளும் வழங்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.**

நாட்டில் எரிபொருள் விநியோகத்தை முன்னெடுக்கவுள்ள விநியோகத்தர்களுக்கு கிடைக்கப்பெறவுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்கள் உள்ளிட்ட தரப்பினருடன் விசேட சந்திப்பு அண்மையில் இடம்பெற்றபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் நிறுவப்படவுள்ள 450 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் தலா 150 என மூன்றாகப் பிரிக்கப்பட்டு புதிய வெளிநாட்டு எரிபொருள் விநியோகத்தர்களுக்கு வழங்கப்படும்.

சீன, அவுஸ்திரேலிய மற்றும் அமெரிக்க எரிபொருள் விநியோக நிறுவனங்கள் அவற்றின் செயற்பாடுகளை ஒரு மாதத்துக்குள் ஆரம்பிக்கவுள்ளன. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகத்துக்கான வாய்ப்புக்கள் வழங்கப்படுவதால் போட்டித் தன்மை அதிகரிக்கும்.

எனவே எரிபொருள்களின் விலைகள் மேலும் குறைவடையும். அத்தோடு தட்டுப்பாடின்றி எரிபொருளை விநியோகிப்பதற்கான வாய்ப்புக்களும் உருவாகும்.

கியூ.ஆர். குறியீட்டு முறைமையை நீக்குவது தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. போதியளவு எரிபொருள் களஞ்சியப்படுத்தப்பட்டதன் பின்னர் அது குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

அதேவேளை மின் கட்டணம் தொடர்பிலும் நிச்சயம் விரைவில் சலுகைகள் வழங்கப்படும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர மற்றும் இராஜாங்க அமைச்சர் இந்திக்க அனுருத்த ஆகியோர் குறிப்பிட்டனர். (ச-இ)

## ரணிலின் தந்திரத்துக்கு பலியாகிவிடாதீர்கள்!!!

### ஐங்கரநேசன் கோரிக்கை

**வடக்கு- கிழக்கைத் தனித்தனியாகக் கையாளும் ரணிலின் தந்திரத்துக்கு எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலியாக வேண்டாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

ஜனாதிபதி இனப்பிரச்சினைக்கான தீர்வு பற்றிப் பேசுவதற்கு வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் விடுத்திருக்கும் அழைப்புத் தொடர்பாக பொ.ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்;

ஜனாதிபதி விடுக்கும் அழைப்பொன்றைத் தமிழர்தரப்பு நிராகரிக்கமுடியாது. தனித்தனிக்கட்சிகளாக அல்லாது அனைத்துத் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நிலைப்பாடுகளையும் உள்வாங்கி ஒருமித்த தமிழ்த் தேசியத்தின் குரலாகப் பேச்சு மேடையில் அமரவேண்டும். தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை வடக்குக்கான பிரச்சினையாகத் தென்னிலங்கை உருவகித்து வருகிறது. பேச்சு மேடையில் வடக்கு-கிழக்கும் தனித்தனியாகப் பங்கேற்பது தமிழ் தேசியத்தின் குரலைப் பலவீனப்படுத்துவதாகவே அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது சந்திப்பில் ஜனாதிபதி வடக்கு-கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தனியாகச் சந்திக்கும் அழைப்பை அடியோடு நிராகரிக்கவேண்டும். வடக்கு -கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் ஒன்றாகச் சந்திப்பதற்கான கோரிக்கையை அழுத்தமாக முன் வைக்கவேண்டும்- என்றுள்ளது. (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிர்காம பாதயாத்திரை நேற்றுக் காலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 7

கதிர்காமத்துக்கான பாதயாத்திரை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து நேற்றுச் சனிக்கிழமை காலை ஆரம்பமாகியது.

வடக்கு, கிழக்கு, ஊவா ஆகிய 3 மாகாணங்களையும் இணைத்து 46 நாள்களில் 98 ஆலயங்களைத் தரிசித்து 815 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து கதிர்காமத்துக்கான பாதயாத்திரை முடிவடையவுள்ளது.

கதிர்காமக்கந்தன் ஆலய உற்வசம் எதிர்வரும் ஜூன் 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஜூலை 4ஆம் திகதி எசலபெரஹராவுடனான தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவடையும்.

இந்த உற்சவத்தில் கலந்துகொள்வதற்காகவே வருடந்தோறும் செல்வச் சந்நிதி ஆலயத்திலிருந்து பக்தர்கள் பாதயாத்திரையை மேற்கொள்கின்றனர்.

செல்வச் சந்நிதி ஆலயத்தில் நடைபெற்ற பாதயாத்திரை விசேடபூசையைத் தொடர்ந்து மோகன்சுவாமியால், வேலாயுதமானது கதிர்காம பாதயாத்திரைக் குழுத்தலைவர் ஜெயாவேல்சாமியிடம் ஒப்படைக்கப்பட்டது.

பாதயாத்திரைக்கான சகல அனுமதிகளும் வழமைபோல பெறப்பட்டுள்ளனஎன்று பாதயாத்திரைக்குழுத்தலைவர் ஜெயாவேல்சாமி இதன்போது தெரிவித்தார். (எ-14,131, 26,20)

# சீரற்ற காலநிலை 9,000 பேர் பாதிப்பு

கொழும்பு, மே 7

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் 11 மாவட்டங்களில் 9 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ நிலையத்தின் சமீபத்திய நிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை, குருநாகல், புத்தளம், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை, பதுளை ஆகிய இடங்களில் மழை மற்றும் பலத்த காற்றால் 2 ஆயிரத்து 249 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தில் மட்டும் வெள்ளத்தால் 2 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், 71 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தற்காலிக தங்குமிடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களில் நிலவும் மோசமான வானிலை காரணமாக இதுவரையில் மூன்று வீடுகள் இடிந்துள்ளதுடன் 82 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (எ-14,இ)

# காய்கறிப் பயிர்கள் மழையால் அழிவு!

யாழ்ப்பாணம், மே 7

யாழ். குடாநாட்டில் தற்போது பெய்துவரும் கோடை மழையால் மரக்கறிப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன என விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மழை தொடர்ந்து விட்டுவிட்டு பெய்து வருவதால் மரக்கறிப் பயிர்கள் பூத்துக்காய்க்கும் தன்மையை இழந்துள்ளன.

அத்துடன் தாழ்நில மரக்கறித் தோட்டங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளதால் கீரை, வெங்காயம் போன்ற பயிர்கள் அழிவடையும் நிலையில் உள்ளன. அதனால் எமது வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது என விவசாயிகள் கவலை தெரிவித்தனர். (ச-17)

## சங்கத்தானையில் இன்று குருதிக்கொடை

சாவகச்சேரி, மே 7

சங்கத்தானை சர்தா சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில், குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நிலைய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையில் குருதி வகைகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக இந்தக் குருதிக்கொடை முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. குருதிக் கொடையாளர்களையும், ஆர்வமுள்ளவர்களையும் குருதிக்கொடை முகாமில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-14,9)

# ஓமந்தையில் மதுபானசாலை பிரதேசமக்கள் கடும் எதிர்ப்பு

வவுனியா, மே 7

வவுனியா ஓமந்தையில் புதிதாக மேலுமொரு மதுபானசாலை திறக்கப்படவுள்ள நிலையில் அதற்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

ஓமந்தை பாரம்பரிய உணவகத்துக்கு அண்மையில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் பியர் மாத்திரம் விற்பனை செய்யும் மதுபானசாலை அமைக்கப்பட்டது. அதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்த போதிலும் பியர் மதுபானசாலை திறக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் மேலுமொரு மதுபானசாலை ஓமந்தைப் பகுதியில் திறக்கப்படவுள்ளது என்று தகவல் வெளியாகிய நிலையில் அந்தப் பகுதி மக்கள், பொது அமைப்பினர் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். இந்த விடயத்தில் அரசியல்வாதிகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தீர்க்கமான முடிவுகளை எடுத்து புதிதாக மதுபானசாலை அமைக்கப்படுவதை நிறுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-14,18)




# சுன்னாகம் மயிலணி தேசியத்தில் முதலிடம்

யாழ்ப்பாணம், மே 7

மதர் ஸ்ரீலங்கா நிறுவனம், கல்வி அமைச்சுடன் இணைந்து பாடசாலை மதர் ஸ்ரீலங்கா கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட போட்டியில் சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாலயம், மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

விருது வழங்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி அலரி மாளிகையில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த ஆகியோரால் விருது வழங்கப்பட்டது.

விருதுடன் 3 மில்லியன் ரூபா செலவில் வித்தியாலயத்துக்கு கணினி ஆய்வுகூடமும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. சிறப்பாகச் செயற்பட்ட கழகத்துக்கான விருது தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு வழங்கப்பட்டது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)



**மேடம்:** எதிலும் அவசரம் வேண்டாம். புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தந்தைவழி உறவினர்களால் காரிய அனுகூலம் உண்டாகும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**கடகம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்பார்த்தகாரியம் அனுகூலமாக முடியும். மனவருத்தங்கள் நீங்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த் காரியம் சாதகமாக முடியும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களுடன் ஏற்பட்ட சங்கடங்கள் நீங்கும். அனுகூலம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி:** புதிய முயற்சிகளை மேற்கொள்வது நல்லது. எதிர்பார்த்த உதவி கிடைக்கும். ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

**துலாம்:** மனதில் தெய்வபக்தி அதிகரிக்கும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். மற்றவர்களுடன் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்சின்னைகள் ஏற்பட்டு நீங்கும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**தனுசு:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. மனதுக்கு மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

**மகரம்:** பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகள் சாதகமாகும். தந்தைவழி உறவுகள் ஆதரவாக இருப்பார்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். சிலருக்குக் குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும். அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**மீனம்:** புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடவும். வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## புறொயிலர் தலைமுறை

வடக்கு மாகாணத்திலேயே முதன்மை மாவட்டமாக யாழ்ப்பாணத்தையே பலரும் அடையாளப்படுத்துவர். கல்வியறிவு, பொருளாதாரம், மக்கள் தொகை, கேந்திர முக்கியத்துவம் என்று வடக்கு மாகாணத்தின் தலைப்பிள்ளையாக யாழ்ப்பாணத்தைக் கொண்டாடுவது வழக்கம். ஆனால், இந்த நிலைமை இப்போது தலைகீழாக மாறத் தொடங்கியுள்ளது. கல்வித் துறையில் யாழ்ப்பாணம் அண்மைக்காலமாக தொடர் சறுக்கல்களையே சந்தித்துவருகின்றது. போதாக்குறைக்கு பொருளாதாரத்தில் முன்னணியில் நிற்கும் யாழ்ப்பாணத்தில்தான், வடக்கிலுள்ள ஏனைய மாவட்டங்களைவிடவும் போஷாக்கில் குறைபாடுடைய பிள்ளைகள் அதிகளவில் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை, வடக்கில் பொருளாதாரரீதியாகப் பின்தங்கிய நிலையில் இருக்கும் மன்னார் மாவட்டத்தில்தான் போஷாக்குக் குறைபாட்டுத்தன்மை மிகக்குறைந்தளவில் பதிவாகியிருக்கிறது. இந்தத் தகவலை ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் சற்குணராஜா அண்மையில் விழா ஒன்றில் உரையாற்றும்போது வெளிப்படுத்தியுள்ளார்.

பொருளாதார ரீதியாக ஒப்பீட்டளவில் உயர்வான நிலையில் இருக்கும் மாவட்டத்தைவிட, பின்தங்கிய நிலையில் இருக்கும் மாவட்டம் எப்படி போஷாக்குத் தன்மையான பிள்ளைகளைக் கொண்டிருக்க முடியும்? அப்படியானால் பொருளாதாரத்துக்கும் போஷாக்குக்கும் தொடர்பேயில்லையா? இல்லாவிட்டால் வேறேதும் தவறுகள் இந்த வேறுபாட்டுக்குக் காரணமா? என்கிற வினாக்கள் இதன்போது எழவே செய்கின்றன. உண்மையில், மன்னார் போஷாக்கில் முதன்மை நிலையை அடைவதற்கும், யாழ்ப்பாணத்தில் போஷாக்கின்மை அதிகரிப்பதற்கும் மிகமுக்கியமான காரணம் நமது உணவுப்பண்பாட்டு முறைமையில் உண்டான மாற்றமே. முற்றுமுழுதான ஒரு விவசாய மாவட்டமாக யாழ்ப்பாணம் விளங்கியபோது, உணவுக்காக வேறெவரையும் யாழ்ப்பாணத்தவர்கள் நம்பியிருக்கவில்லை. அவர்களது விவசாய உற்பத்திகளைச் சார்ந்ததாகவே யாழ்ப்பாண மக்களின் உணவுப்பண்பாடு கட்டமைக்கப்பட்டு இருந்தது. பழஞ்சோறு முதல் குரக்கன் பிட்டு, ஒடியல் கூழ் வரை யாழ்ப்பாணத்துக்கென தனித்துவமான, சத்தான, உள்ளூர் விவசாய உற்பத்திகளில் இருந்து பெறப்பட்ட உணவுக் கலாசாரம் இருந்தது. இந்த உணவுகள் யாவையுமே நிறையுணவுக்கான கூறுகளைக் கொண்டிருந்தன. அதனால் பொருளாதார ரீதியாக நலிந்தவர்கள்கூட வேலியில் படரும் முசுட்டை, குறிஞ்சா முதல் வீட்டில் வளரும் மரவள்ளி, முருங்கை, வாழை, பனம் பொருள்கள் என்பவற்றின் மூலம் தமது உணவை ஆரோக்கியமானதாக மாற்றமுடிந்தது.

ஆனால், இன்றைக்கு யாழ்ப்பாணத்து உணவுக் கலாசாரம் அப்படியா இருக்கின்றது? வேண்டுமானால் இப்போதைய யாழ்ப்பாண உணவுக் கலாசாரத்தை 'புறொயிலர் உணவுக்கலாசாரம்' என்று சொல்லலாம். ஒருகாலத்தில் பிணம் சுமக்கும் பாடையைஅலங்கரிக்கும்ருசுத்தாளையும், சுவரொட்டிகளையும் ஒட்டுவதற்கான பசையாக மட்டுமே யாழ்ப்பாணத்தவர்களால் பயன்படுத்தப்பட்ட கோதுமை மா தான், இப்போது நமது எல்லா உணவு வகைகளையும் ஆக்கிரமித்திருக்கிறது. ஊர்க்கோழி இறைச்சியைக் காண்பதே அரிதாகிவிட, எல்லோரும் வேலைப்பளுவைக் குறைக்க புறொயிலர் கோழியிறைச்சிக்கு மாறி, தாங்களும் 'புறொயிலர்களாக' மாறிவிட்டார்கள். வெளிப்பார்வைக்கு திடகாத்திரமாகத் தெரிந்தாலும், உண்மையில் நோய் எதிர்ப்புச் சக்தியற்ற, அதிக தசை வளர்ச்சி கொண்ட, நோஞ்சான்களாகவே இளைய தலைமுறை மாறிக்கொண்டிருக்கிறது. அதைவிட கொத்துரொட்டி, பீட்ஸா, மேலைத்தேய துரித உணவு நிறுவன உற்பத்திகள், நூடில்ஸ் என்று ஆரோக்கியத்துக்கு ஒவ்வாத, சத்துக்கள் அற்ற, பகட்டு உணவுக் கலாசாரத்துக்குள் யாழ்ப்பாணம் மூழ்கிவிட்டது. இதன் விளைவுகளில் ஒன்றுதான், போஷாக்கற்ற எதிர்காலச் சந்ததியின் உருவாக்கம். நீரிழிவு, இரத்த அழுத்தம், கொலஸ்ரோல், புற்றுநோய் என எல்லோருமே நோயாளிகளாகி, உணவை விடவும் மருந்துகளையே அதிகம் உட்கொள்ளும் சபிக்கப்பட்ட வாழ்வியலுக்குள் தள்ளப்பட்டமைக்கும் இந்த உணவுக் கலாசார மாற்றமே பெரிதும் காரணம். இருப்பவர்களையும் நோயாளிகளாக்கி, இனிமேல் தலையெடுக்கப் போகும் எதிர்காலச் சந்ததியையும் 'தறுக்கணிக்க' வைக்கும் கைங்கரியத்தையும் மாற்றத்துக்குள்ளாகிவிட்ட உணவுப்பழக்கம் செவ்வனே செய்கின்றது. இதனை இலகுவாகத் தடுக்கவும் முடியும். மீண்டும் எமக்கெனத் தனித்துவமாக இருந்த உணவுப்பாரம்பரியத்துக்குள் நுழைவதுதான் அந்த வழி. இளைய சந்ததியை ஆரோக்கியமானதாக உருவாக்கப்போகிறோமா அல்லது புறொயிலர்களாக மாற்றப் போகிறோமா?

### நாளொரு நல்வார்த்தை

"கவனமுடன் செயலாற்றுங்கள்; நல்ல விடயங்களில் மட்டும் மனதை திருப்புங்கள்"

– மகா வீரர்



## இலங்கையின் மனித உரிமை மீறல் பிரிட்டன் கண்டுகொள்ளாதது ஏன்?

### பிரித்தானிய தமிழர் பேரவை கரிசனை

**கொழும்பு, மே 7**

**உலகின் ஏனைய பல நாடுகளிலுள்ள குற்றவாளிகளுக்கு எதிராக தடைச்சட்டத்தை பயன்படுத்திய பிரிட்டன் ஏன் இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தவில்லை. இலங்கை இன அழிப்பு திட்டத்தை முன்னெடுப்பதை பிரிட்டன் ஊக்குவிக்கிறது என்பதே இதன் பொருளாகும்.**

இவ்வாறு பிரித்தானிய தமிழர் பேரவை ஆதங்கம் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் வடமேல் மாகாணத்தின் ஆளுநர் வசந்த கரன்னகொட மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்காக தடைப்பட்டியலில் அண்மையில் அமெரிக்கா சேர்த்துக் கொண்டுள்ளது.

ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்துக்கு அனுசரணை வழங்கிய நாடுகளில் ஒன்றாக பிரிட்டன் காணப்படுகின்ற போதிலும் இலங்கையின் குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கைகளை இதுவரை எடுக்கவில்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் போதுமான ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஐக்கிய நாடுகள் மனித உரிமை அலுவலகத்தின் விசாரணைக்குழு இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களின் பெயர்களை வெளியிட்டு 8 வருடங்களாகின்றன. ஆனபோதிலும் பிரிட்டன் நடவடிக்கை எதனையும் எடுக்காதது குறித்து கரிசனை கொண்டுள்ளோம்.

உலகின் ஏனைய பல நாடுகளில் உள்ள குற்றவாளிகளுக்கு எதிராக தடைச்சட்டத்தை பயன்படுத்திய பிரிட்டன் ஏன் இலங்கைக்கு எதிராகப் பயன்படுத்தவில்லை?

அமெரிக்காவும் கனடாவும் தொடர்ந்தும் குற்றவாளிகளுக்கு எதிராகத் தடைகளை விதிக்கும்போது ஐரோப்பாவும் பிரிட்டனும் ஜி.எஸ்.பி. சலுகையை தொடர்கின்றன. இலங்கையுடனான ஒழுக்கநெறிக்கு முரணான வர்த்தகத்துக்குத் தீர்வைக் காணவேண்டும் என்று பிரித்தானியா தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது. (ச-இ)

## கடன் மறுசீரமைப்பு வரைவு மாத இறுதிக்குள் அறிவிப்பு

### நிதி இராஜாங்க அமைச்சர் தகவல்

நாட்டின் கடனை மறுசீரமைப்பது தொடர்பான திட்ட வரைவு இந்த மாத இறுதிக்குள் அறிவிக்கப்படும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிவசதி செயற்றிட்டத்தின்கீழ் சுமார் 3 பில்லியன் டொலர் கடனுதவியைப் பெற்றுக்கொள்வதற்கான இறுதிக்கட்ட இணக்கப்பாடு கடந்த மார்ச் மாதம் எட்டப்பட்டது.

முன்னதாக ஏப்ரல் மாத இறுதிக்குள் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை அறிவிப்பது மற்றும் கடன் வழங்குநர்களுடன் பேச்சுக்களை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்திருந்தது. இருப்பினும் கடன்மறுசீரமைப்பு குறித்த செயற்றிட்டத்தை இம்மாத இறுதிக்குள் அறிவிக்க பிற்போட்டுள்ளது அரசாங்கம்.

தற்போது நாட்டின் மொத்தக் கடன்சுமையானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 சதவீதமாகக் காணப்படுகிறது. இதனை அடுத்த சில வருடங்களில் 95 சதவீதமாகக் குறைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அதிகரிக்கப்பட்ட வரிகளை படிப்படியாகக் குறைக்கத் திட்டமிட்டுள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

**நாளை**

**08.05.2023**
**திங்கட்கிழமை**
**சித்திரை 25**

சுபநேரம் : 11.55 – 01.25
ராகுகாலம் : 07.25 – 08.55


**சங்கடஹர சதுர்த்தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குநோய் எதிர்ப்பு சக்தி மாணவர்களுக்குக் குறைவு!

## 'டெங்கு 3 வைரஸ்' தீவிரம் ஆய்வில் கணிப்பு

**கொழும்பு, மே 7**



**பாடசாலை மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் நாடளாவிய ரீதியில் 24 சதவீத மாணவர்களுக்கே டெங்கு நோய் எதிர்ப்பு சக்தி காணப்படுகின்றமை தெரியவந்துள்ளது.**

உலக சுகாதார ஸ்தாபனம், சுகாதார அமைச்சுடன் இணைந்து நாடளாவிய ரீதியில் 9 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் 9 மாவட்டங்களிலுள்ள மாணவர்களின் மாதிரிகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பில் ஸ்ரீஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூட நோய் எதிர்ப்பு மற்றும் ஒவ்வாமை பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளதாவது:

கடந்த 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் இவ்வாண்டு 'டெங்கு 3 வைரஸ்' பரவ ஆரம்பித்துள்ளது. கொரோனாத் தொற்றின் காரணமாக நடைமுறைப்படுத்தப்பட்ட ஊரடங்கு உள்ளிட்டவற்றால் டெங்கு நோயாளர்கள் இனங்காணப்படும் வீதம் குறைவடைந்தது. கடந்த ஜனவரி முதல் மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்தது.

ஆய்வுகூடத்தில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் 'டெங்கு 3' வைரஸ் தாக்கம் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதனால் டெங்கு நோயாளர் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இந்தநிலையில் நாடளாவிய ரீதியில் மாணவர்களிடையே மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் டெங்கு நோய் எதிர்ப்பு சக்தி 24.9 சதவீதமான மாணவர்களுக்கு மாத்திரமே காணப்படுகிறது.

'டெங்கு 3' வைரஸால் டெங்கு நோய் ஏற்பட்டால் அதிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்வது மிகக் கடினமாகும். எனவே, டெங்கு நுளம்பு பரவாத வகையில் சூழலை தூய்மையாகப் பேணுவதே அடிப்படைத் தேவையாகும் - என்றார். (ச)

## பொய் முறைப்பாடு வழங்கியவருக்கு பிணை

கொழும்பு, மே 7

பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று பொய்யான முறைப்பாடு வழங்கிய சந்தேகநபர், சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

மத்திய மாகாணத்தைச் சேர்ந்த 21வயதான மௌலவி என்ற நபரே இவ்வாறு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு பழி வாங்கும் முகமாக பள்ளிவாசல் மீது தாக்குதல் நடத்தப்படவுள்ளது என்று அலைபேசி மூலம் தகவல் கிடைத்தது என்று பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு பொய்யான முறைப்பாடு வழங்கியிருந்தார். அதையடுத்து கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதி சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரது வழக்கு கொழும்பு நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அவருக்குக் கிடைத்த அலைபேசி அழைப்புகளை பொலிஸாருடன் பகிர்ந்திருக்கலாம் எனவும் அவரை பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் விசாரிக்க வேண்டாமெனவும் கொழும்பு பிரதான நீதிவான் பிரசன்ன அல்விஸ் தெரிவித்துள்ளார்.

அவரை ஏமாற்றும் நோக்குடன் அவரது அலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியிருக்கலாமெனவும் நீதிவான் தெரிவித்தார். அதன்பின்னரே சரீரப்பிணையிலும் காசுப்பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். (எ-14,6)

# இலங்கை கொள்கையை மதிக்கின்றதாம் ரஷ்யா!

## ரஷ்யத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, மே 7

இலங்கை அரசாங்கம் தற்போது பின்பற்றுகின்ற அணிசேரா கொள்கையை நாம் மதிக்கிறோம். உக்ரைன் நாட்டை மாத்திரமின்றி போருக்கு அனுசரணை வழங்கும் ஏனைய மேற்குலக நாடுகளை ரஷ்யா மீண்டும் தோற்கடிக்கும் என இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் லெவான் எஸ்.டகர்யான் தெரிவித்தார்.

இரண்டாம் உலகப்போரின்போது உயிர்நீத்த ரஷ்ய இராணுவத்தினரை நினைவுகூரும் நிகழ்வு கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதகரத்தால் தேசிய பொதுநூலகத்துக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றுகையில் ரஷ்யத் தூதுவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரண்டாம் உலகப் போரில் உயிர்நீத்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் நிகழ்வு உலகளாவிய ரீதியில் 11 நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகிறது. இதில் இலங்கையும் உள்ளடங்குகிறது.

இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் முக்கியத்துவம் வாய்ந்தவை.

தற்போது ரஷ்யாவில் மீண்டும் போர் நிலைமை ஏற்பட்டுள்ளது. உக்ரைன் மாத்திரமின்றி மேற்குலக அனுசரணையாளர்களையும் மீண்டும் தோல்வியடைச் செய்ய தயாராகவுள்ளோம் - என்றார். (ச-இ)

## சார்ள்ஸ் மன்னர் முடிசூட்டு விழா இலங்கை மருத்துவருக்கு அழைப்பு


கொழும்பு, மே 7

ஐக்கிய இராச்சியத்தின் தேசிய சுகாதார சேவையில் பொது மருத்துவராகப் பணியாற்றும் இலங்கையில் பிறந்த பிரித்தானிய மருத்துவர் ஹரின் டி சில்வா, மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

கொரோனாத் தொற்றுக் காலகட்டத்தில் பொது நடைமுறையில் அவர் ஆற்றிய சேவைகளுக்காக மருத்துவர் டி சில்வாவுக்கு பிரிட்டிஷ் எம்பயர் பதக்கம் வழங்கப்பட்டுள்ளது.

சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவுக்கு அழைக்கப்படும் பிரித்தானிய சமூகங்களுக்கு அசாதாரண பங்களிப்புகளை வழங்கிய 'சாதாரண' மக்கள் குழுவில் கலாநிதி ஹரின் டி சில்வாவும் ஒருவர் என்பது சிறப்பம்சமாகும்.

இது தொடர்பில் மருத்துவர் ஹரின் டி சில்வா கூறுகையில், தான் சற்று பதற்றமாக உள்ளதாகவும், ஆனால் வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்வில் பங்குகொள்ள ஆவலுடன் உள்ளேன் என்று தெரிவித்தார் இதனிடையே, 450 க்கும் மேற்பட்ட பிரித்தானிய ஏகாதிபத்திய பதக்கம் வென்றவர்கள் மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டு விழாவில் கலந்துகொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-14,இ)



## விபத்தில் கவிழ்ந்த பவுஸர் டீசலை அள்ளிய மக்கள்!

கொழும்பு, மே 7

எரிபொருள் பவுஸர் வீட்டுடன் மோதி விபத்துக்குள்ளாகியதில் ஒருவர் காயமடைந்துள்ளார். இந்த விபத்து ஹப்புத்தளை பத்கொட பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

கொழும்பில் இருந்து, 33 ஆயிரம் லீற்றர் டீசலுடன் ஹப்புத்தளை நோக்கிப் பயணித்த எரிபொருள் பவுஸர், வீதியை விட்டுவிலகிச் சென்று அருகில் உள்ள வீடொன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இதன்போது எரிபொருள் பவுஸர் உதவியாளர் காயமடைந்த நிலையில் பங்கட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக தியத்தலாவ மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். விபத்தில் வீட்டுக்குச் சேதம் ஏற்பட்டுள்ளபோதிலும், வீட்டிலுள்ளவர்களுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. விபத்தால் எரிபொருள் பவுஸரில் கசிவு ஏற்பட்டு அதிலிருந்து வெளியேறிய டீசலை பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவானோர் நிரப்பிச் சென்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-14,இ)

# அவசரநிலை நிறைவுக்கு வந்ததால் தொற்று இல்லையென அர்த்தமல்ல

## உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 7

கொரோனாப் பெருந்தொற்றுப் பரவல் காரணமாக பிரகடனப்படுத்தப்பட்ட சர்வதேச அவசர நிலை நிறைவுக்கு வந்ததால், தொற்று முடிவடைந்துவிட்டது என்பது அர்த்தமல்ல. இவ்வாறு உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலக சுகாதார ஸ்தாபனம் கடந்த 2020 ஆம் ஆண்டு 30 ஆம் திகதி கொரோனாப் பரவலை சர்வதேச ரீதியில் அவசர நிலையாக பிரகடனம் செய்திருந்த நிலையில், இந்த அவசர நிலையை தற்போது முடிவுக்குக் கொண்டுவர உலக சுகாதார ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது. கொரோனாத் தொற்று மற்றும் உயிரிழப்பு எண்ணிக்கை குறைவடைந்தமைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.



எனினும் அவசரநிலை நிறைவுக்குக் கொண்டு வந்ததால், உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று நிறைவடைந்துவிட்டது என்று அர்த்தமில்லை. கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதும், தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சேர்க்கப்படுவதும் கணிசமாகக் குறைந்துள்ளது. கொரோனாத் தொற்றுக்குள்ளான இருவர் அண்மையில் உயிரிழந்துள்ளனர். இந்த நிலையில் கொரோனா முற்றாக நீங்கவில்லை என்பது தெளிவாகவே உள்ளது. - என்றார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# ருவாண்டா ஜனாதிபதியை சந்தித்த ஜனாதிபதி ரணில்

லண்டன், மே 7

மூன்றாவது சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழாவில் பங்கேற்பதற்காக உத்தியோகபூர்வ அழைப்பில் லண்டன் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு ருவாண்டா ஜனாதிபதியை சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ருவாண்டா ஜனாதிபதி போல் ககாமே ஆகியோர் லண்டனில் சந்தித்து இரு நாடுகளுக்கும் இடையிலான விவசாயம், சுகாதாரம் உள்ளிட்ட பல துறைகளில் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது, எதிர்கால நடவடிக்கைகள், இரு நாட்டு அமைச்சர்களின் சந்திப்பு தொடர்பில் ஆராய்ந்தனர்.

இரு நாடுகளுக்குமிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பில் தலைவர்கள் கவனம் செலுத்தியதுடன், இயற்கை இடர்களுக்கு துரித நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பயிற்சியளிக்க இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் ஒத்துழைப்பை வழங்குவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடன்பாடு தெரிவித்தார். (எ-14,இ)

# பிறநாட்டுச் சட்டங்கள் போன்றே எமது பயங்கரவாத சட்டவரைவு

## ஜனாதிபதி சட்டத்தரணி வக்காலத்து

கொழும்பு, மே 7

**அரசாங்கத்தால் கொண்டுவரப்படவுள்ள புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவில் பயங்கரமான விடயங்கள் எதுவுமில்லை. உலகில் ஏனைய நாடுகளில் இருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டங்களைப் போன்றே இது தயாரிக்கப்பட்டிருக்கிறது.**

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான யூ.ஆர். டி சில்வா இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகில் எந்த நாட்டிலுமுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்திலும் பயங்கரவாதம் என்றால் என்ன? என வரைவிலக்கணப்படுத்தியதில்லை.

பயங்கரவாத தடைச்சட்டம் இருக்கும் நாடுகள் தங்களின் நாட்டுக்கு ஏற்றவகையில் பயங்கரவாத செயற்பாடுகளை பட்டியலிட்டு வரைவிலக்கணப்படுத்தி இருக்கின்றன. அதன் பிரகாரமே எமது சட்டவரைவும் மேற்கொண்டுள்ளது.

சட்டவரைவில் பயங்கரவாதம் தொடர்பில் வரைவிலக்கணப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்புடையதல்ல.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவில் தடுப்புக்காவல் உத்தரவு அதிகாரம், பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாகவே பெரியளவில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

பிரதிப் பொலிஸ் அதிபருக்கு தடுப்புக்காவல் உத்தரவு அதிகாரம் வழங்கினாலும் சந்தேகநபரை 48 மணி நேரத்துக்குள் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்த வேண்டும் என சட்டவரைவில் இருக்கிறது.

இந்த இடத்தில் சந்தேகநபருக்கு நீடிக்கப்படும் பொலிஸ் தடுப்புக்காவல் நியாயமானதா? என ஆராய்ந்து தீர்மானிக்க திருத்தம் மேற்கொள்ளப்படவேண்டும் என்றே நாங்கள் கருதுகிறோம்.

எதிர்க்கட்சிகள் விமர்சிப்பதைப் போன்று பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவில் பயங்கரமான விடயங்கள் எதுவும் இல்லை - என்றார். (ச-இ)

### அலங்காரப் பொருள்கள்:

# இறக்குமதித் தடையால் 90 கோடி ரூபா சேமிப்பு!

கொழும்பு, மே 7

வெசாக் கூடுகள் மற்றும் அதனுடன் சார்ந்த அலங்காரப் பொருள்களுக்காக விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி தடை காரணமாக 90 கோடி ரூபாவை சேமிக்க முடிந்துள்ளது. இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு வெசாக் கூடுகள் மற்றும் அதனுடன் சார்ந்த அலங்காரப் பொருள்களுக்காக 90 கோடி ரூபா செலவிடப்பட்டது.

அலங்கார பொருள்களுக்கான இறக்குமதித் தடை காரணமாக நாட்டில் புதிய தொழில்வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

வெளிநாடுகளுக்கு செல்ல இருந்த 90 கோடி ரூபா பணத்தொகை சேமிக்கப்பட்டுள்ளது நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)

# ஈரானால் இலங்கைக்கு மருந்துகள் நன்கொடை

ஈரான் குடியரசு 1.8 மில்லியன் அமெரிக்க டொலருக்கு அதிக பெறுமதியுடைய புற்றுநோய் மருந்துகள் உட்பட அத்தியாவசிய மருந்துகளை இலங்கை அரசாங்கத்துக்கு சுகாதார அமைச்சின் ஊடாக நன்கொடையாக வழங்கியுள்ளது.

ஈரானிய தூதுவர் ஹாசிம் அஷிட் இந்த மருந்துப் பொருள்களை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

இந்த நன்கொடையின் கீழ், நாட்டில் புற்றுநோய், இதய நோய், தோல் நோய், வைரஸ் தொற்று, உயர் இரத்த அழுத்தம், பார்கின்சன் போன்ற பல நோய்களுக்கான மருந்துகள் உட்படப் பல அத்தியாவசிய மருந்துகள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின்போது இவ்வாறான அத்தியாவசிய மருந்துகளை பெற்றுக் கொள்வது பெரும் நிவாரணம் அளிப்பதாகவும், அதற்காக ஈரான் மக்களுக்கும் ஈரான் குடியரசுக்கும் இலங்கை பிரஜைகள் சார்பாக நன்றி தெரிவிக்கின்றோம் என்றும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டார். (எ-இ)



# தமிழகம் செல்ல முயன்ற 6 இலங்கையர்கள் கைது!

கொழும்பு, மே 7

இலங்கையில் இருந்து சட்டவிரோதமான முறையில் இந்தியா செல்வதற்கு முயன்ற 6 இலங்கைத் தமிழர்களை இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

வவுனியாவைச் சேர்ந்த சிறுவன் ஒருவன் உட்பட 6 பேர் இந்தியா செல்ல முயன்றுள்ளனர். அப்போது அவர்களை நடுக்கடலில் வைத்து இலங்கைக் கடற்படை கைது செய்துள்ளது.

மன்னார், எருக்கலம்பிட்டி கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் இலங்கைக் கடற்படையினர் விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு இலங்கையிலிருந்து கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கு சட்டவிரோதமாக செல்ல முயன்றதாக சந்தேகிக்கப்படும் 6 பேருடன் டிங்கி படகு ஒன்றைக் கைப்பற்றினர் என்று இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர். (எ-இ)

# கடந்த சில மாதங்களில் சடுதியாக வெளியேறும் விரிவுரையாளர்கள்

## பல்கலை கல்வித்துறை பாதிப்பு

கொழும்பு, மே 7

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளால் கடந்த 5 வருடங்களை விட கடந்த சில மாதங்களில் அவர்கள் சடுதியாக நாட்டை விட்டு வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

இதன் காரணமாக பல்கலைக்கழக அமைப்பு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் பேராசிரியர் ஷியாம் பன்னேஹக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவது அதிகரித்துள்ளதாலும், அரச சேவைக்கு புதிதாக ஆள்களை இணைத்துக் கொள்ளாத அரசாங்கத்தின் முடிவினாலும் பல்கலைக்கழக கல்வித்துறை பெரிதும் ஆட்டம் கண்டுள்ளது. களனிப் பல்கலைக்கழகத்தில் சுமார் 150 மருத்துவர் வெற்றிடங்களும் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சுமார் 100 மருத்துவர் வெற்றிடங்களும் உள்ளன. சில பல்கலைக்கழகங்களில் விரிவுரைகளை நடத்துவதற்கு போதிய விரிவுரையாளர்கள் இல்லை.

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள புதிய வரிவிதிப்பு முறையால் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சுமார் 36 வீத வரிச் சுமைக்கு உள்ளாகியுள்ளனர். ஆனால் அவர்கள் சம்பளத்துக்கு ஏற்றவாறு செலவுகளை நிர்வகித்தாலும், இந்த நியாயமற்ற வரிக் கொள்கையால், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் முன்பு செலுத்திய வரித் தொகையைவிட மூன்று மடங்கு அதிக சுமையை எதிர்கொள்கின்றனர். இதன்படி, சில விரிவுரையாளர்களின் சம்பளம் மறை நிலைக்குச் சென்றுள்ளது. இதனால் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர வேறு வழியில்லை. எனவே இந்த விடயத்தில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு வெளிப்படையாகக் கலந்துரையாடி பிரச்சினைக்குரிய தீர்வை வழங்க வேண்டும் - என்றார். (எ-14,இ)

# சுற்றுலாப்பயணிகளாக 20 இலட்சம் இந்தியர்கள்

கொழும்பு, மே 7

இந்த ஆண்டில் 20 இலட்சம் இந்திய சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதை சுற்றுலாத்துறை இலக்காகக் கொண்டுள்ளது என்று இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை சுமார் 530 மில்லியன் அமெரிக்க டொலரை சுற்றுலாத்துறையின் மூலம் ஈட்டியுள்ளது.

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் இந்த வருமானம் 482.3 மில்லியனாக இருந்தது. இந்த நிலையில் 2023ஆம் ஆண்டின் இறுதியில் சுற்றுலாத்துறையில், மொத்தம் 3 பில்லியன் டொலர் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# களைகட்டியது இந்திரவிழா

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் கொடியிறக்க திருவிழா அன்று நடைபெறும் இந்திரவிழா நேற்றுமுன்தினம் இரவு மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

முத்துமாரியம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை ஆகிய தெய்வங்களை முத்துப்பல்லக்கில் பக்தர்கள் சுமந்து வீதி உலா வந்தனர்.

முக்கிய வீதிகள் வர்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மின்விளக்குகள், கலைநிகழ்ச்சிகள், நடன ஆற்றுக்கைகள், கவியரங்கங்கள், சொற்பொழிவுகள், புகைக்குண்டு ஏற்றல், வான வேடிக்கைகள் இடம்பெற்று நேற்று அதிகாலையில் முத்துமாரி அம்மன், சமேதராக ஆலயத்தை வந்தடைந்தனர். (ஒ.இ)















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்ப்பாணம்

WISE EDUCATION

கல்விக்கண்காட்சி

இலவச சந்திப்பு 2023

14th May at 9.30 am onwards till 5pm.





ஆடிட்டோரியம்
J HOTELS by J Guest
மண்டபம் புங்கங்குளம் வீதி, யாழ்ப்பாணம்.
நேரடிப்பதிவு

100% விசா வெற்றி விகிதம்
மற்றும் வதிவிடதீர்வு ஆதரவு

கிடைக்கும் உதவித்தொகை வாய்ப்புகளை ஆராயுங்கள்.
உங்கள் எல்லா கேள்விகளுக்குமான பதில்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
எங்கள் தீர்வு ஆதரவுடன் மெய்நிகர் சந்திப்பு. எமது இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, பின்லாந்து மற்றும் ஸ்வீடன் அணிகளுடனான சந்திப்பு.

MORE DETAILS
074 158 2287/ 076 843 9313
077 378 9871/ 076 918 2287

இலவச ஆலோசனைகள்
consel9@wiseeducationandmigration.com
இன்றே பதிவு செய்யுங்கள்
நேரடிப்பதிவுகள்



நீர்வேலி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த் திருவிழா கடந்த வியாழக்கிழமை அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம் பெற்றது. (ச-17)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் 7 மாணவர்களுக்கு சைக்கிள்



யாழ்ப்பாணம், மே 7'

வடமராட்சி செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தால் ஏழு மாணவர்களுக்கு சைக்கிள்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

பல்கலைக்கழக மாணவி, உயர்தர மாணவன் உள்ளிட்ட ஏழு மாணவர்களுக்கு 3 லட்சத்து 57 ஆயிரம் ரூபா பெறுமதியில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. உதவிகளை கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், இந்தியாகோயம்புத்தூர் சைவ சித்தாந்த பேராசிரியர் மீ. சண்முகம், ஆச்சிரமத் தொண்டர்கள் உள்ளிட்டோர் வழங்கினர். (எ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் · 18 · 08 · 1951



மறைவு · 06 · 05 · 2023

## நல்லதம்பி செல்வராசா
(சக்கலாவோடை, காரைநகர்)

காரைநகர் அல்வின் வீதியை பிறப்பிடமாகவும், சக்கலாவோடை, காரைநகரை வதிவிடமாகவும் கொண்ட நல்லதம்பி செல்வராசா அவர்கள் நேற்று (06.05.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி குணம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், குகநாயகியின் அன்புக் கணவரும், ஶ்ரீஸ்கந்தராசா (சிறி ரான்ஸ்போட், காரைநகர்), விஜயகுமார் (கட்டார்), பிரபாகரன் (ஆசிரியர் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்), பகிர்ந்தினி, சறோஜினி, சதீஸ்குமார் (கட்டார்), சத்தியராஜ் (கட்டார்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மாலதி, கிருஸ்ணானந்தி, மயூரா (மக்கள் வங்கி, சுன்னாகம்), பிரதீபன் (அஞ்சல் தலைமைக் காரியாலயம், யாழ்ப்பாணம்), பிரசாத் (ஓமான்), ஆரணி (முகாமைத்துவ உதவியாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும், தக்ஷயன், லதுமிதா, தபிஷாயினி, நிலக்ஷா, பவிநயா, கிருத்திக், ஹவிஷான், டர்விக்கா, தருணிக்கா, கேதிகா, தன்சிக்கா, சன்சிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சக்கலாவோடை, காரைநகர்.
077 172 0007

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 24798) A-1

# முடியாட்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

பிரிட்டனில் முடியாட்சியை எதிர்க்கும் குழுவின் தலைவரான கிரஹாம் ஸ்மித் உட்பட 6 பேர் நேற்று நடைபெற்ற முடிசூட்டும் நிகழ்வுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த வேளை கைதுசெய்யப்பட்டனர். மன்னர் சார்ள்ஸின் ஊர்வலப் பாதையில் ஆர்ப்பாட்டம் செய்தபோதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முடிசூட்டும் நிகழ்வு பிரதானமாக இடம்பெறும் டிரபல்கர் சதுக்கத்தில் ஆர்ப்பாட்டங்களுக்காகக் குளிர்பானங்கள் பதாகைகளை சேகரித்துக்கொண்டிருந்த போது கிரஹாம் ஸ்மித் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்றைய நிகழ்வுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை சகித்துக் கொள்ளப்போவதில்லை என பொலிஸார் ஏற்கனவே தெரிவித்திருந்தனர். (ஏ-இ)

## ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின் பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும் - 2023

மேற்படி ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தின்
**2023 ஆம் ஆண்டுக்கான**
**பொதுக்கூட்டமும், நிர்வாகத் தெரிவும்**
**எதிர்வரும் (21.05.2023) ஞாயிற்றுக்கிழமை**
**மாலை 6.00 மணியளவில்**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில்**
நடைபெறும்.
**திருத்தி அமைக்கப்பட்ட யாப்பினை பதில் செயலாளரிடமும் (077 119 9255)**
**கணக்கறிக்கையினை பொருளாளரிடமும் (077 178 9546)** பெற்றுக்கொள்ள முடியும்.

(CS.39796)A-1

**பதில் செயலாளர்**


## இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்

**பிரிவு-47**

- ★Diploma in English / Spoken English
- ★Diploma in ICT
- ★Diploma in Singalam
- ★Diploma in Political Science
- ★Diploma in Psychology & Counselling
- ★Diploma in Care giver
- ★Diploma in Nursing
- ★Diploma in Fisheries Science
- ★Diploma in Media

**ஆரம்பம் : 12.05.2023 10 AM**

★காலம் : 3 மாதங்கள் ★சான்றிதழ் பிரிவுகள்

IELTS / Life Skills A1, B1, பிரிவு II
சன் மாஸ்டரின் வகுப்புகள் ஆரம்பமாகின்றன

**English /ICT-O/L, A/L**
வகுப்புக்கள்:(Eng/Tamil)
பாடசாலை மாணவர்களின் பாடத்திட்டத்திற்கு அமைவாக வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

**IPS** to your future
Thirunelvely
T.P: 021 4340229
076 685 2529

## வீடு வாடகைக்கு

கொழும்பு-நீர்கொழும்பு வீதி பேலியகொடையில் மாடி வீடு, அறைகள் வாடகைக்குண்டு. படிக்கும் மாணவர்களுக்கும் வழங்கப்படும்.
071 774 7864


## தவறிவிட்டது

NP BBT7820 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் வாகன அனுமதிப் பத்திரமும், வரிப்பத்திரமும் அடங்கலாக ஆவணங்கள் யாழ். நகரப்பகுதியில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**077 798 9464**

# மரண அறிவித்தல்

மலர்வு · 15 · 01 · 1943



உதிர்வு · 06 · 05 · 2023

## செல்லையா நடராசா
(ஓய்வுபெற்ற உப தபாலதிபர், அகில இலங்கை சமாதான நீதவான்)

இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வளலாயை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நடராசா நேற்று (06.05.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லையா நாகம்மா தம்பதியரின் மகனும், வேதநாயகம் பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், அமரர்களான கபிலன், முகுந்தன் மற்றும் அகிலன் (அமெரிக்கா), நந்தினி (ஆசிரியர், யா/கொழும்புத்துறை சென். ஜோசெப்ஸ் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தரூபனின் (ஆசிரியர் யா/புத்தூர் ஶ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி) அன்பு மாமனாரும், பிரகோபன் (யா/இந்துக் கல்லூரி), மதுமிகா (யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஆதுஜன் (அமெரிக்கா) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வளலாய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வளலாய் மேற்கு,
வளலாய், அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 0155 347

# மரண அறிவித்தல்

மலர்வு · 03 · 01 · 1949



உதிர்வு · 05 · 05 · 2023

## திரு. வல்லிபுரம் ஶ்ரீதரன்
(முன்னாள் காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்)

கீரிமலையை பிறப்பிடமாகவும், கிளானை கொல்லங்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வல்லிபுரம் ஶ்ரீதரன் அவர்கள் கடந்த (05.05.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், நாகலிங்கம் நாகம்மா தம்பதியரின் மருமகனும், விமலாம்பிகையின் அன்புக் கணவரும், சந்திரசேகரமூர்த்தி (முன்னாள் இலங்கைவங்கி ஊழியர்), காலஞ்சென்ற கமலானந்தயோகேஸ்வரி (ஆசிரியர்), விஜயபாஸ்கரன், விமலானந்தயோகேஸ்வரி, ரவீந்திரன் (Painter), மனோகரன், கருணாகரன் (Painter) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பூர்வஜா (குடும்பநல உத்தியோகத்தர்), அமரர் நிரஜா, ரம்ஜா (USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திலீபன் (Sakthi micro system), ஜனந்தன் (Doctor) ஆகியோரின் மாமனும், உதித், உத்ரா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (08.05.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் கீரிமலை செம்மண்வாய்க்கால் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 5590 741

தகவல்:
குடும்பத்தினர்

(CS 24797) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வீடு விற்பனைக்கு

யாழ், திருநெல்வேலி, ஆடியபாதம் வீதி, அரசடி 2ம் ஒழுங்கை, 11/14, 04 பரப்பு காணியும், 04 அறைகள், 02 சமையலறை, இணைந்த குளியல்/ கழிவறை உள்ள திருத்தியமைக்கப்பட்ட பெரிய வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு
**0777 760 663**

### சொத்துக்கடன்

உங்கள் நிதித் தேவைக்காக விரைவாக சொத்துக் கடனுக்கு அழையுங்கள்.
**0762488353**

### வேலைவாய்ப்பு

முன்னனுபவம் உள்ள Sales Rep மற்றும் சந்தைப்படுத்தல் தேவைகளுக்கு Promotion 10 Girls / Boys தேவை. சம்பளம், கமிசன், உணவு வழங்கப்படும்.
**070 374 4444, 076 944 7737**

### வீடு விற்பனைக்கு

தெகிவளை Galle Road க்கு அருகாமையில் உறுதியுடன் 3 Bed rooms Apartment உடனடி விற்பனைக்கு. 1185 Sqft மற்றும் 1200 sqft. தரகர் வேண்டாம்.
**077 522 2613** (CS 9312)(K-1)

### வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தை Galle Road க்கு அருகாமையில் 1210 SqFt 3 Bed room Apartment உடனடி விற்பனைக்கு. வெளிநாடு செல்ல இருப்பதால். தரகர் வேண்டாம்.
**076 058 9822** (CS 9313)(K-1)

### திருமண சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் தெரிவுகளுக்கு எமது திருமண சேவையை நாடுங்கள் விரைவாக நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.
**077 964 9245**

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கட்டப்பிராயில் நி.ப: 1 1/2 2 குழி காணி விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை ஆர்வமுள்ளவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.)
தொடர்பு: **077 072 6782**

### பணிப்பெண் தேவை

கொழும்பில் வயதான தாயாரை மகள்போல் பார்த்துக்கொள்வதற்கு அன்பும் பொறுமையும் கொண்ட பெண்ணொருவர் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
**076 241 5971** (CS 9314)(K-1)

### விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஓட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, க்ரயா கொன்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்துாரியம் விற்பனைக்கு உண்டு.


**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு, பிள்ளையார் கோயில் வீதி, கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம் கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

# முடிசூடினார் சார்ள்ஸ்!







லண்டன், மே 7

இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்குப் பின்னர் மன்னரான மூன்றாம் சார்ள்ஸின் முடிசூட்டு விழா நேற்று நடைபெற்றது.

இங்கிலாந்தில் நீண்டகாலம் ராணியாக இருந்த இரண்டாம் எலிசபெத், கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 8 ஆம் திகதி தனது 96 வயதில் காலமானார். அதன்பின்னர் மூன்றாம் சார்ள்ஸ் மன்னரின் முடிசூட்டு விழா நடப்பு ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி நடைபெறும் என பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்திருந்தது.

நேற்று வெஸ்ட்மின்ஸ்டர் அபே பகுதியில் முடிசூட்டு விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. முடிசூட்டு விழாவுக்காக உலக நாடுகளின் தலைவர்கள் உட்படப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். மழையையும் பொருட்படுத்தாமல் சார்ள்ஸ் மன்னருக்கு வாழ்த்து தெரிவிப்பதற்காக மக்கள் பக்கிங்காம் அரண்மனைக்கு முன்னால் திரண்டிருந்தனர்.

பாரம்பரிய மர புப்படி, கையில் செங்கோல், தடி ஆகிய வற்றை ஏந்தி மூன்றாம் சார்ள்ஸ் மன்னர் அரியணையில் அமர, மூத்த மதகுருமார்கள் புனிதப் படுத்தப்பட்டு ஆசீர்வதிக்கப்பட்ட பிறகு, மூன்றாம் சார்ள்ஸ் மன்னருக்கு புனித எட்வர்டின் கிரீடம் சூட்டப் பட்டது. (எ-இ)

### பணிப்பெண் தேவை

யாழ் நகரில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
**077 298 7506**

### காணி விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லையினுள் A9 கண்டி பிரதான வீதியில் (தெற்குப் பக்கம் கண்டி வீதியும் கிழக்கு பக்கம் கிளை வீதியும்) நெருக்கமான குடியிருப்பு பிரதேசத்தில் பாடசாலை, கோயில் என்பவற்றுக்கு அண்மையில் 5/10 பரப்பு காணி வீடு, நல்ல ஊற்று உடைய கிணறு என்பவற்றுடன் விற்பனைக்கு உண்டு. வியாபார நடவடிக்கைகளுக்கு/ தொடர் மாடி வீட்டுத் தொகுதி அமைக்க உகந்த பிரதேசம். விலை பேசித் தீர்மானிக்கலாம்
மேலதிக தொடர்புகளுக்கு **0094762779293** (CS 9311)(K-1)

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் வீடுகள் வாடகைக்கு உண்டு. அத்தோடு களஞ்சியசாலைகள், படிக்கும் மாணவர்களுக்கான அறைகள், சுற்றுலா பயணிகளுக்கான நவீன அறைகள், வீடுகள் எம்மிடம் வாடகைக்கு உண்டு.
**077 345 0039**
**077 348 0039**

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள ஜப்பான் தயாரிப்பான **CD 200** மோட்டார் சைக்கிள் (விலை ரூபா 20 லட்சம்), மகேந்திர 225 உழவு இயந்திரம் மற்றும் மின்சாரத்தில் இயங்கும் துவிச்சக்கர வண்டி போன்றவை உடன் விற்பனைக்குண்டு.
**'வள்ளிமனை'**
**138/8, கோயில் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்.**
**077 787 1320**

### தேவை

**யாழ்.நகரில் அமைந்துள்ள தனியார் நிறுவனத்துக்கு கணக்கு இலிகிதர் தேவை. (கணக்கியல் துறையில் அனுபவ முடைய 25 - 35 வயதுக்குட்பட்ட ஆண்கள்) கீழ்க்காணும் முகவரிக்கு சுய விபரக்கோவையுடன் விண்ணப்பிக்கவும்.**

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**
**வ.வ. இராமசாமிப்பிள்ளை & சன்ஸ்**
**இல.58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.**

**பின்வரும் பாடநெறிகள் May மாதம் 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட உள்ளது**

1.Civil Draught person (one year) - NVQ Level 4

Minimum qualification passed GCE O/L with pass in mathematics@ English

Course leads to:

- Follow courses in level 5
- Lectures will be held at our Jaffna branch along 464 hospital road,Jaffna

2.Certificate in craft Courses (6 மாதங்கள் முழு நேரம் - தமிழ் மொழி மூலம்)

- **அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும் :**

NVQ Level -3 (Accredited) Aluminum fabricator

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.

(TVEC) பதிவு இலக்கம் : P25 / 0014, Facilities : Library & Sports

**மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க :**

DIRECTOR
Jaffna college institute of technology
Vaddukoddai.
Tel no: 0212250975 / 0212223382

### பெறுகை அறிவித்தல் திருத்தம்
### வலிகாமம் மேற்கு பிரதேச சபை,சுழிபுரம்
### சபைநிதி - 2023

எமது சபையினால் 25.04.2023 ஆம் திகதிய பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலில் (IFB) தொடர் இலக்கம் 01-08 வரையிலான வேலைகளின் மதிப்பீட்டுத்தொகைகளில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) 15% உள்ளடக்கி பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதனை தெரியப்படுத்துவதுடன்

தொடர் இலக்கம் 08 வேலைக்குரிய வேண்டப்படும் தரம் C9 & C8 எனவும் (Bid Validity period) கேள்வி செல்லுபடியாகும் காலம் 49 நாட்கள் (28.06.2023) எனவும் திருத்தம் செய்யப்படுகிறது.

தலைவர்,
பெறுகைக் குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
(CR/39792)AH-1 07.05.2023

### CEYLON TAMIL MARRIAGE BUREAU SINGAPORE

We have prospective brides and bridegrooms seeking suitable partners worldwide. Those who are interested, please contact:

Tel: +65 97539583
Email:ctmbsg@gmail.com
Strictly Confidential
Business UEN No:53406709C

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 4 மாகாண ஆளுநர்கள் பதவி விலகப் பணிப்பு?

**கொழும்பு, மே 7**


**வடக்கு, கிழக்கு உட்பட 4 மாகாணங்களின் ஆளுநர்களுக்கு பதவி விலகு மாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

பதவி விலகுமாறு ஜனாதிபதி செயலகத்தால் தமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

மேல், வடமேல், வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களில் ஆளுநர்களையே இவ்வாறு பதவி விலகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. வடமேல் மாகாண ஆளுநர் அட்மிரல் வசந்த கரன்னாகொட, மேல் மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார் போர்ஸ் ரொஷான் குணதிலக ஆகியோர் முன்னாள் படைத்தளபதிகளாவர்.

அதேவேளை, கிழக்கு மாகாண ஆளுநரை பதவி நீக்கும் முடிவுக்கு தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. கடும் போக்குடைய சிங்கள தேசிய வாத அமைப்புகளின் கூட்டணியே தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியமாகும். அதில் முக்கியமான நபராக கிழக்கு மாகாண ஆளுநர் உள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தயாகமகே, பாலிய ரங்கே பண்டார, நவீன் திஸாநாயக்க ஆகியோரின் பெயர்கள் ஆளுநர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. (எ-44)



## கடன் மறுசீரமைப்பை வரவேற்கும் ஜப்பான்!

கொழும்பு, மே 7

இலங்கைக்கான ஒருங்கிணைந்த கடன் மறுசீரமைப்பு திட்டத்தை ஜப்பானின் நிதியமைச்சர் வரவேற்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தகவலை ஜப்பானிய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையின் இருதரப்புக் கடன் வழங்குநர்களுக்கான ஒருங்கிணைந்த கடன் மறுசீரமைப்புத் திட்டம் அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது ஜப்பான், இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை செயல்முறையின் ஆரம்பத்தை அறிவித்துள்ளன. இந்தநிலையில் எதிர்கால கடன் நெருக்கடிகளைத் தடுக்க கடன் தரவு வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியத்தை மேம்படுத்துவது அவசியம் என்று ஜப்பானிய அமைச்சர் சுனிச்சி சுசுக்கி தெரிவித்துள்ளார். (எ-இ)

## குடு அஞ்சுவின் உதவியாளர் சிக்கினார்

கொழும்பு, மே 7

பிரான்ஸில் கைதுசெய்யப்பட்டுள்ள, ரத்மலானை குடு அஞ்சுவின் உதவியாளர் ஒருவர், பண்டாரகம வெல்லமில்ல பகுதியில் வைத்துப் போதைப்பொருளுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பாணந்துறை வலான குற்றத் தடுப்புப் பிரிவால் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் துபாயில் இருந்து இயக்கப்படும் போதைப்பொருள் வர்த்தகத்தின், பிரதான வர்த்தகர் என விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்படுகின்றன. (எ-இ)

## நீர்கொழும்பில் வெள்ளம்
### ஒருவர் நீரில் மூழ்கி மாயம்

கொழும்பு, மே 7



கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்து வந்த அடைமழை காரணமாக நீர்கொழும்பு கட்டுவ, புவக்வத்த பிரதேசத்தில் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வெள்ளம் காரணமாக சிலர் தமது வீடுகளை விட்டு வெளியேறி உறவினர்களுடைய வீடுகளில் தங்கி உள்ளனர்.

பலத்த மழை பெய்யும் ஒவ்வொரு சமயத்திலும் இந்தப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் தெப்பா எல பெருக்கெடுத்து தங்களது வீடுகளுக்குள் வெள்ளம் புகுவது வழமை என பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் மாலை ஆறு முப்பது மணி அளவில் நீர்கொழும்பு பெரிய முல்லை, நூர் மத்ரஸா ஒழுங்கையில் உள்ள பாலத்திலிருந்து தவறி விழுந்து 59 வயதுடைய நபர் ஒருவர் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். முஹம்மத் சலீம் மன்சூர் என்பவரே இவ்வாறு காணாமற் போய் உள்ளார்.

இவரைத் தேடும் பணியில் பிரதேசவாசிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதுதொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். (எ-இ)

## டொலரைப் பயன்படுத்தும் முறையை செயற்படுத்துக

*சஃபாரி சங்கம் கோரிக்கை*

கொழும்பு, மே 7



சுற்றுலாத் தளங்களில் டொலர் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வகையிலான முறைமையொன்றை தயாரிக்குமாறு அகில இலங்கை சஃபாரி சங்கம் அரசாங்கத்திடம் கோரியுள்ளது

இந்த விடயம் தொடர்பாக சுற்றுலா அமைச்சு அவதானம் செலுத்தவேண்டும் எனவும் அந்தச் சங்கத்தின் தலைவர் சுமேத கீத் பண்டார தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சுற்றுலாவில் ஈடுபடும்போது தமது கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதில் மிகவும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று அகில இலங்கை சஃபாரி சங்கத்தின் தலைவர் சுமேத கீத் பண்டார குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

## ஒரு லட்சம் சிறுவர்கள் போதைக்கு அடிமை!

கொழும்பு, மே 7

இலங்கையில் சிறுவர்கள் உட்பட சுமார் ஒரு இலட்சம் பேர் தற்போது ஹெரோயின் போதை பொருளுக்கு அடிமையாகியுள்ளனர் என்று தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

ஐஸ் மற்றும் கஞ்சா பாவனைக்கு 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் அடிமையாகியுள்ளனர் என்றும் ஆபத்தான போதைப் பொருள் பாவனையால் இலங்கையில் வருடாந்தம் அனைத்து வயதுகளையும் சேர்ந்த சுமார் 40 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## மின்சாரத்துறையைச் சீரமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவி!

கொழும்பு, மே 7

நாட்டின் மின்சாரத்துறையை மறுசீரமைத்தல் மற்றும் அதன் வினைத்திறனை மேம்படுத்தல் என்பவற்றுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனை பெறப்படவுள்ளது.

மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசனை சபையின் பணிப்பாளர் உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகளுக்கிடையில் இடம்பெற்ற சந்திப்பிலேயே இந்த விடயம் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

மின்சக்தித் துறையை மறுசீரமைப்பதற்கான வேலைத்திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கள், மின் உற்பத்தி நிறுவனங்களாக மேம்படுத்தும் போது அரச தனியார் கூட்டு வர்த்தக வழிமுறைகளைப் பின்பற்றுதல் மற்றும் அவற்றுக்குத் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை வழங்குவது தொடர்பாக இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

மீளப்புதுப்பிக்கத்தக்க சக்திகளுக்கு உரிய சூழலை உருவாக்குதல் மற்றும் தனியார் துறையினரின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளல், அதற்கான வேலைத்திட்டங்களை இனங்காணல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்காக அமைச்சின் கீழ் விசேட பிரிவொன்றை நிறுவுதல் தொடர்பில் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் திட்டங்கள் உள்ளிட்ட ஏனைய திட்டங்களுக்கான நிதி ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் தொடர்பிலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர் அதிகாரிகளிடம் ஒத்துழைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



சரவணையைப் பிறப்பிடமாகவும் வரணி, கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட

## அமரர் உயர்திரு. பரமலிங்கம் சோதிலிங்கம்

திதி:-அபரபட்ச துதியை

எங்கள் அன்புத் தெய்வம் அப்பா!

நீங்கள் மறைந்து ஓராண்டுகள் ஆகிவிட்டது. ஓராண்டல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் உங்கள் நினைவுகள் ஒவ்வொன்றும் எங்கள் மனதைவிட்டு ஒருபோதும் அகலாது

அப்பா இன்றும் நீங்கள் ஊரில் நிற்பது போன்றும் திரும்பி வர மாட்டீர் களா? என்று எங்கள் மனம் அங்கலாய்க்கிறது. உங்களின் இந்த சடுதி யான இழப்பை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இருந்தும் ஒரு கணம் நீங்கள் இல்லை என்பதை மறந்து, எங்கள் மனம் உங்களைத் தேடிக் கொண்டே இருக்கின்றது.

அப்பா உங்களின் அன்பு, பாசம், புன்சிரிப்பு எல்லாம் அடிக்கடி எங்கள் கண்முன்னே வந்து இன்னும் நீங்கள் எங்களுடன் வாழ்ந்து கொண்டி ருப்பதாகவே உணருகின்றோம். அப்பா நாங்கள் உங்களுடன் வாழ்ந்த காலங்களையும் நீங்கள் விட்டுச் சென்ற நினைவுகளையும் ஒருபோதும் எங்களால் மறக்க முடியாது. நீங்கள் எங்கள் ஒவ்வொருவரினதும் உள்ளத் தில் குடியிருக்கும் கோயில் அப்பா. இதைவிட உங்களை உயர்வாக நினைக்க வேறு வார்த்தை இல்லை.

நீங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைத்து இன்றும் நாம் உங்களைப் பூசித்துக் கொண்டிருக்கின்றோம்.

உங்களின் ஆத்மா பேரின்பத்தை அடைய எல்லாம் வல்ல இறைவனை யும் நாங்கள் வணங்கும் எல்லா குல தெய்வங்களையும் வேண்டி நிற் கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நினைவுகளுடன்.......

தோற்றம் 20.05.1950 | மறைவு 18.04.2022

**மனைவி, பிள்ளைகள்.**

கலாநிதி (மனைவி)- +1647 5336 564

(CS/24789)AH-1

# மரண அறிவித்தல்



மலர்வு 13 . 11 . 1950

உதிர்வு 04 . 05 . 2023

## திருமதி விக்ரர் சேவியர் யசிந்தா

யாழ்ப்பாணம், குருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்ரர் சேவியர் யசிந்தா கடந்த (04.05.2023) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கபிரியேல் - எலிசபெத் தம்பதிகளின் மருமகளும், விக்ரர் சேவியர் (குணம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அமிர்தநாதர் (செல்வசிங்கம்) மற்றும் பத்மா (தங்கரோஸ்), சிசிலியா (சின்னரோஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜோய்சி (ஜெனா), ஜீன்டினஸ்கர் (குவைஸ்), டீன்பிளட்சர் (சுவிஸ்), ரெம்ஸியாழினி (சிபிலா), எடின்றிக்ஸ்மன் (வினிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஞானம், ரூத், செல்வி, முகுந்தன், வினையா ஆகியோரின் மாமியாரும், இலக்கியா, மிதுனன், அதிசியா, கபிஸா, அடேல், ஆருதி, ஆதிரன், ஆதியன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (08.05.2023) திங்கட்கிழமை யா/ மரியன்னை பேராலயத்தில் பிற்பகல் 3. மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப் பட்டு, கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல. 31, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம்.**

(CS 50331) AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 06 . 11 . 1948

மறைவு 05 . 05 . 2023

## இரத்தினசிங்கம் மனோன்மணிதேவி

சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினசிங்கம் மனோன்மணிதேவி அவர்கள் நேற்றுமுன்தினம் (05.05.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - லட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இரத்தினசிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ் சென்ற சற்குணராசா மற்றும் துரைராஜசிங்கம், காலஞ்சென்ற உதயகுமார் ஆகியோரின் சகோதரியும், சிவரூபன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவநந்தினி மற்றும் சிவதாஸ், சிவாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபாயினி (பிரான்ஸ்), லஜிதா (ஆசிரியை-யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்), மோகனா ஆகியோரின் மாமியாரும், லக்ஸ்மன் (பிரான்ஸ்), லக்சிகா (பிரான்ஸ்), கவினா, ஜானுயன், பிரவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.05.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**100/9, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

(CS 247788) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 இலங்கையர்கள் தமிழகத்தில் தஞ்சம்

இராமநாதபுரம், மே 7

**தொடரும் பொருளாதார நெருக்கடியால் மேலும் 10 இலங்கைத் தமிழர்கள் நேற்றுத் தமிழகம் சென்றுள்ளனர்.**

நேற்றுக் காலை தனுஷ்கோடி அடுத்த மூன்றாம் மணல் திட்டில் வந்திறங்கியவர்களை தமிழக மரைன் பொலிஸார் படகில் அரிச்சல்முனை கடற்கரைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக மக்கள் உணவுப் பொருள்கள், அத்தியாவசியத் தேவைகளைப் பெறுவதில் கடும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். அதையடுத்துக் கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் இலங்கையில் இருந்து 244 இலங்கைத் தமிழர்கள் தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.


இந்தநிலையில் முல்லைத்தீவு மாவட்டம் 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இரண்டு ஆண்கள், நான்கு பெண்கள், மூன்று ஆண் குழந்தை ஒரு பெண் குழந்தை உட்பட 3 குடும்பத்தினர் முல்லைத் தீவுக் கடற்கரையில் இருந்து நேற்றுமுன்தினம் இரவு சுமார் 8 மணியளவில் பைபர் படகில் புறப்பட்டு நேற்று அதிகாலை தனுஷ் கோடி அடுத்துள்ள முதல் மணல் திட்டில் பகுதியில் வந்திறங்கி யுள்ளனர்.

இலங்கைத் தமிழர்கள் மணல் திட்டில் காத்திருப்பதைக் கண்ட அந்தப் பகுதியில் மீன் பிடித்த நாட்டுப்படகு மீனவர்கள் மரைன் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளனர்.

தகவலறிந்த இராமேஸ்வரம் மரைன் பொலிஸார் ஒன்றாம் மணல் திட்டுக்கு படகில் சென்று அங்கு காத்திருந்த இலங்கைத் தமிழர்களைமீட்டு மண்டபம்மரைன் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர். பாதுகாப்பு வட்டார அதிகாரிகளின் விசாரணைக்குப் பின்னர் 10 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர். பொருளாதார நெருக்கடி காரணமாக தமிழகத்துக்கு இலங்கையிலிருந்து வந்த அகதிகளின் எண்ணிக்கை 254 ஆக உயர்ந்துள்ளது. (எ-இ)

## அரியாலை விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், மே 7



அரியாலையில் நடந்து விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். அரியாலை. பூம்புகாரைச் சேர்ந்த அற்புதலிங்கம் சுதர்சன் (வயது-38) என்பவரே உயிரிழந்துள்ளார். அவரது மனைவி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அரியாலைப் பகுதியில் கணவனும், மனைவியும் மோட்டார்சைக்கிளில் பயணித்தபோது எதிர்த் திசையில் வேகமாக வந்த ஹை-ஏஸ் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. ஹை-ஏஸ் வாகனத்துக்கு முன்பாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் வீதியின் வலப்பக்கம் திருப்புவதற்காக நிறுத்தப்பட்டபோது, கட்டுப்பாட்டை இழந்து எதிரே பயணித்த மோட்டார்சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். விபத்துத் தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (எ-26)

## காப்புறுதிப் பணத்துக்காக மனைவியைக் கொன்ற கணவன்

கொழும்பு, மே 7

எல்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்த சம்பவம் திட்டமிட்ட கொலை என பிடிகல பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

மனைவியின் காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்காகவே கணவர் இந்தக் கொலையைச் செய்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிடிகல மானம்பிட, தல்கஸ்வல நயாகம பிரதேச சபைக்கு அருகில் வீதியோரம் நின்றிருந்த பெண் ஒருவர் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் இந்தச் சம்பவம் திட்டமிட்ட கொலை என்று கண்டறிந்ததை அடுத்து, பெண்ணின் கணவரைக் கைது செய்துள்ளனர்.

உயிரிழந்த பெண்ணின் (வயது-40) எனவும் அவரது கணவரின் (வயது -25) எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## பஸிலுக்கு முன்னுரிமை பெரமுனவில் குழப்பம்!

கொழும்பு, மே 7

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மே தினக் கூட்டத்தில் பஸில் ராஜபக்சவுக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டதையடுத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவரது படம் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்சவின் படத்துடன் மேடையின் பிரதான பதாகையில் காட்டப்பட்டமையை அடுத்தே இந்த எதிர்ப்பு எழுந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்சவுடன் இணைத்து அவரின் படம் காட்டப்படுகின்றமையானது, கட்சியின் செல்வாக்கைக் குறைத்து விடும் என்று கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னதாக, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் படம் மஹிந்த ராஜபக்சவுடன் இணைத்து பதாகையில் விளம்பரப்படுத்தப்பட்டு வந்தது. கோத்தாபய ராஜபக்ச கடந்த ஆண்டு ஜனாதிபதி பதவியில் இருந்து விலகியதைத் தொடர்ந்து அவரின் படம் நீக்கப்பட்டது.

இதேவேளை- அண்மைக் காலமாக பஸில் ராஜபக்சவை அரசியலில் மீண்டும் முன்னணிக்கு கொண்டு வரும் முயற்சிகளில் பொதுஜன பெரமுனவின் சிலர் செயற்பட்டு வருகின்றமை தொடர்பிலும் கட்சிக்குள் எதிர்ப்புக்கள் வலுப்பெற்று வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## ஐ.தே.கவின் கூட்டம் வவுனியாவில்

வவுனியா, மே 7

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் பாலித ரங்கே பண்டார தலைமையில் வவுனியாவில் விசேட கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. கட்சியின் அடுத்த கட்டத் திட்டங்கள் தொடர்பாகவும், மாவட்ட மட்டக் கட்டமைப்பைப் பலப்படுத்துவது தொடர்பாகவும், கட்சியின் எதிர்கால வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-18)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 7

உலகப் பெருமஞ்சம் அமைத்த பெரிய சந்நியாசிரியாரின் 106 ஆம் ஆண்டு நினைவாக 'இறையருட் சித்தினால் செயற்கரிய சேவையை நிலைநாட்டிய சான்றோர்கள்' நூல் வெளியீட்டு நிகழ்வு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மஞ்சத்தடி அருணகிரிநாதன சிவசுப்பிரமணியர் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இணுவில் சைவத்திருநெறிக்கழகத் தலைவர் கெ.தவராசா தலைமையில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் முன்னிலையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண நீர்ப்பாசன முன்னாள் பணிப்பாளர் எந்திரி வே.பிரேமகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் நிகழ்த்தவுள்ளார். (ச)

## புகைக்குண்டு வீழ்ந்து வீடு சேதம்

யாழ்ப்பாணம், மே 7

வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய இந்திரவிழா நேற்று முன்தினம் வானில் பறக்கவிடப்பட்ட புகைக் குண்டு வீடு ஒன்றின் மீது வீழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வானில் பறக்கவிடப்பட்ட புகைக் குண்டு எரிந்த நிலையில் பருத்தித்துறை தும்பளை பகுதியில் உள்ள வீடொன்றின் மேற்தட்டில் நேற்று அதிகாலை வீழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-26)



## மூன்று நாள்களில் மழை அதிகரிக்கும்

கொழும்பு, மே 7



தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை மேலும் அதிகரிக்கக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதனால் எதிர்வரும் மூன்று நாள்களில் மழை வீழ்ச்சி மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் மேல், சப்ரகமுவ, வடமேற்கு மற்றும் தெற்கு உள்ளிட்ட பல பிரதேசங்களில் தற்போது மழையுடன் கூடிய காலநிலை நிலவுகிறது. கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகபட்சமாக நீர்கொழும்பில் 31.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி வளாகத்தை தனிப் பல்கலையாக்குவேன்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தை தனிப் பல்கலைக்கழகமாக மாற்றுவேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி - பொன்னகர் கிராமத்தில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே இவ்வாறு கூறினார்.

கிளிநொச்சி வளாகம் புலிகளின் பயன்பாட்டில் இருந்தது. இராணுவம் கிளிநொச்சியை விடுவித்த பின்னர் தமது முகாமாக மாற்றிக்கொண்டனர். அதன் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுடன் பேச்சு நடத்தி அதனை பல்கலைக்கழகத்துக்கு பெற்றுக்கொடுத்துள்ளோம்.

அங்கு நான்கைந்து வளாகங்கள் வந்துள்ளன. கிளிநொச்சி வளாகத்தை கிளிநொச்சிப் பல்கலைக்கழகமாக விரைவில் மாற்றித் தருவோம் - என்றார். (அ-ஒ,இ)

### சிங்கள - ...

உறுப்பினருமான இரா.சம்பந்தன் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்புக்கள் இந்த வாரம் நடைபெறவுள்ள நிலையில், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் திடீரென இரா.சம்பந்தனை நேரில் சென்று நேற்றுமுன்தினம் சந்தித்தார். இது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'யாழ்ப்பாணம் - தையிட்டியில் தமிழ் மக்களின் காணியில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரை அமைக்கப்பட்டுள்ளதை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இந்தச் சட்டவிரோத நடவடிக்கைவடக்கு-கிழக்கில்நீண்டகாலமாகத் தொடர்கின்றது. தமிழ் மக்களின் காணிகளில் சட்டவிரோதமாகப் பௌத்த விகாரைகள் அமைக்கப்படுவது மட்டுமன்றி சில இடங்களில் சைவக்கோயில்களும் தாக்கப்பட்டு வருவதுடன் அழிக்கப்பட்டும் வருகின்றன. கூடியளவுக்கு இந்தச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு நாங்கள் முயற்சி எடுத்து வந்திருக்கின்றோம்; தொடர்ந்தும் எடுப்போம்.

இந்த நடவடிக்கைகள் முடிவுக்கு வர வேண்டுமெனில் ஒரு நியாயமான நிரந்தரமான தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய அதிகாரப்பகிர்வுடன் அரசியல் தீர்வு காணப்படவேண்டும். அதற்காக எம்மாலான அனைத்துப் பங்களிப்புக்களையும் வழங்கி வருகின்றோம். அரசியல் தீர்வு விரைந்து காணப்பட வேண்டும். ஏனெனில் இந்த நாடு மீண்டெழ வேண்டுமெனில் அரசியல் தீர்வு கட்டாயம்வேண்டும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஜனாதிபதியை நாம் சந்திக்கவுள்ளோம். அதன்போது இது தொடர்பில் பேசுவோம். நேற்று (நேற்றுமுன்தினம்) இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என்னை வந்து சந்தித்திருந்தார். அவரிடமும் இந்த விடயம் தொடர்பில் பேசினேன்.

அதேவேளை, ஏனைய சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுடனும் வடக்கு - கிழக்கில்தொடரும்சிங்கள-பௌத்தமயமாக்கல் மற்றும் அரசியல் தீர்வு விரைந்து காணப்படவேண்டும் என்பவை தொடர்பில் பேசி வருகின்றோம் - என்றார். (அ-ஒ,5,22)

### தையிட்டி விகாரையை...

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு அப்போது இராணுவத் தளபதியாக இருந்த சவேந்திர சில்வா 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30ஆம் திகதி அடிக்கல் நட்டிருந்தார். இந்த விகாரைக்கான கலசம் வைக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றிருந்தது. இதனையடுத்து தனியார் காணிகளை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள மேற்படி விகாரையை அகற்றி அந்தக் காணிகளை விடுவிக்குமாறுகோரி மக்களால் 3 நாள் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் சவேந்திர சில்வாவிடம் கேள்வி எழுப்பியதற்கே மேற்கண்டவாறு அவர் பதிலளித்தார்.

'தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள விகாரை அரசின் முழுமையான அனுமதியுடன், இராணுவத்தினரின் வழிபாட்டுக்காக அமைக்கப்பட்டது. இனவாத, மதவாதக் கண்ணோட்டத்துடன் இதனை நோக்குவதை தமிழ்க் கட்சிகளும் அவர்களது ஆதரவாளர்களும் நிறுத்திக் கொள்ளவேண்டும். இந்த விகாரை சட்டவிரோதமானது அல்ல. அமைக்கப்பட்ட இந்த விகாரை எந்தக் காரணத்துக்காகவும் அகற்றப்படாது' என்று சவேந்திர சில்வா பதிலளித்தார். (அ-ஒ,5,22)

### வங்காள...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு பாதிப்பு இல்லை என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வங்காள விரிகுடாவில் இலங்கை தென்கிழக்கே புதிய காற்றமுத்த தாழ்வுநிலை இன்று உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இது வட கிழக்குத் திசை நோக்கி நகர்ந்து ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலமாக (சிலவேளைகளில் புயலாகவும் மாற்றம் பெறலாம். அவ்வாறு புயலாக மாற்றம் பெற்றால் 'மொச்சா' என்று பெயர் சூட்டப்படும்) நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை இரவு அல்லது 10ஆம் திகதி மியான்மருக்கும் பங்களாதேஷுக்கும் இடையில் கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் தோற்றமும் நகர்வுப் பாதையும் மத்திய வங்காள விரிகுடாவில் இருப்பதானால் இலங்கைக்கு குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு நேரடியாக எத்தகைய பாதிப்பும் ஏற்படாது. எனினும் இன்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரையும் அவ்வப்பொழுது மழை கிடைக்கும். அதேநேரம் இன்று தொடக்கம் எதிர்வரும் 12ஆம் திகதி வரையில் வடக்கு - கிழக்கு கடற் பிராந்தியம் கொந்தளிப்பாக காணப்படுவதால் மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதில் அவதானம் தேவை - என்றார். (அ-ஒ,5)

(தொடர்புடைய செய்தி பக்:14)

### வெடுக்குநாறி...

மலையின் அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட்ட அவர் மலையில் சேதங்களை ஏற்படுத்தியமை தொடர்பாக மேல்நீதிமன்றை நாடவுள்ளதாக தெரிவித்ததாக ஆலயநிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இதேவேளை - ஆலயத்தில் நேற்று இந்து சமயப்பேரவையின் ஏற்பாட்டில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றமையால் ஆலயநிர்வாகத்தினரும் அங்கு கூடியிருந்தனர்.

இதன்போது பிரதான காட்டுப்பாதையூடாக ஆலயத்துக்கு வருகைதருவோர் உழவியந்திரத்தைப் பயன்படுத்தி உள்வர வேண்டாம் என பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், மழை காரணமாக ஆலய வளாகத்தில் போடப்பட்ட தற்காலிக கொட்டகையையும் உடன் அகற்றுமாறு நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தினர். (அ-ஒ,110)

(தொடர்புடைய செய்தி பக்:2)

### 3 மணி...

அவதான நிலையத்தின் கடமைநேர அதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

இதேவேளை - நேற்றுமுன்தினம் காலை 8.30 மணிமுதல் நேற்றுக் காலை 8.30 மணி வரையிலான 24 மணிநேரத்தில், அச்சுவேலியில் 8 மில்லி மீற்றரும், பருத்தித்துறையில் 0.6 மில்லி மீற்றரும், கிளிநொச்சியில் 0.9 மில்லி மீற்றரும் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. (அ-ஒ,23)

### விகாரை...

போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. தமிழ்த் தேசியப் பேரவை இதற்கான அழைப்பை விடுத்துள்ளது. இது தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையில், 'கந்தரோடையின் வரலாற்றை சிங்கள - பௌத்த வரலாறாகத் திரிபுபடுத்தும் நோக்குடன் திட்டமிட்ட விகாரை அமைப்பதற்கான முற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சிங்கள - பௌத்த பேரினாவாத அரசின் பூரண அனுசரணையுடன் தமிழ்த் தேசத்தின் இருப்பை அழித்து வரலாற்றைத் திரிபுபடுத்தும் நோக்கில் முன்னெடுக்கப்படும் கட்டமைக்கப்பட்ட மரபுரிமைசார் இனவழிப்பு செயற்பாட்டுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெறவுள்ளது. தமிழர் வாழ்வுரிமை மையம் மற்றும் கந்தரோடை சிவில் சமூகச்செயற்பாட்டாளர்களுடன் இணைந்து இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு கந்தரோடையில் முன்னெடுக்கும் தமிழ்த் தேசியப் பேரவை முன்னெடுக்கும் இப்போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய உணர்வாளர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்' - என்றுள்ளது. (அ-ஒ,26,66,125)

### தையிட்டி விகாரை...

பக்ச தெரிவித்தார். தையிட்டியில் தமிழ் மக்களின் காணிகளை ஆக்கிரமித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றுமாறு கோரி முன்னெடுக்கப்பட்ட தொடர் போராட்டம் தொடர்பில் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

'எடுத்ததெற்கெல்லாம் இனவாத, மதவாத கருத்துக்களை கக்குவதை தமிழ்க் கட்சிகள் உடன் நிறுத்தவேண்டும். அமைதி வழியில் தமது வாழ்க்கையைக் கொண்டு செல்லும் தமிழ் மக்களை போராட்டம் என்ற போர்வையில் அவர்களை வன்முறைக்கு இட்டுச் செல்வதுதான் தமிழ்க் கட்சிகளின் இலக்காக இருக்கின்றது. அவர்களின் அரசியல் சித்துவிளையாட்டுக்களுக்காக தமிழ் மக்களைப் பலிக்கடாவாக்காதீர்கள். தையிட்டியில் அமைந்துள்ள திஸ்ஸ விகாரை உரிய அனுமதிகளைப்பெற்று அமைக்கப்பட்டது. அதனை அகற்றக் கோருவது எந்த வகையிலும் நியாயமானதில்லை' என்றார் மஹிந்த. (அ-ஒ,5,22)

### தமிழ் அரசு,...

கிழமை தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 11, 12, 13ஆம் திகதிகளில் பேச்சு நடத்தவுள்ளார். அதற்கு முன்னோடியாக இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

'கடந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து அழைப்பு வந்தது. அவர்தான் எம்மை இந்தப் பேச்சுக்கு அழைத்துள்ளார். தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு வந்ததும் சந்திப்பதாகக் கூறினார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்தச் சந்திப்பு செவ்வாய்க்கிழமை பி.ப. 3.30 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். (அ-ஒ,5)

### ரணிலுடனான...

அழைக்கவேண்டும். அவ்வாறு அழைக்காவிட்டால் அந்தப் பேச்சை புறக்கணிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு எடுத்துள்ளதாக அந்தக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையிலான சந்திப்பு யாழ். ரில்கோ விடுதியில் நேற்று மாலை நடைபெற்றது. அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் 15பேர் இதில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன், கோவிந்தன் கருணாகரம் மற்றும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், என்.சிறீகாந்தா, சுரேஷ் பிரேமச்சந்திரன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களான இரா.துரைரட்ணம், பா.கஜதீபன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், செயலர் துளசி புளொட்டின் சிரேஷ்ட துணைத் தலைவர் ஆர்.இராகவன், ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன் ஆகியோரே இதில் கலந்து கொண்டனர்.

'இந்தக் கூட்டத்தில் கட்சியின் யாப்பு மற்றும் மாவட்ட மட்ட செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. யாப்பில் சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்த கூட்டத்தில் அது மீண்டும் சமர்ப்பிக்கப்படும். அத்துடன், எதிர்வரும் 11, 12, 13 ஆம் திகதிகளில் வடக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்துள்ளார். இதன்போது அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் பேசவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பேச்சுக்கு கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட வேண்டும். அவ்வாறு அழைக்கப்படாவிட்டால் பேச்சுக்களில் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானிக்கப்பட்டது' என சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டார். (அ-ஒ,5)

### கீரிச்...

மற்றும் மத்திய தர அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரிசி ஆலை உரிமையாளர்கள், அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலையை விடவும், அதிக விலைக்கு கீரிச் சம்பா அரிசியை விற்பனை செய்வதாக அந்த சங்கத்தன் தலைவர் டீ.கே. ரஞ்சித் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக, மார்ச் மாத இறுதி வாரத்திலிருந்து மே மாத முதல் வாரத்துக்கு இடைப்பட்ட காலத்தில் கீரிச் சம்பா அரிசியின் விலை, 25 முதல் 30 ரூபாவுக்கு இடைப்பட்ட அளவில் அதிகரித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல மணிக்கூட்டு விற்பனை காட்சியறைக்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை.
(கணினி அறிவுடையோர் விரும்பத்தக்கது)
**மற்றும் மணிக்கூடு திருத்துநர் தேவை.**

(CS24776)AH-1

**021 222 6807, 070 304 3633**

## உடனடி வேலைவாய்ப்பு

**APSS International** பிரபல கல்வி நிறுவனத்திற்கு

- Receptionist (வரவேற்பாளர்)
- Office Assistant
- Student Administrator
- IELTS Lecturer
- Spoken English Lecturer
- Spoken Sinhala Lecturer

உங்கள் விண்ணப்பங்களை 7 நாள்களுக்குள் கீழ்க்காணும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

Dr.Chalvan's Academy 071 520 6642,
chelvanbose@hotmail.com 021 224 4666

## காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒரு பரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக்காணிகள் விற்பனைக்குண்டு

- தங்குவிடுதி மற்றும் வீடமைப்பிற்கு உகந்தது
- மொத்தம் ஆறு பரப்பு உண்டு.

**077 735 4470**

## முக்கிய அறிவித்தல்

ஒட்டகப்புலம், வயாவிளான் பகுதியில் அண்மையில் உயர் பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்ட காணிகளை காணியின் உரிமையாளர்களுக்கு தெரியாமல் மோசடியாக ஆவணங்களைத் தயாரித்து ஒரு கும்பல் தமது காணிகள் போல விற்று வருகின்றனர். இது தொடர்பாக அண்மையில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் தமது முகநூலில் ஒரு விழிப்புணர்வுச் செய்தியை வெளியிட்டிருந்தது. தயவு செய்து ஒட்டகப்புலம் பகுதியில் காணிகளை வாங்க விரும்புபவர்கள் விழிப்பாக இருக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு**
**காணி விவகாரக் குழு**
**ஒட்டகப்புலம் வயாவிளான்**
**மின்னஞ்சல் : lacoddahappulam@gmail.com**

(CS 50323) (3/6)

## வேலையாட்கள் தேவை

- **கணக்காளர்**
- **கணக்குப்பதிவாளர்**

ஆண்கள் மட்டும்

**076 940 8589**

## வேலையாட்கள் தேவை

**199, கே.கே.எஸ் வீதியில்**
அமைந்துள்ள
**நிஸ்மாஸ் டெக்ஸ்**
(இருபாலாரும்)
உடனடியாகத் தேவை.
சம்பளம் - 25000/- மேல்

**077 919 5439**

## Efly Jaffna Pvt LTD

**Vacant Wanted**

Air Line Ticketing Exprience
1) Ticketing Basic Experience
2) English Skills
3) Spoken English AS Well

**Contact No. Watsapp**
**004179 1060 606**
**E-mail Address-info@efly.ch**

## காணி விற்பனைக்கு

மறவன்புலோ மத்தியில் வள்ளக்குளம் பிள்ளையார் வீதிக்கு அருகில் 15 3/4 பரப்பு மேட்டு நிலம் விற்பனைக்குண்டு.

**076 994 9854**

## விற்பனைக்கு

* இருபாலை, பருத்தித்துறை வீதி முகப்போடு 4 பரப்புக் காணியும்
* தெல்லிப்பழையில் 2 1/2 பரப்புக் காணியுடன் வீடும்
* நல்லூர் தனங்காவில் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 1 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**077 221 6683**

## வீடு விற்பனைக்கு

காலி வீதி, வெள்ளவத்தை 37ஆவது முங்கை 2 Bedroom, 2 Bathroom, A/C Hall, மூன்றுபக்க Pantry Cupboard, Kitchen Carpark Apartment உடன் விற்பனைக்கு.

**077 618 4700**

## காணி விற்பனைக்கு

**A9** வீதிக்கு அருகில் அமைந்துள்ள பனிக்கர் நீராவி, புளியங்குளத்தில் இரண்டு ஏக்கர் கொண்ட உறுதிக் காணிகள் விற்பனைக்கு உண்டு.

- ✓ எரிபொருள் நிரப்பு நிலையம் மற்றும் களஞ்சியசாலை அமைப்பதற்கு உகந்தது.
- ✓ மொத்தமாக எட்டு ஏக்கர் உண்டு.
- ✓ மாங்கன்றுகள் மற்றும் தென்னங்கன்றுகள் நடப்பட்டுள்ளது.

(CS/50227)AH-1

**077 735 4470**

## மு/ மல்லாவி மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பழைய மாணவ ( தாய்ச்) சங்க ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2023

**காலம் :- 21.05.2023 (ஞாயிற்றுக்கிழமை)**
**நேரம் :- முற்பகல் 10.00 மணி**
**இடம் :- கல்லூரி பிரதான மண்டபம்.**

அனைத்துப் பழைய மாணவ தாய்ச் சங்க உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்,**
**பழைய மாணவர் (தாய்ச்) சங்கம்**
**மு/மல்லாவி மத்திய கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**

## காணி விற்பனைக்கு

சண்டிலிப்பாயில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

(CS24384)(J-1) **070 701 3060**

## வேலையாள் தேவை

மருதனார் மடத்தில் இயங்கிவரும் கடை ஒன்றுக்கு பெண் வேலையாள் தேவை.

**076 287 8157** (CS/50332) AH-1

## ENGLISH CLASSES

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**
ஆர்வமுள்ள சகலருக்கும்
**From Grade 7 to Graduates**
தொழில்புரிபவர்களுக்குமானது.

K.Ganesh B.A **077 766 8725**

## காணி விற்பனைக்கு

கச்சேரியடியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. 4 பக்க சுற்று மதில், கிணறு உண்டு. A9 றோட்டில் இருந்து 50m தூரம்.

தொடர்பு: **077 358 2704**

## வாடகைக்கு

உரும்பிராய் கிழக்கு, கோப்பாய் வீதியில் பாரதி கடைக்கு அருகாமையில் இரண்டு அறைகளுடன் கூடிய அனெக்ஸ் பகுதி வாடகைக்கு உள்ளது.

**075 860 7505**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **கைதடி** A-9 **பிரதான வீதியுடன்** 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும், 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 04 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 24 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

(CS 24791)A-1

## APSS INTERNATIONAL (COLLEGE OF TECHNOLOGICAL STUDIES)

IELTS | COMPUTER HARDWARE ENGINEERING | CCTV TECHNOLOGY | NETWORK ADMINISTRATION | ELECTRICAL ENGINEERING
ELECTRONIC ENGINEERING | TELECOMMUNICATION SYSTEM ENGINEERING | MOBILE REPAIRING | INFORMATION TECHNOLOGY | ICT CLASSES

பயிற்சி நெறிகள் சிங்களமொழி, ஆங்கிலமொழி

உயர்கல்வி மேற்கொள்ளவோ, தொழில்வாய்ப்பு பெற்றுக்கொள்ளவோ சிங்களம், ஆங்கிலம் கற்பது முக்கியமானது.
• குழு வகுப்புக்கள் • தனிப்பட்ட வகுப்புக்கள் • வார/வார இறுதி வகுப்புகள் • 24hrs CCTV கண்காணிப்பு • பெற்றோருடன் நேரடித்தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.05.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# சஞ்சீவி

Registered as a Newspaper

மலை : 33 வள்ளுவர் ஆண்டு : 2053 சித்திரை 24 ஞாயிற்றுக்கிழமை (07.05.2023) சிகரம் : 145


கனவில் வந்தவர்.....!

கனவில் வந்தவர்
காணிகளைப் பிடி என்றார்
காணிக்கை ஆக்கினோமே!
கனவிலே வந்தவர்
அரச மரம் எங்கும்
உரச ஆசையென்றார்
அடி மரம் தேடியே
அமர்த்துகின்றோமே...! -விக்கிரமன்

# வேடுவர்களால் தமிழர்களுக்கு விடிவு கிடைக்குமா?



○ ந.பரமேஸ்வரன்

ஆட்டைக்கடிச்சு, மாட்டைக்கடிச்சு என்று பொது வழக்கில் மக்கள் பேச்சு வழக்கில் பேசிக்கொள்வதுண்டு. இப்படியான ஒரு விடயம் தற்போது இலங்கையில் அரங்கேறிக்கொண்டிருக்கிறது. வேடுவத் தலைவர் உருவருகே வன்னிலா அத்தோ மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

"மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை ரம்புக்கன் ஓயா பிரதேசத்தில் காடழிப்பில் ஈடுபட்டு வருகின்றது. இந்தப்பிரதேசத்தில் காடுகள் அழிக்கப்பட்டு சோளப்பயிர்ச்செய்கைக்காக தனியார் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. இதனால் எமது மரபுவழி பாரம்பரியப் பிரதேசங்கள் அழிக்கப்படுகின்றன. இதனை உடனடியாக நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று வேடுவ தலைவர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

> வேடுவ தலைவர் தமிழர்களைப்போல் பயந்து ஓடி ஒளிக்கவில்லை . ஸ்ரீலங்கா அரசாங்கத்தை சவாலுக்குட்படுத்தியிருக்கிறார். தமிழர்களைப்போல் உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் என்று வெளிக்கிடவில்லை. ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் எமது பாரம்பரிய பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்காதீர்கள் என்று கெஞ்சவுமில்லை. இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையை சட்டரீதியாக சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

வேடுவத் தலைவரின் மனு எதிர்வரும் செப்ரெம்பர் எட்டாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது மகாவலி நீரை வடக்கே கொண்டு வருவதாகவே படம் காட்டப்பட்டது.வடபகுதி விவசாயி களும் தமக்கு விவசாயத்துக்குத் தேவையான நீர் கிடைக்கும் எனக் கனவு கண்டனர். கனேடிய அரசாங்கமும் வடபகுதி மக்களுக்கு இதனால் பெரும் நன்மை ஏற்படப்போகிறது என நினைத்துக்கொண்டு 1.146.000 டொலரை 'யூ.என்.டீ.பி' ஊடாக அள்ளி வழங்கியிருந்தது. ஆனால் நடைபெற்றதோ தமிழர்களின் பாரம்பரிய பூர்வீக நிலங்களில் சிங்களக் குடியேற்றம் தான். தமிழர்களின் பாரம்பரிய பூர்வீக நிலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு , சிங்களக் குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. தமது பாரம்பரிய பூர்வீக நிலங்களில் இருந்து தமிழர்கள் பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். அடிமாட்டு விலைக்கு தமது காணிகளை முஸ்லிம்களுக்கோ ,சிங்களவர்களுக்கோ விற்று விட்டு தமது பாரம்பரிய பூர்வீக நிலங்களில் இருந்து தமிழர்கள் வெளியேறினர்.

தமிழர்களின் பாரம்பரிய பூர்வீக நிலங்களை ஆக்கிரமித்து, அவற்றைச் சிங்களப் பிரதேசங்களாக மாற்றிய இலங்கை அரச இயந்திரம், இப்போது வேடுவர்கள் மீதும் தன் கைவரிசையைக் காட்டத்தொடங்கியிருக்கிறது.

வேடுவத் தலைவர் தமிழர்களைப்போல் பயந்து ஓடி ஒளிக்கவில்லை . ஸ்ரீலங்கா அரசாங்கத்தை சவாலுக்குட்படுத்தியிருக்கிறார். தமிழர்களைப்போல் உண்ணாவிரதம், சத்தியாக்கிரகம் என்று வெளிக்கிடவில்லை. ஸ்ரீலங்கா அரசாங்கத்திடம் எமது பாரம்பரிய பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்காதீர்கள் என்று கெஞ்சவுமில்லை. இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையை சட்டரீதியாக சவாலுக்குட்படுத்தியுள்ளார்.

இந்த வழக்கில் வேடர்களுக்குச் சார்பாகவே தீர்ப்பு வழங்கப்படும் என்று இப்போதே சொல்லலாம். தமிழர்களுடன் விளையாடிய மாதிரி வேடர்களுடன் விளையாடமுடியாது. இலங்கை நீதிமன்றத்தில் வேடர்களுக்கு சாதகமான தீர்ப்புக் கிடைக்காவிட்டால் வேடர்கள் ஐ.நா.வில் முறையிடலாம்.உலகளாவிய ரீதியில் ஆதிவாசிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவதால் ஆதிவாசிகளும் அவர்களின் வசிப்பிடங்களும் பாதுகாக்கப்பட வேண்டுமென ஐ.நா.தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. வேடுவத் தலைவர் இலங்கை நீதிமன்றத்தில் சாதகமான பதில் கிடைக்காவிட்டால் ஐ.நா.வில் முறையிட்டால், நிச்சயம் சாதகமான தீர்வு கிடைக்கும்.

இங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயம், வேடுவத் தலைவர் தனது மனுவில் பாவித்துள்ள " எமது மரபுவழிப் பூர்வீக பிரதேசம்" என்ற சொற்பிரயோகம் தான். ஆங்கிலத்தில் Traditional Home Land என்று இதனைச் சொல்வர்.தமிழ்ப் போராளி இயக்கங்களும் திம்பு பேச்சுவார்த்தையில் இந்தச் சொற்றொடரைத்தான் பாவித்தன. ஆனால் ஸ்ரீலங்கா அரசு 'மரபு வழிப் பூர்வீக பிரதேசம் என்று ஒன்று இல்லை.யாரும் எப்பகுதியிலும் வசிக்கலாம்' என்று கூறி தமிழ் இயக்கங்களின் கோரிக்கையை நிராகரித்து விட்டது. ஆனால், தமிழர்களுக்கு கூறியது போன்று வேடர்களுக்குக் கூற முடியாது.வேடர்களைப்பார்த்து 'நீங்கள் கறுவாத்தோட்டத்தில் வந்து வசிக்கலாம் 'என்று கூற முடியாது. 'எமது நிலம் எமக்கு வேண்டும்' என தமிழ்த் தேசியவாதிகள் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டங்களின் போது கோஷமிடுவது வழக்கம். இதே கோஷத்தைத்தான் எமது மூதாதையர்களும் இப்போது எழுப்புகின்றனர். (இலங்கையின் பூர்வீகக்குடிகள் வேடர்களே. வேடர்களின் மொழி தமிழ் மொழியே என ஆங்கில வரலாற்றாசிரியர்கள் சிலர் எழுதியுள்ளனர். ஆதாரம்: Twentieth Century Impressions of Ceylon.J.R.Arnold. )

சட்டத்துறையில் ஒரு பொதுவான விடயம் காணப்படுகிறது. உலகின் எந்த மூலையிலும் வழங்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தீர்ப்பை காட்டி வாதாடலாம். எமது மெத்தப்படித்த நுனி நாக்கு ஆங்கிலம் பேசும் சட்டத்தரணிகளும் வேடுவத் தலைவருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் வாங்கப்போகும் தீர்ப்பை பார்த்து அதற்கேற்ப நடவடிக்கையில் இறங்கலாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடுக்குநாறிமலையிலிருந்து தையிட்டிக்கு...!

○ நிலாந்தன்

தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டத்தை நொதிக்கச் செய்தது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிதான். பொலிஸாரோடு முரண்பட்டதன்மூலம் அதை உணர்ச்சிகரமான ஒரு விவகாரமாக மாற்றியதும் அந்தக் கட்சிதான். அதன் விளைவாகத் தமிழரசுக் கட்சி உட்பட ஏனைய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் அப்பகுதிக்கு வரவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. நீதிமன்றம் தலையிடும் ஒரு நிலைமை உருவாகியது.

எனினும் போராட்டம் பெருமளவுக்கு கட்சிப் பிரமுகர்களின் போராட்டமாகவே இருந்தது. கொஞ்சம் தொண்டர்களும் காணப்பட்டார்கள். முன்னணிபொலிஸாரோடு முரண்பட்டதுங்கூட அதன் பாணியில் வழமையானது என்று சொல்லலாம். அரச படைகளோடு முரண்படுவதை ஒரு சாகசமாக முன்னணி செய்து வருகின்றது. இதுபோன்ற போராட்டங்களில் அவ்வாறான சாகசச் செயலுக்கும் ஒரு பொருள் உண்டு. அது பொலிஸாரை நிதானமிழக்கச் செய்யும். அதன் தக்கபூர்வ விளைவாக சிங்கள - பௌத்த மயமாக்கல் மேலும் அம்பலப்படும் என்பது உண்மை. ஆனால் அறவழிப் போராட்டங்கள் மட்டுமல்ல ஆயுதப் போராட்டங்களும் சாகசங்களால் வெற்றி பெறுவதில்லை.

இதுவிடயத்தில் சில அடிப்படையான கேள்விகள் உண்டு. அந்த விகாரை திடீரென்று வானத்திலிருந்து தரைக்கு வரவில்லை. அது கடந்த நான்கு வருடங்களாகக் கட்டப்பட்டு வருகிறது. அதற்கு அத்திபாரம் வைத்தபோதே அது விவகாரம் ஆக்கப்பட்டது. அதைக் கட்டியெழுப்பும் வரையிலும் ஏன் தமிழ்க் கட்சிகள் பார்த்துக் கொண்டிருந்தன? இப்பொழுதும் விகாரை முழுமையாகத் திறக்கப்படவில்லை. அதற்கு கலசம் வைக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்ட பொழுதுதான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி களத்தில் இறங்கியது. நாவற்குழியிலும் அப்படித்தான்.

இதில் ஒன்று தெளிவாகத் தெரிகிறது. அத்திபாரம் வெட்டப்படும் பொழுதும் அதைத் தடுக்கமுடியவில்லை. அது கட்டி முடிக்கப்படுவதையும் தடுக்கமுடியவில்லை. அது ஒரு மதம் சார்ந்த பொதுக் கட்டடம் என்ற அடிப்படையில் அதை இனி அகற்றுவது மேலும் விவகாரமாகிவிடும். எனவே இங்கு தொகுத்துப் பார்த்தால் தெரியவருவது என்னவென்றால், தமிழ்க் கட்சிகளின் இயலாமை தான். தமிழ்க் கட்சிகளின் நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியல்தான். (Event based) நாவற்குழியில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்ட பொழுது நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் அங்கு போனார். முரண்பட்டார். அதுபோலவே தையிட்டி விகாரை விவகாரத்திலும் தொடக்கத்திலேயே அது பிரதேசசபையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. எனவே இது விடயத்தில் 4 ஆண்டுகள் தூங்கிக் கிடந்துவிட்டு திடீரென்று விழித்த அரசியலை எப்படிப் பார்ப்பது ?

ஆயிரம் விகாரைகள் கட்டப் போவதாக ரணில் பல ஆண்டுகளுக்கு முன்பே தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்திருந்தார். அவர் சொன்னதைச் செய்கிறார். அது அரசுடைய தரப்பு. திணைக்களங்கள் அவர்களுடைய உபகரணங்கள். படைத்தரப்பு அதன் காவல்காரன். எனவே எல்லா வளங்களையும் கொட்டி அவர்கள் சொன்னதைச் செய்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு சொன்னதைச் செய்யும் சக்தி உடையவர்களா ? அதற்குத் தேவையான நீண்ட கால நோக்கிலான வழி வரைபடம் அவர்களிடம் உண்டா? இல்லையென்றபடியால்தான் அவர்கள் நிகழ்வுகளை மையமாக வைத்து எதிர்ப்பு அரசியல் செய்கின்றார்களா? அவர்கள் எதிர்த்த போதிலும் விகாரைகள், தாதுகோபுரங்கள் கட்டப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. தமிழ்க்கட்சிகளிடம் தெளிவான வழிவரைபடம் இல்லை என்பதைத்தான் தையிட்டி விவகாரம் நமக்கு உணர்த்துகின்றது. சிங்கள - பௌத்த மயமாக்கல் என்பது, தமிழ்மக்கள் ஒரு தேசமாக இருப்பதைச் சிதைக்கும் நோக்கிலானது. எனவே தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரண்டால்தான் அதைத் தடுக்கலாம். செல்வராஜா கஜேந்திரன் தையிட்டியில் வைத்து அதைச் சொன்னார். ஆனால் சொன்னால் மட்டும் போதாது. தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதற்கு யார் தடை ?

ஏனைய கட்சிகளைத் துரோகிகள், ஒட்டுக் குழுக்கள். கைக்கூலிகள் என்றெல்லாம் கூறிக்கொண்டு எப்படி ஒற்றுமைப்படுவது? இனி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை கட்சிகளின் ஒருங்கிணைப்புக்குள் கொண்டுவர முடியாது. ஒன்றில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு பிரதான நீரோட்டக் கட்சியாக வளர்ச்சி பெற வேண்டும். அல்லது ஏனைய கட்சிகள் தாங்கள் ஒரு பெரிய கூட்டாக வளர்ச்சி பெறவேண்டும்.

எந்தக் கூட்டாக இருந்தாலும் அது தேசத்தை கட்டியெழுப்புவது என்ற நோக்கத்தோடு உருவாக்கப்பட வேண்டும். நிச்சயமாக தேர்தல் வெற்றிக்கான கூட்டாக இருக்கக் கூடாது. அத்தகைய அடிப்படையில் கூட்டுக்களை உருவாக்கத் தவறியதன் விளைவாகத்தான் தேச நிர்மாணத்துக்கான அடுத்தடுத்த கட்ட வளர்ச்சிகளுக்குப் போக தமிழ் அரசியலால் முடியவில்லை.

தேசத்தை எப்படிக் கட்டியெழுப்புவது என்று சிந்தித்து அதற்குரிய வழிவரைபடத்தைத் தயாரித்து இருந்திருந்தால், சிங்கள- பௌத்த மயமாக்கலை எதிர்கொள்வதற்கு உரிய கட்டமைப்புகளை உருவாக்கியிருந்திருப்பார்கள். கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான், நிகழ்வுகளை மையமாகக் கொண்டு எதிர்ப்பு அரசியல் செய்ய வேண்டிவந்தது. அதை ஒரு சட்ட விவகாரமாகச் சுருக்க வேண்டி வந்தது. இது ஒரு சட்ட விவகாரம் அல்ல. இது ஓர் அரசியல் விவகாரம். இதை அணுகுவதற்கு அரசியல் ரீதியான கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். ஒரு கட்சியிடமும் அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லை என்பதைத்தான் தையிட்டியில் குந்திக் கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நமக்கு உணர்த்தினார்கள். சில தொண்டர்களைத் தவிர மக்களை அங்கே கொண்டுவர முடியவில்லை.


எனவே இங்கு தேவையானது என்னவென்றால், தேசத்தை நிர்மாணிப்பதற்குரிய கட்டமைப்புகள் எவை, எவை என்று கண்டு அவற்றை கட்டியெழுப்புவது தான். இது பல ஆண்டுகளாக இந்தக் கட்டுரையாளர் எழுதிவரும் ஒரு விடயந்தான். ஒரு தேசத்தை நிர்மாணிக்கத் தேவையான கட்டமைப்புகள் எவையெவை? ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்களைப் பலப்படுத்துவதற்குரிய கட்டமைப்புக்களே அவை. ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அம்சங்கள் எவை? நிலம் , இனம், மதம், மொழி; இனம் அல்லது சனம்; பொதுப் பண்பாடு; பொதுப் பொருளாதாரம் போன்றவைதான். எனவே மேற்கண்ட அம்சங்களை பலப்படுத்தவும் பாதுகாக்கவும் தேவையான சுயகவசங்கள் என்று வர்ணிக்கத்தக்க கட்டமைப்புகளை புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்போடு உருவாக்கலாம். தேசத்தை நிர்மாணிக்கவேண்டும் என்று கூறும் ஒரு கட்சி அதற்குத் தேவையான பொருத்தமான கட்டமைப்புகளை ஏன் இதுவரை உருவாக்கவில்லை ? அதற்கு பதில் வேண்டும். தையிட்டியில் தமிழ்மக்கள் ஒரு தேசமாக நிற்கவில்லை. கட்சிப் பிரமுகர்கள்தான் நின்றார்கள். அது ஒரு நிகழ்வு. அதுபோல பல நிகழ்வுகளை நாங்கள் கடந்த 14 ஆண்டுகளில் கண்டு விட்டோம். நிகழ்வுகளை மையமாகக் கொண்ட அரசியலின் தோல்வியே இது. இப்பொழுது தேவையாக இருப்பது மூலோபாய ரீதியில் சிந்தித்து கட்டமைப்புகளை உருவாக்கி நீண்ட கால அடிப்படையில் தேசத்தைக் கட்டியெழுப்புவது தான். அவ்வப்போது நிகழ்வுகளுக்கு எதிர்வினையாற்றும் அரசியல் எனப்படுவது தேசத்தை நிர்மாணிப்பதற்கு உரியதல்ல. தேசத்தை நிர்மாணிப்பது என்பது எதிர்ப்பு அரசியல் மட்டுமல்ல. அது கட்டியெழுப்பும் அரசியலுந்தான் (Constructive). எதைக் கட்டியெழுப்புவது? எதிர்க்கத் தேவையான கட்டமைப்புகளைக் கட்டியெழுப்புவது. இன்றைக்கு தையிட்டி. நாளைக்கு வேறொரு இடத்தில் வேறு ஒரு பௌத்த மதக் கட்டுமானத்துக்கு அத்திபாரம் வைக்கப்படும். அப்பொழுதும் அந்த நிகழ்வுக்கு எதிராக தமிழ்க்கட்சிகள் போராடக்கூடும். வழக்குத் தொடுக்கக்கூடும். பொலிஸோடு தள்ளுமுள்ளுப்படக்கூடும். வழக்கில் வெல்லவும் கூடும். ஆனால் அவை யாவுமே நிகழ்வுகள்தான். தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான தொடர் செயற்பாடுகளாக இருக்கப் போவதில்லை. சிங்கள-பௌத்த மயமாக்கலைத் தடுக்கப்போவதில்லை.

இப்பொழுது வெடுக்குநாறிமலையில் இருந்து கவனக்குவிப்பு தையிட்டிக்குத் திரும்பி விட்டது. அதுகூட சிங்கள - பௌத்த மயமாக்கலுக்குச் சாதகமான ஒரு விடயம்தான். தமிழ்மக்களின் கவனத்தை, தமிழ்க் கட்சிகளின் கவனத்தை அவ்வப்போது வெவ்வேறு நிகழ்வுகளின் மீது திசை திருப்புவது; தமிழ் மக்களின் கூட்டுக் கவனத்தைச் சிதற விடுவது.

அண்மை வாரங்களாக தமிழ்ச் சமூகத்துக்குள் காணப்படும் சாதி ஏற்றத் தாழ்வுகளைக் குறித்தும் சாதி ஒடுக்குமுறைகளைக் குறித்தும் விமர்சனங்கள் வெளிவருகின்றன. தேசிய விடுதலை எனப்படுவது சமூக விடுதலையுந்தான். சமூக விடுதலை இல்லாத தேசிய விடுதலை, விடுதலையே அல்ல. இந்த விளக்கத்தோடு உள்ளூரில் காணப்படும் சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் போராட வேண்டிய பொறுப்பு தமிழ்க் கட்சிகளுக்கும் செயற்பாட்டாளர்களுக்கும் உண்டு. மத முரண்பாடு, சாதி முரண்பாடு நாவற்குழி, தையிட்டி வெடுக்குநாறி மலை, குருந்தூர்மலை போன்ற அனைத்து அம்சங்களும் தமிழ்மக்களின் கவனத்தை அவ்வப்போது சிதறடிக்கின்றன. இவற்றுக்கு எதிராக தனித்தனியாகப் போராடத் தேவையில்லை. இவை அனைத்தும் தேச நிர்மாணத்துக்கு ஏற்பட்ட சவால்களே. எனவே தேசத்தை ஜனநாயக அடிச்சட்டத்தின் மீது கட்டியெழுப்பும்போது இந்த விடயங்களை எதிர்கொள்வதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளும் உருவாக்கப்பட்டு விடும்.

இது மே மாதம். 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மத்தியில் இருந்த ஒரு கருநிலை அரசு தோற்கடிக்கப்பட்ட மாதம். "யுத்தத்தை வெற்றி கொண்டவர்கள் நாங்கள்" என்று தையிட்டியில் வைத்து ஒரு பொலிஸ்அதிகாரி கூறுகிறார். அதன் பொருள் இதுதான். நீங்கள் தேசமாக இருப்பதை நாங்கள் தோற்கடித்து விட்டோம் என்று பொருள். ஆனால் கடந்த 14 ஆண்டுகளாக தமிழ்மக்கள் ஒரு தேசமாக மேலெழுவதைத் தோற்கடித்ததில் அரசாங்கத்தைவிடவும் தமிழ்க் கட்சிகளுக்கே பங்கு அதிகம். இதை மறுவளமாகச் சொன்னால் தமிழ் மக்களை ஓரளவுக்காவது தேசமாகத் திரட்டியது அரசாங்கந்தான். ஒடுக்குமுறைதான் தமிழ்க் கட்சிகளை ஓர் உணர்ச்சிப்புள்ளியில் சந்திக்க வைக்கின்றது. தையிட்டியில் அது நடந்தது.





மு.திருநாவுக்கரசு சிவத்தம்பி போன்றவர்கள் கூறுவதுபோல எதிரிதான் தமிழ்த் தேசியத்தின் பிரதான பலமா? தியாகியாக, துரோகியாக, கைக்கூலியாக, ஒட்டுக்குழுவாக, வடக்காக, கிழக்காக, வன்னியாக, யாழ்ப்பாணமாக், கட்சியாக, சாதியாக, சமயமாக, இன்னபிறவாக, சிதறிப்போகும் சிறிய தமிழ்மக்களால், அரசாங்கம் கட்டிக் கொண்டிருக்கும் விகாரைகளிலிருந்து ஒரு செங்கல்லைத்தானும் அசைக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இடதுசாரிகளின் இனவாதம்

## தமிழர் தேசத்தில் நிகழும் பௌத்தமயமாக்கலை ஏன் இடதுசாரிகள் கண்டிக்கவில்லை?

○ அ.நிக்ஸன்

உலக அரசியலில் வலதுசாரிக் கட்சிகளின் செல்வாக்குகள் சரிந்துவரும் நிலையில், இடதுசாரிகளின் செல்வாக்கும் ஆதரவும் மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாகத் தென்னமெரிக்க நாடுகளில் கடந்த இரண்டு வருடங்களில் இடதுசாரிக் கட்சிகளே அடுத்தடுத்து ஆட்சியை அமைத்து வருகின்றன. ஆனால் இடதுசாரி என்பதன் உண்மையான அடிப்படை மற்றும் இடதுசாரி என்பதற்குரிய சரியான உள் நோக்கங்களைத் தற்கால இடதுசாரிகள் குறிப்பாக தென்னமெரிக்க நாடுகளில் ஆட்சி அமைத்து வரும் இடதுசாரிகள் கொண்டிருப்பதாகக் கூற முடியாது.

இந்த இடதுசாரிகள் தத்தமது நாடுகளின் தேசியச் சிந்தனைகளை அடிப்படையாகவும், வலதுசாரிக் கட்சிகள் போன்று வர்த்தக நலன்களை மையமாகவும் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் தென்னமெரிக்காவில் இடதுசாரிகளின் எழுச்சியை சாதாரண அரசியலாகக் கணிக்க முடியாதென அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் கடந்த வாரம் வொஷிங்டனில் கூறியிருந்தார்.

டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்கத் தேசியவாதத்தை அடிப்படையாகக் கொண்டு பதவிக்கு வந்தவர் என்றும் அதனால் இடதுசாரிகளும் அவ்வாறான தேசியக் கண்ணோட்டத்தில் மேலும் சிந்தித்தால் இடதுசாரி மற்றும் பொது உடமைக் கொள்கை என்ற அடிப்படையில் ஆபத்தான அரசியல் சிந்தனைகள் உலக அளவில் உருவாகி விடும் என்றும் அந்த உறுப்பினர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இந்த நிலையில், அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகளில் ரஷ்ய - உக்ரைன் போருக்குப் பின்னரான சூழலில் இடதுசாரிக் கட்சிகளின் செல்வாக்கு உயர்வடைந்து வருவதாக மேற்குலக ஊடகங்களில் வரும் விமர்சனங்களை அவதானித்தால் புரியும்.

பெப்ரவரி மாதம் ஈக்குவடோரில் நடைபெற்ற பொது வாக்கெடுப்பு மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்களில் இடதுசாரிக் கட்சியான குடிமக்கள் புரட்சிகரக் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றுள்ளது. அத்துடன் அரசியலமைப்புச் சட்டத்தில் சில மாற்றங்கள் கோரும் எட்டு அம்சத் தீர்மானங்கள் மீது பொது வாக்கெடுப்பும் நடைபெற்றது.

இந்தத் தேர்தல்களில் அமெரிக்காவுக்கு ஆதரவாக இருந்த ஆளுங்கட்சி படுதோல்வி அடைந்துள்ளது. பிரதான எதிர்க்கட்சியான குடிமக்கள் புரட்சிகரக் கட்சி பெரும் வெற்றி பெற்றிருக்கிறது. பாதுகாப்பை முன்னிறுத்துவது என்பது உள்ளிட்ட எட்டுக் கேள்விகளை மக்களிடம் வலதுசாரி அரசு முன் வைத்தது. உள்ளாட்சிச் சபைகளுக்கான தேர்தல்களோடு அதன் மீது பொது வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது.

வலதுசாரிகளின் எட்டு கேள்விகளுக்கும் எதிராக மக்கள் வாக்களித்திருக்கிறார்கள். வலதுசாரி அரசு முன்வைத்த எந்தத்திருத்தத்தையும் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஆளுங்கட்சிக்கு பலமான இடங்கள் என்று கருதப்பட்டவற்றிலும் இடதுசாரிகள் வெற்றி பெற்றுள்ளனர்.

ஈக்குவடோரில் அடுத்து நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இடதுசாரிகள் முழுமையாக வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றுவார்கள் என்று மேற்கு மற்றும் ஐரோப்பிய ஊடகங்கள் கூறுகின்றன. அஞ்சுகின்றன.

அதேபோன்று மற்றுமொரு தென்னமெரிக்க நாடான பிரேஸிலில் கடந்த ஆண்டு நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் இடதுசாரித் தலைவரான லூயிஸ் இனாசியோ வெற்றி பெற்றிருக்கிறார்.

இந்த வெற்றி , பிரேஸிலின் வெற்றியாக மாத்திரம் உலக நாடுகளால் அவதானிக்கப்படவில்லை. சித்தாந்த ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் சில ஆண்டுகள் சரிவைச் சந்தித்து வந்த இடதுசாரிகளுக்கு தென்னமெரிக்காவில் ஏற்பட்டு வரும் இந்த மாற்றம் நம்பிக்கை ஊட்டியுள்ளது. தென்னமெரிக்க நாடுகளில் வலதுசாரிகள் ஆதிக்கம் செலுத்தியிருந்த நிலையில் அங்குள்ள இடதுசாரிக் கட்சிகள் மேற்கொண்ட தொடர் போராட்டங்களினாலேயே வெற்றியைப் பெறமுடிந்தது. வலதுசாரி அரசாங்கத்தை மக்கள் நிராகரித்து, இடதுசாரித் தலைவர்களிடம் ஆட்சி அதிகாரத்தைக் கையளித்திருக்கின்றனர்.

2019 இல் தென்னமெரிக்க நாடுகளான கியூபா, ஆர்ஜெண்டீனா ஆகியவற்றிலும் முறையே, இடதுசாரிகளான மைக்கேல் டியாஸ் கேணல், அல்பர்டோ பெர்னாண்டஸ் ஆகியோர் வெற்றி பெற்றனர். அதேபோன்றே பொலிவியாவில் 2020 இல் லுயிஸ் வெற்றி பெற்றார். 2021 இல் ஹோண்டிரஸ்ஸில் கேஸ்ட்ரோவும், நிகராகுவாவில் டேனியலும், பெருவில் பெட்ரோவும், சிலியில் கேப்ரியலும் வெற்றி பெற்றனர். இவ்வாறு படிப்படியாகத் தென்னமெரிக்கா இடதுசாரித் தலைவர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றி வருகின்றனர். தென்னமெரிக்க நாடுகளின் ஜனாதிபதிகளாக வெற்றி பெற்றவர்களில் அதிகமானோர் தொழிலாளர் வர்க்கப் பின்னணியைக் கொண்டவர்கள்.

2000 ஆம் ஆண்டு பின்லேடனின் அல்கெய்டா உள்ளிட்ட இஸ்லாமியக் குழுக்களின் தாக்குதல்கள் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்ததால் தேசியவாதக் கொள்கைகள் மூலம் வலதுசாரித் தலைவர்கள் மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

இந்தத் தேசியவாதச் செல்வாக்கு அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, தென்னமெரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலும் தீவிரமடைந்தன. இதனால், தேசிய இன விடுதலை வேண்டிப் போராடிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் உள்ளிட்ட விடுதலை இயக்கங்களையும் மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகள் பயங்கரவாதப் பட்டியலில் இணைத்தன. ஆனால் இலங்கைத்தீவின் வடக்கு - கிழக்கில் 2001 இல் விடுதலைப் புலிகள் ஒருதலைப் பட்சபோர் நிறுத்தத்தை அறிவித்துப் பின்னர் 2002 இல் நோர்வேயின் ஏற்பாட்டில் சமாதானப் பேச்சையும் ஆரம்பித்தனர்.

இருந்தாலும் புலிகள் இயக்கத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்தினால் தடை விதிக்கப்பட்டது. வலதுசாரித் தலைவர்கள், தங்கள் நாடுகளின் தேசியவாதக் கொள்கைகளை வலுப்படுத்த நேர்மையாகப் போராடிய விடுதலை இயக்கங்களின் அரசியல் கோரிக்கைகளையும் பயங்கரவாதமாகச் சித்திரித்து , இலங்கை போன்ற உள்ளக மோதல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த நாடுகளின் அரசுகளின் இனவாத முகங்களுக்கு ஜனநாயகச் சாயம் பூசினர்.

இவ்வாறு தேசியவாதம் என்ற போர்வைக்குள் நின்று கொண்டு செயற்பட்ட காரணத்தாலேயே மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வலதுசாரித் தலைவர்கள், 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னரான சூழலில் பொருளாதார வளர்ச்சியை உருவாக்கத் தவறிவிட்டனர். இது குறித்து அமெரிக்க ' பொக்ஸ் ' தொலைக்காட்சி சமீபத்தில் விமர்சன நிகழ்ச்சி ஒன்றை நடத்தியிருந்தது.

பொரீருளாதாரத்தை வலுப்படுத்த செல்வந்தர்களுக்கு ஆதரவாக வலதுசாரி அரசாங்கங்கள் செயற்படுவதாக குற்றச்சாட்டுகளும் எழுந்தன. இந்தப் பின்னணியில்தான் வலதுசாரிகளின் தேசியவாதக் கொள்கைகள் மக்களிடம் வலுவிழந்தன. ரஷ்ய - உக்ரைன் போர்ச் சூழலில், பணவீக்கம், வறுமை போன்றவை தற்போது உலகளவில் பெரும் பிரச்சினையாக அவதானிக்கப் படுகின்றன. உலகில் பண வீக்கம் குறித்து சர்வதேச நாணய நிதியம் கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளது. 2010 இல் இருந்து 2022 வரையான பொருளாதார வீழ்ச்சிகளை இந்த அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில், வறுமையை நிச்சயம் ஒழிப்போம் என்ற தொனியில் இடதுசாரிகள் தென்னமெரிக்க நாடுகளில் ஆட்சிகளைக் கைப்பற்றி வருகின்றமை அமெரிக்கா போன்ற மேற்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தாக்கத்தைச் செலுத்தலாம்.

ரஷ்ய - உக்ரைன் போரினால் உலகம் முழுவதும் பொருளாதாரச் சரிவு நிலை ஏற்பட்டுள்ளது. இதனை மீட்டெடுப்பதற்கான தீவிரமான முயற்சி இடதுசாரி தலைவர்களுக்கு அவசியமாகின்றது என்ற கருத்து தற்போது உலக அளவில் பேச ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

தென்னமெரிக்க நாடுகளில் கடந்த பத்து ஆண்டுகளில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தது. அதனை மீட்சி பெறச் செய்யும் முயற்சியிலும் இடதுசாரிகள் கவனம் செலுத்த வேண்டிய தேவையிருந்தது. இதனாலேயே அங்கு இடதுசாரிகள் தொடர் வெற்றிகளைக் கண்டு வருகின்றனர். ஆனால் இடதுசாரிகளின் இந்த வெற்றி தென்னமெரிக்காவுடன் நிற்கப் போகிறதா அல்லது உலகம் முழுவதும் பரவப் போகிறதா என்பதைத் தற்போதைக்குக் கூற முடியாது.

இடதுசாரிகள் தென் அமெரிக்க நாடுகளில் அடைந்து வரும் வெற்றி தேசியவாத நலனை முன்வைக்கும் கட்சிகளுக்குத் தடுமாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இலங்கைத்தீவில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராகப் போராட்டம் நடத்தித் தற்போது ஓய்ந்திருக்கும் இடதுசாரிகள் மீண்டும் ஒன்றிணைந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்குரிய வாய்ப்புகள் இல்லை. ஏனெனில் இலங்கைத்தீவின் இடதுசாரிச்செயற்பாடுகள் , வலதுசாரிகள் கையாளுகின்ற சிங்கள இனவாத உத்தியை ஒத்தவையே.

பொருளாதார நெருக்கடியால் எழுந்த வறுமை, இனச் சமத்துவமற்ற தன்மை, தொழிலாளர் பிரச்சினைகள் போன்றவற்றை இலங்கை இடதுசாரிகள் கையில் எடுத்துக் கடந்த சில மாதங்களாகப் போராடினர். பல்கலைக்கழக மாணவர்களின் ஆதரவுடன் தொழிற் சங்கங்களையும் இணைத்து இந்தப்போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

ஆனால் இலங்கைத்தீவில் எழுபது வருடங்களுக்கும் மேலாக நீடித்து வரும் இனநெருக்கடிக்குரிய அரசியல் தீர்வாக அவர்களிடம் உறுதியான திட்டம் இல்லை. வெறுமனே சோசலிச சமத்துவம் என்ற கோஷத்தை மாத்திரம் முன்வைக்கின்றனர். இலங்கை ஒற்றையாட்சி அரசின் அதிகாரங்களைப் பகிரவேண்டும் என்பதில் இந்த இடதுசாரிகளுக்கு உடன்பாடுகள் இல்லை. தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்ற அங்கீகாரத்தை நிராகரித்து "இலங்கையர்கள்" என்ற பொது அடையாளத்துடன் சோசலிச சமத்துவம் என்பதை முன்னிலைப்படுத்துகின்றனர்.

இதன் பின்னணில் , தென்னமெரிக்காவில் ஏற்படுத்திய மாற்றங்களைப் போன்று இலங்கைத்தீவிலும் இடதுசாரிகளின் போராட்டங்களால் மாற்றங்களைச் செய்ய முடியும் என்று எதிர்பார்க்க முடியாது. ஜனாதிபதி ரணி விக்கிரமசிங்க கையாண்ட சில உத்திகளினால் தற்போது இடதுசாரிகள் நடத்திய தொடர் போராட்டமும் ஓய்வடைந்துள்ளது அல்லது நிறுத்தப்பட்டுள்ளது எனலாம்.

வேறு காரணங்களை முன்வைத்து இடதுசாரிகள் மீண்டும் ரணிலுக்கு எதிராகப் போராடினாலும், அந்தப் போராட்டங்களின் மூலம் எதிர்த்தரப்பில் உள்ள வலதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியைக் கைப்பற்றக் கூடிய வாய்ப்புகளே அதிகம். அப்படி எதிர்க்கட்சிகள் குறிப்பாக சஜித் அணி ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டால் அந்த ஆட்சியில் இப்போது போராட்டம் நடத்திய இடதுசாரிகள் பங்களிப்புச் செய்யும் நிலை வரலாம்.

இலங்கைத்தீவின் வரலாற்றில் இடதுசாரிகள் வலதுசாரிக் கட்சிகளின் வெற்றிக்கு ஏதோ ஒருவகையில் ஒத்துழைப்புச் செய்து பின்னர் அந்த ஆட்சியில் பங்கெடுத்துமுள்ளனர். உதாரணமாகத் தம்மை இடதுசாரி என்று கூறும் ஜே.வி.பி.யினர் சந்திரிகாவின் ஆட்சியில் அமைச்சுப் பதவிகளைப் பெற்றிருந்தனர்.

2009 வரை போருக்கு ஒத்துழைத்து ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலையை முற்றாக நீக்கம் செய்யும் நோக்கில் ஜே.வி.பி.யுடன் இணைந்து ஏனைய இடதுசாரிகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தன. தீவிர இடதுசாரியான வாசுதேவ நாணயக்கார மஹிந்த அரசாங்கத்தில் அமைச்சராகப் பதவி வகித்துப் போருக்கு ஒத்துழைத்திருந்தார்.

இந்தப் பின்புலத்திலேதான், ரணிலுக்கு எதிராக இந்த இடதுசாரிகள் கடந்த சில மாதங்களாக நடத்திய போராட்டங்களில் வடக்கு - கிழக்குத் தாயக மக்கள் பெருமளவில் பங்கெடுக்கவில்லை.

சிங்கள இடதுசாரிகள் உண்மையான மாற்றுக் கொள்கைகளில் குறிப்பாக இலங்கை ஒற்றையாட்சி என்ற அரச கட்டமைப்பில் மாற்றங்களைச் செய்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள முன்வந்தால் தமிழ்த்தரப்பும் அவர்களோடு ஒன்றிணைந்து போராடக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.

வடக்கு - கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக இராணுவ ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டு வரும் விகாரைகள், புத்தர் சிலைகள் என்பன தமிழர்களின் பாரம்பரிய அடையாளங்களை திட்டமிட்டு அழிக்கின்றன எனத் தெரிந்தும், சிங்கள இடதுசாரிகள் இதுவரையும் அதற்கு எதிராகப் போராடவோ , குரல் கொடுக்கவோ முன்வரவில்லை.

ரணிலுக்கு எதிராகப் போராட்டம் நடத்திய இடதுசாரி அமைப்புகள் கொழும்பை மையப்படுத்திய பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் என்பன தமது போராட்டத்துக்கு ஆதரவு வழங்குமாறு கோரி கடந்த மாதம் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பிரதேசங்களுக்குச் சென்று உரையாடியிருந்தன .

அப்போது தமது தரப்பு நியாயத்தைக் குறிப்பாக எழுபது வருட அரசியல் விடுதலைப் போராட்டம் பற்றி யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் தெளிவுபடுத்தியிருந்தனர்.

தமிழ்த்தேசியக் கட்சிகளும் இதே கருத்தை எடுத்துக் கூறியிருந்தன. ஆனாலும் இன்றுவரை பௌத்த மயமாக்கலுக்கு எதிராகக் குரல் கொடுக்க இடதுசாரிகள் முன்வரவில்லை. ஏனெனில் இலங்கை அரசு என்ற கட்டமைப்பில் அதிகார மாற்றங்களைச் செய்யவோ, தமிழர்கள் தேசிய இனம் என்பதை அங்கீகரிப்பதிலோ இலங்கையின் இடதுசாரிகளுக்கு எப்போதுமே உடன்பாடு இருந்ததுமில்லை, இனிமேல் இருக்கப்போவதுமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







அ.அக்சயன்
தரம் 1
யா/அச்சுவேலி
ஆரம்பப்பாடசாலை



ச.அபிநாஷன்
தரம் - 6
யா/மத்திய கல்லூரி



ல.அக்சயா,
தரம் - 3
கிளி/ தருமபுரம்
அ.த.க.பாடசாலை



எஸ்.ஹரினி,
தரம் - 3
யா/ உடுவில் மகளிர்
கல்லூரி

மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

**1505-1948 வரை**

**1929 பெப்ரவரி 09**
கச்சேரியில் நடைபெற்ற கூட்டத்தில் வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதிக்கு பெயர் சூட்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பூநகரிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே இயந்திரப் படகுச்சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்தப்படகில் 30 பேர் பிரயாணம் செய்யக் கூடியதாக இருந்தது. இந்தப்படகு இரண்டு மணித்தியாலத்தில் பூநகரியை அடைந்து விடும். முன்னதாக கட்டுமர சேவையே இடம் பெற்று வந்தது. கட்டுமரத்தில் செல்வதற்கு பத்து மணித்தியாலங்கள் தேவைப்பட்டது. இந்தக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்த மிஷன் பாடசாலைகள் பலவற்றை இந்து மகாசபை பொறுப்பேற்று இந்துப் பாடசாலைகளாக மாற்றியது.

**1929 மார்ச் 18**
யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு உருவாக்கம் பற்றிய கூட்டம் யாழ்ப்பாணக் கச்சேரியில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கென (கூட்டுறவை ஒருங்கிணைக்கும் முகமாக) மத்திய வங்கி ஒன்று உருவாக்குவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஐக்கிய நாணய சங்கங்கள், சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கங்கள் பல இயங்கி வந்தன. இவற்றை ஒருங்கிணைக்கும் முகமாகவே மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னரே இலங்கை மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

**1929 மார்ச் 22**
திருவாலங்காடு ஆலயத்துக்கு 45 அடி உயரமான தேர் ஒன்று யாழ்ப்பாண மக்களால் அன்பளிப்புச்செய்யப்பட்டது. 60 வருடங்களாக தேர் இல்லாமலிருந்த ஆலயத்துக்கு யாழ்ப்பாண மக்கள் தேரை அன்பளிப்புச் செய்தனர்.

**1930 ஓகஸ்ட் 01**
குருநாகல் கதிர்வேலாயுதசுவாமி மண்டபத்தில் சைவ மகாசபையொன்று ஆரம்பிக்கப்பட்டது.

**1930 நவம்பர் 26**
சேர்.பொன்.இராமநாதன் காலமானார்.

**1931**
டொனமூர் ஆணைக்குழுவின் அறிக்கையின் பிரகாரம் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டு. இலங்கை சட்டசபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்குமாறு கோரிக்கை விடுத்தது. 'இலங்கைக்கு பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். அதுவரை தேர்தல்களில் போட்டியிடக்கூடாது' என யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியது. இந்தத்தீர்மானம் ஒரு முட்டாள்தனமான முடிவு என பின்னாளில் விமர்சிக்கப்பட்டது. ஹண்டி பேரின்பநாயகத்தின் நல்லெண்ணம் இறுதியில் தமிழர்களுக்கு வினையாக மாறியது.

யாழ்ப்பாண மாவட்டம் சட்டசபைத்தேர்தலை புறக்கணிப்பது பற்றி அப்போதைய ஆளுநர் தெரிவித்த கருத்து வருமாறு -

"யாழ்ப்பாண மாவட்டம் சட்டசபைத்தேர்தலைப் புறக்கணிப்பது சட்டசபைக்கு பெரும் இழப்பு. இலங்கையின் அரசியலமைப்பு உருவாக்கத்துக்கு யாழ்ப்பாணப் பிரதிநிதிகள் பெரும் பங்காற்றியுள்ளனர். புதிய அரசியலமைப்பு உருவாக்கும் பணிகளில் ஒரு அறிவார்ந்த, நிறுவனமயப்பட்ட சமூகத்தின் பங்களிப்பு இல்லாமல் போகிறது. நீங்கள் தேர்தலைப் பகிஷ்கரிப்பதன் மூலம் உங்களது பிரதேசத்துக்குரிய அதிகாரங்களையும், சிறப்புரிமைகளையும் இழக்கிறீர்கள்."

**1931 மே 05**
தேர்தலைப் பகிஷ்கரிப்பது பற்றி அப்போது சட்டசபை உறுப்பினராக இருந்த சேர்.வைத்திலிங்கம் துரைசாமி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பின்வருமாறு உரையாற்றினார்-
'நாங்கள் முழு இலங்கைக்கும் சுதந்திரம் வேண்டுமெனப் போராடுகிறோம். எமது பாதுகாப்பு இப்போது சிங்களவர்களின் கைகளில், எமது சுதந்திரம் இப்போது சிங்களவர்களின் கைகளில் '

**1931 ஜூன்**
இலங்கை சட்டசபைக்கான முதலாவது தேர்தல் நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடைபெறவில்லை., ஏனைய இடங்களில் நடைபெற்றது. முல்லைத்தீவில் ஆனந்தன் வெற்றியீட்டினார். கொழும்பு வடக்குத் தொகுதியில் இரத்தினசோதி சரவணமுத்து வெற்றியீட்டினார் . திருகோணமலை=மட்டக்களப்புத் தொகுதிகளில் திரு. சுப்பிரமணியம் வெற்றி பெற்றார். ஏனைய இடங்களில் சிங்களவர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தேர்தல் முடிந்த கையுடன் அமைச்சரவை உருவாக்கப்பட்டது. இந்த அமைச்சரவை தனிச்சிங்கள அமைச்சரவையாக அமைந்தது.

**1931 ஜூலை 11**
யாழ்ப்பாணம் மத்திய வங்கியின் முதலாவது ஆண்டுபொதுக்கூட்டம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் 85 பதிவு செய்யப்பட்ட சங்கங்கள் கலந்து கொண்டன. வங்கியின் துணை விதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஏனைய வங்கிகளுக்கு 300,000க்கு மேற்படாத தொகையை மேலதிகப்பற்றாக வழங்குவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
வ.பொன்னம்பலம் தலைவராகவும், முதலியார் கனகசபை உப தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.
1921 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க கூட்டுறவுச்சட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மத்திய வங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது. தலா 100.00 வீதம் 5000 பங்குகள் விற்பனை மூலம் 500,000 மூலதனத்துடன் இந்த மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது.
தனிப்பட்ட நிலையான வைப்பு 50,532.70 சதமாகவும் நிறுவனங்களின் நிலையான வைப்பு 111,454.98 சதமாகவும் இருந்தது.

**நிலையான வைப்பு விபரம் வருமாறு-**


| | |
|---|---|
| திறைசேரி | -9943.05 |
| அம்பாந்தோட்டை சுகாதார சபை | -7,500.00 |
| யாழ். நகரசபை | -35,000.00 |
| உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர் | - 50,000.00 |
| மட்டக்களப்பு நெற்சபை | -10,000.00 |

**1931 ஜூலை**
பருத்தித்துறை வெளிச்சவீடு பூர்த்தி யாக்கப்பட்டது. 15 மைல் தொலைவு வரை இந்த வெளிச்ச வீட்டின் ஒளி பரவும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.
சட்டசபை சபா மண்டபத்தினுள் சேர்.பொன். இராமநாதனின் உருவப்படத்தை வைப்பதற்கு சட்டசபையில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

*(வரலாறு நீளும்)*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பேராசிரியர்.கலாநிதி.எஸ்.சிவலிங்கராஜா



# பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி:

## கல்லால் எறிந்தவர்க்கும் கனிகொடுத்த பழமரம்!

எதிர்வரும் மே 10 ஆம் திகதி பேராசிரியர் கா.சிவத்தம்பியின் 91 ஆவது பிறந்ததினமாகும். அதனையொட்டி இந்தக்கட்டுரை பிரசுரமாகின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டைச் சேர்ந்த கரவெட்டி என்னும் கிராமத்தில் கார்த்திகேசு - வள்ளியம்மை தம்பதியருக்குப் பேராசிரியர் சிவத்தம்பி 10.051932 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார். இவரது தந்தையார் பண்டிதர்.சைவப் புலவர். இவர் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களிலும் சைவ சித்தாந்தத்திலும் சோதிடத்திலும் வல்லவராகத் திகழ்ந்தார். சிறப்பாகச் செய்யுள் இயற்றும் திறன் கைவரப் பெற்ற கார்த்திகேசு, பல தனிப்பாடல்களையும் சில பிரபந்தங்களை யும் பாடியுள்ளார். புலமைத் திறனும் பக்திப் பண்பாடும் நிரம்பிய கார்த்திகேசு கரவெட்டிச் சமூகத்தில் மதிப்புயர் மனிதராகவே வாழ்ந்தார்.

பேராசிரியருக்குச் சிவத்தம்பி எனப் பெயர் சூட்டியவர் யாழ்ப்பாணத்துச் சித்தர் பரம்பரையின் "கொடுமுடி" எனப் போற்றப்படும் யோகர் சுவாமிகள் என்பது பலருக்குத் தெரியாததொன்றாகும். யோகர் சுவாமியின் பக்தரான கார்த்திகேசுவுக்கு . நல்லூர் முருகன் வாசலிலே வைத்து யோகர் சுவாமிகள் சிவத்தம்பி என்ற பெயரைச் சொல்லி 'அருளினார்'.

சிவத்தம்பி பிறந்தவேளை யாழ்ப்பாணத்திலே ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்த கார்த்திகேசு, நல்லூர் முருகன் வழிபாட்டுக்கு வந்தபோது யோகர் சுவாமிகள் கார்த்திகேசுவை அழைத்து "நீ வீட்டைபோ. அங்கே சிவத்தம்பி வந்திருக்கிறான்" என்று கூறினாராம். யோகர் சுவாமியின் 'அருள்வாக்கைக்' கேட்டு வீட்டுக்கு வந்த கார்த்திகேசு அங்கே மகன் பிறந்திருப்பதைக் கண்டு மகிழ்ந்து யோகர் சுவாமி 'அருளியபடியே' சிவத்தம்பி என்னும் நாமத்தைச் சூட்டினார். யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி ஈழத்தமிழர்கள் மத்தியிலே யோகர் சுவாமியின் குரல் 'தெய்வத்தின் குரலாகவே' இன்றுவரை போற்றப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. யாமறிந்தவரையிலே சிவத்தம்பி என்ற பெயர் வேறுயாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. ஒருவேளை யாருக்காவது சிவத்தம்பி என்ற பெயர் இருப்பினும் அவர் கரவெட்டி கார்த்திகேசு சிவத்தம்பிக்கு வயதால் இளையவராகவே இருப்பார் என நம்பலாம்.
கரவெட்டிக் கிராமியச் சூழலிலே குறிப்பிடக் கூடிய சைவப்பள்ளிக்கூடமாக விளங்கிய மாணிக்கவாசகர் வித்தியாலயத்திலே ஆரம்பக் கல்வியைப் பெற்ற சிவத்தம்பி, இடைநிலைக் கல்வியைக் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியிலே பெற்றார்.
அக்காலத்திலே விக்கினேஸ்வ ராக் கல்லூரி ஆங்கில மொழி மூலமான சிறந்த கல்விச்சாலையாக விளங்கியது. யாழ்ப்பாணத்தின் மிகச் சிறந்த ஆசிரியர்களும் இந்தியாவைச் சேர்ந்த பல ஆசிரியர்களும் இவர் கல்வி கற்ற காலத்திலே விக்கினேஸ்வராக்கல்லூரி ஆசிரியர்களாக விளங்கினர். இவர்களிடம் படிக்கும் பெரும்பேற்றினைச் சிவத்தம்பி பெற்றார்.

"ஆண்டோர் பத்தினில் ஆடியும் ஓடியும்
ஆறுகுட்டையின் நீச்சிலும் பேச்சிலும்
ஈண்டு பன்மரத் தேறி இறங்கியும்
என்னொ டொத்த சிறியர் இருப்பரால்"

என்ற பாரதியின் 'பாடலடி' சிவத்தம்பியின் இளமை நினைவுகளோடு இணைந்து செல்லக்கூடியது எனக் கருத முடியும்.
கரவெட்டியிலே ஊற்றெடுத்த கல்வி மரபு கொழும்பு ஸாகிராக் கல்லூரியிலே உயர்தரவகுப்பில் படிக்கும்பொழுது (H.S.C) மேலும் வனப்பும் செழிப்பும் பெற்றது. தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்களுடன் கலந்து படிக்கும் வாய்ப்பு ஸாகிராவிலே இவருக்குக் கிடைத்தது. இவரது புலமை வியாபகத்தின் ஒரு தளம் ஸாகிராவிலே கட்டப்பட்டது எனக் குறிப்பிடலாம். கரவெட்டியிலே ஆழமாகவும் 'பெலப்பாகவும்' போடப்பட்ட அத்திபாரத்தின் மேலே முதலாவது தளம் ஸாகிராவிலே கட்டப்பட்டது என்பதை அவரது இஸ்லாமிய நண்பர்களின் கூற்றுக்கள் எண்பிக்கின்றன.

ஸாகிராவில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழகம் சென்ற சிவத்தம்பி புகழ்பெற்ற பேராசிரியர்களிடம் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றார். குறிப்பாகப் பேராசிரியர்கள் க. கணபதிப்பிள்ளை, வி.செல்வநாயகம், சு. வித்தியானந்தன் முதலியோரைக் குறிப்பிடலாம். பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமிழோடு வரலாறு, பொருளியல் முதலான பாடங்களையும் பயின்றமை இவரின் புலமை விசாலிப்புக்கு உறுதுணையாயிற்று. பேராதனையிலே, க. கைலாசபதி முதலான சக பாடிகளுடன் உடனுறைந்து கற்றமையும் இவருக்கு நல்ல பசளையாயிற்று. பேராதனையிலே முதலாம் ஆண்டு மாணவனாக இருக்கும் பொழுது, பல்கலைக்கழகத்தின் தமிழ்ச் சங்க வெளியீடான இளங்கதிரிலே இவர் யாப்பு நெறியிலே எழுதிய விருத்தப் பாடல் கரவெட்டியில் இருந்து, இவர் பல்கலைக்கழகச் சூழலை நோக்கியமையைப் புலப்படுத்துகின்றது. பேராசிரியர் சிவத்தம்பியின் ஆளுமை உருவாக்கத்தின் இரண்டாவது தளம் பேராதனையிலே கட்டப்பட்டது எனலாம்.

தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்த சிவத்தம்பி சிங்களத்தையும் சிறப்பாக 'வாலாயப்'படுத்திக் கொண்டார். மும்மொழிப்புலமையோடு பேராதனையில் இருந்து பட்டதாரியாக வெளியெறிய சிவத்தம்பி கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்து கொண்டார். தன்னை வளர்த்தவருக்கு 'இறுக்கும்' கடனாக இவ்வாசிரியப் பணியை இவர் ஏற்றிருக்கலாம். ஸாகிரா ஆசிரியப்பணியும் அவரது உறவுத் தொடர்புகளுக்கு உதவியாகவே அமைந்ததெனலாம்.
ஆசிரியப்பணியில் இருந்து விடுபட்டு, இலங்கை நாடாளுமன்றத்திலே சமகால உரைபெயர்ப்பாளராக இணைந்துகொண்டார். சமகால உரைபெயர்ப்பாளர் பதவி இவரது மொழியாளுமை விருத்திக்கு விருந்தாக அமைந்திருக்கும் எனக் கருதலாம். கொல்வின் ஆர்.டி.சில்வா, டாக்டர்.என், எம்.பெரா, எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா முதலான சிங்கள அரசியல்வாதிகளினதும், ஜீ.ஜீ. பொன்னம்பலம், எஸ்ஜே.வி. செல்வநாயகம் முதலான புகழ்பெற்ற தமிழ் அரசியல் வாதிகளினதும் பேச்சுக்களை நேரடியாகவே கேட்கும் வாய்ப்பினைப் பெற்றார். நாடாளுமன்றத்திலே இவர் பெற்ற அனுபவம் இவரின் ஆளுமை உருவாக்கத்தின் மூன்றாவது தளமாக அமைந்ததெனலாம்.

சமகால உரைபெயர்ப்பாளர் பதவியை விட்டுவிலகி கொழும்பு வித்தியோதயப் பல்கலைக்கழகத்திலே விரிவுரையாளராகச் சேர்ந்தார். விரிவுரையாளராகப் பணியாற்றியவேளை புலமைப்பரிசில் பெற்றுப் பெரியபிரித்தானியாவின் மிகச் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றான பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டம் பெறச் சென்றார். அரசியல், சமூகவியல், மானுடவியல், பண்பாட்டியல் முதலான துறைகளிலே சர்வதேசத் தரத்திலான ஆய்வுகளைச்செய்து பெரும்புகழ் ஈட்டிய பேராசிரியர் தொம்சனின் வழிகாட்டலிலே 'பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம் 'என்ற ஆய்வினைச் செய்து கலாநிதி ஆனார். பேராசிரியர் தொம்சனின் வழிகாட்டலும் பண்டைத்தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் துருவித் துருவி ஆராய்ந்து கற்றமையும் இவரது ஆளுமை அகற்சிக்கு உரிய நான்காவது தளத்தினை நிர்மாணித்தன எனலாம். இந்தத் தளத்திலே நின்று கொண்டுதான் பேராசிரியர் சிவத்தம்பி மேலே மேலே பல தளங்களைக் கட்டித் தமது புலமைக் கோபுர உச்சியை அடைந்தார் எனக் கூறலாம். கரவெட்டிக் கிராமத்திலே பலமாகப் போடப்பட்ட அத்திபாரத்தின் மேலேதான் இந்த புலமைக் கோபுரம் நிர்மாணிக்கப்பட்டது. கரவெட்டிக் கிராமத்தின் வாழ்வியல் அவரது நோக்குநிலை வியாப்திக்கு 'அடிப்படையாக' அமைந்தது எனத் துணிந்து கூறலாம். பேராசிரியர் சிவத்தம்பி சர்வதேச அரங்கிலே போற்றப்படும் சிறந்த ஆய்வாளராக விளங்கினார். அவரது ஆய்வுக் களங்கள் பல்பரிமாணம் கொண்டவை என்பதைத் தமிழியல் ஆய்வுலகம் அங்கீகரித்துள்ளது. ஈழத்து இலக்கிய வரலாற்றிலே - ஆய்வியல் வரலாற்றிலே தனக்கெனத் தனித்துவமானதோர் இடத்தைப் பிடித்துள்ள சிவத்தம்பி தொட்டுத்துலக்கிய துறைகளைப் பின்வருமாறு சுருக்கமாகச் சுட்டிக்காட்டலாம்.

### பண்டைக்காலத் தமிழ் நாடக வரலாற்றாய்வு
தமிழியல் வரலாற்றிலே முதன் முயற்சியான இந்த ஆய்வு சமூக வரலாற்று நோக்கிலும் ஒப்பியல் நோக்கிலும் செய்யப்பட்டது. மேலைப்புல ஆய்வறிஞர்கள் பலரால் இன்றும் மேற்கோள் காட்டப்படும் அளவுக்குச் சிறப்புத் தன்மை வாய்ந்ததாக இது விளங்குகின்றது.

### சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகள்
புவியியல், சமூக, அரசியல் பண்பாட்டு வழி நின்று சங்க இலக்கியங்களை நோக்கியமை. இவரது திணைக்கோட்பாட்டின் சமூக அடிப்படைகள், முல்லை சான்ற கற்பு முதலான ஆய்வுகள் மறுதலிக்க முடியாத மிகச் சிறந்த ஆய்வுகளாகப் போற்றப்படுகின்றன.

### பக்தி இலக்கிய ஆய்வுகள்
பக்தி நோக்கில் அணுகப்பட்ட தேவார திருவாசகங்களை இலக்கிய நோக்கிலே ஆராய்ந்ததோடு, அவற்றைத் தொடர்ந்து வந்த பக்தி இலக்கியங்களை இரண்டாவது பக்தி யுகம் என்ற வரையறைக்குள் கொண்டுவந்து முதன் முறையாக நோக்கியவர் என்ற பெருமை இவருக்கே உரியது.

### தமிழ்ப்பண்பாட்டு ஆய்வுகள்
தமிழ்ப்பண்பாட்டின் [illegible] சமூகவியல் நோக்கிலே ஆராய்ந்ததோடு [illegible] கிறிஸ்தவ, இஸ்லாமிய இலக்கியங்களையும் ஆயவு செய்தமை சைவசித்தாந்தத்தினைத் தத்துவநோக்கிலே மட்டும் ஆராய்ந்து வந்த சூழலில் புதிதாக அதனைச் சமூகவியல் நோக்கிலே பார்த்து ஆராய்ந்தமை.

### தமிழ்ச் சிறுகதை பற்றிய ஆய்வுகள்
தமிழ்ச் சிறுகதையின் தோற்றம் வளர்ச்சி முதலானவற்றை விமர்சன நோக்கிலே அணுகியமை

### தமிழ் நாவல் இலக்கிய ஆய்வுகள்
தமிழ் நாவல் இலக்கியத்தின் சமூகவியல் அடிப்படைகளை வெளிக்கொணர்ந்து, சமூகவியல், மானுடவியல், வரலாற்றியல். வெகுசனத் தொடர்பியல் பின்னணிகளிலே ஆய்வு செய்தமை.

### பாரதி பற்றிய ஆய்வுகள்
பாரதி இயல் என ஒரு பகுப்புப் பகுக்கப்படும் அளவுக்குப் பாரதியை இனங்காட்டியதோடு ,பாரதி வாழ்ந்த காலத்திலும், அவன் இறந்ததின் பின்னரும் பாரதி பற்றி எழுந்த சர்ச்சைகளையும் உள்வாங்கிப் 'பாரதி மறைவு முதல் மகாகவி வரை' என இவர் செய்த ஆய்வுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.

### தமிழ் இலக்கிய வரலாற்று ஆய்வுகள்
தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலப்பகுப்புப் பற்றிய முரண்பாடு கள், தமிழ் இலக்கிய வரலாற்றுக் கற்கைநெறியின் தோற்றம் தொடர்ச்சி பற்றிய ஆய்வுகளைச் செய்ததோடு இலக்கிய வரலாறுகளின் 'வரலாறெழுதுமுறை' பற்றி முதன்முதலாகச் சிந்தித்துச் சீரிய ஆய்வுகளைச் செய்தமை.

### தமிழ் இலக்கணம் பற்றியவை
தமிழ் இலக்கணத்தினை இதுவரை யாரும் நோக்காத கோணத்திலே சமூக உறவுப் பின்னணியிலே நோக்கி ஆய்வு செய்தமை, திணை, பால், எண், இடம், வேற்றுமை, வினை அமைப்பு,ஏவுதற்கர்த்தா, இயற்றுதற்கர்த்தா முதலானவைக்கு இவர் தரும் விளக்கம் தமிழியல் ஆய்வின் திருப்பு முனையாகக் கொள்ளக் கூடியவை. தொல்காப்பியப் பொருளதிகாரத்தைத் துணைக்கொண்டு கவிதை இயல்பற்றி இவர் செய்த ஆய்வுகள் தமிழ்க் கவிதை ஆய்வுத்துறைக்குப் புதிய வெளிச்சத்தைக் காட்டியது.

### இலக்கிய இயக்கங்கள் பற்றிய ஆய்வுகள்
சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல்நிலை நின்று இலக்கிய இயக்கங்களை நுனித்து நோக்கி ஆய்வு செய்தமை, தனித்தமிழ் இயக்கம் பற்றிய ஆய்வுகளும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பற்றிய ஆய்வுகளும் இந்த வகையிலே விதந்து ரைக்கத் தக்கவை.

### ஈழர்த்து இலக்கிய வரலாறு பற்றியவை
ஈழத்து இலக்கிய வரலாற்றை அவற்றின் தோற்றமும் தொடர்ச்சியும் கருதிக் காலகட்டங்களாக வகுத்து ஆராய்ந்தமை.
ஈழத்துத் தமிழ்க் கவிதை பற்றிய ஆழமான ஆய்வினைச் செய்தமை, ஈழத்து இலக்கிய கர்த்தாக்களைச் சமூக, பண்பாட்டுப் பின்னணியிலே ஆய்வு செய்தமை. ஈழத்து நாவல், சிறுகதை பற்றி விமர்சன நோக்கில் அணுகியமை.

### ஊடகவியல் பற்றிய ஆய்வுகள்
பண்பாட்டு உருவாக்கத்திலே பத்திரிகைகள், வானொலி, சினிமா பற்றிய பல ஆய்வுகளைச் செய்துள்ளமை. இவரது தமிழ்ச் சினிமாவும் சமூகமும், தொடர்பூடகம் வளர்த்த தமிழ் முதலான ஆய்வுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை.
இவ்வாறு இவரது ஆய்வுக்களங்கள் பரந்து விரிந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. இவற்றோடு அரசியல் தொடர்பான பத்தி எழுத்தாளராகவும் விளங்கினார்.
தமது ஆய்வுகளுக்காகத் தேசிய, சர்வதேசிய மட்டங்களிலே பல விருதுகளையும் பரிசில்களையும் பெற்ற பேராசிரியர் கா. சிவத்தம்பி உலகின் பல்வேறு நாடுகளிலும் நடைபெற்ற ஆய்வரங்குகள் பலவற்றிலும் பங்குபற்றி உலக அறிஞர்களின் பாராட்டினையும் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.
கேம்பிறிஜ் பல்கலைக்கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், சென்னைப் பல்கலைக்கழகம் முதலான புகழ் பெற்ற பல்கலைக் கழகங்களிலே அதிதிப்பேராசிரியராகப் பணியாற்றும் பெருவாய்ப்பினைப் பெற்றவர். கரவெட்டியிலே ஊற்றெடுத்த கல்விப் பாரம்பரியம் கேம்பிறிஜ் பல்கலைக்கழகம் வரை பரவி பாய்ந்துள்ளது.
ஆய்வாளராகவும், திறனாய்வாளராகவும் நிலைத்து நிமிர்ந்து நின்ற பேராசிரியர் கா. சிவத்தம்பியிடம் ஒரு கவிஞன். கரந்துறைந்தான் என்பதை அவரின் முன்னுரைகள், வாழ்த்துரைகள், அஞ்சலி உரைகள் முதலானவற்றைப் படித்தோர் உணர்வர்.
இளமைக்காலத்திலே உடையார் மிடுக்கு, விதானையர் வீட்டிலே முதலான நாடகங்களினூடு மிகச் சிறந்த நடிகனாகப் போற்றப்பட்டமைக்கு இவரது கரவெட்டி வாழ்வே காரணம் என்று அவர் அடிக்கடி கூறுவார். பேராசிரியர் சிவத்தம்பியின் வீட்டுக்கு அயலிலே உடையார்களும் விதானையார்களும் வாழ்ந்தமையைக் கரவெட்டியிலுள்ளோர் அறிவர்.

அறிவுப் புலத்திலும், ஆய்வுத்தளத்திலும் அசையாது நிற்கும் ஆலவிருட்சமான வாழ்நாட் பேராசிரியர் கா.சிவத்தம்பியை அவர் பிறந்த நாளிலே நினைவு கூருவோம். அந்த ஆலவிருட்சத்தின் நிழலிலே நாமும் மாணவனாக உலாவினோம் என்கிற பெருமை எமக்கும் உண்டு. நான் எழுதிய ஈழத்து இலக்கியச் செல்நெறி என்ற நூலினைப் பேராசிரியர் கா.சிவத்தம்பிக்கே சமர்ப்பணம் செய்தேன். அந்தச் சமர்ப்பணம் பின்வருமாறு:
"காய்த்த மரம் ஆதலினால் கல்லெறிகள் பட்டவன் நீ . கல்லால் எறிந்தவர்க்கும் கனிகொடுத்த பழமரம் நீ"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புத்தனுக்குக் கவிதைத் தூது

செ.சுதர்சன்

மன்னவர் குலத்தே தோன்றி;
மனங்களை ஆட்சி செய்யும்;
பன்னரும் ஞான வானே!
பரமனே! புத்தா! போற்றி!
உன்னரும் உருவை எண்ணி;
ஊறிடும் கவிதை மாலை,
என்னரும் சொல்லால் கோர்த்து;
எடுத்தொரு தூது விட்டேன்...!

பூரணை தன்னில் பூத்து;
புவனியை உய்க்க வந்த
ஆரணப் பொருளே! எங்கள்
அருந்தவ முனியே! கேளும்..!
காரணம் இன்றி எங்கள்
காணிகள் பறித்தார்; உம் பேர்
பாராயணங்கள் பண்ணி;
பலப்பல சிலைகள் வைத்தார்!

கௌதமி வளர்க்க உய்ந்த
கருணையின் வடிவே! அன்பே!
ஔடதம் ஆனாய்! கேள்... கேள்..!
அரசு உம்பேரைச் சொல்லி
கௌவிய நிலங்கள் நீங்கு..!
கைதடி மண்ணில் நீரும்
பௌவியமாகக் குந்தும்
பரிசிகேடேதுக்கையா...?

சாக்கிய முனியாய் உம்மைச்
சார்ந்தவர் போற்ற; நேபோள்
ஆக்கினாய் புத்த தேசம்!
ஆயினும் கேளாய்! முன்னோர்
ஆக்கமும், அழிவும், இன்னும்
போக்கிலாச் சாம்பல்கூட
ஊக்கியாய் நிற்கும் மண்ணில்;
உம் மதம் நாட்டல் ஏனோ?

பஞ்சமா சீலம் சொல்லிப்
பாரினைத் தூசி தட்டி
அஞ்சுமவ் வழிகள் சொன்னாய்!
ஆருயிர் உடைமை வெந்து
மிஞ்சியே போன மண்ணை
மீதி உன் சிலையும் தின்றால்;
நஞ்சென நாளும் உன்பேர்
நலுவுறல் கண்டாய் நல்லோய்..!

தன்னிகர் இல்லாள் அந்த
யசோதரை நீக்கி; நல்ல
தன்மகன் நீக்கி; அன்று
தனியனாய்த் தவமே கொண்டீர்!
பின்னுமேன் "கன்னி"யாயின்
மேலொரு கண்ணை வைத்தீர்?
இன்னலாம் கள்ளக் காதல்
இதைவிடும் உமக்கு நன்று!

கூடுகள் கட்டி; குதூகலக்
குமிழ்கள் பூட்டி; அங்கு
நாடுவோர் தன்ஸல் பெற்றால்
நல்லது தானோ சொல்லும்?
வீடதைப் பறித்தார்; போக
விளைநிலம் பறித்தார்; இந்தப்
பாடுகள் பார்த்துக் கொண்டும்
படுத்து நீர் இருக்கலாமோ?

"சிலையிடல் வேண்டாம்! உள்ளே
சிந்தனை வேண்டும்!" என்றாய்;
சிலையிலே வைத்து, உன்னைச்
சிங்களச் சூரனாக்கி;
நிலையிலாப் புகழைச் சூட்டி;
நின்னையே நிந்தை செய்தார்!
அலையெழு ஜம்புகோளம்
அடிமுதல் வைத்ததென்னு!

தங்கமாம் ஈழ நாட்டில்;
தமிழ் நிலம் மீதில் சைவர்
அங்கமாய்ப் பதியம் வைத்து
அருந்தமிழ்ப் பௌத்தம் கண்டார்..!
பங்கமாய் அதற்கும் கேடு
பண்ணவும் கிளம்பிவிட்டார்
மங்கலாய் உன்னைக் கற்ற
மாமிசக் காவிமார்கள்...!

புத்தமா முனியே நீ செய்
புண்ணியம் உளது ஐயா!
இத்தரை மீதில் இப்போ
இன்னலே விளைத்து நாளும்
புத்தராய்ச் சிலைகள் குட்டி
போடுதல் தவிர்க்க வேண்டும்!
இத்தரை எந்தன் காணி
இதனையும் விட்டுப் போவீர்!

கவிதையில் காணி செய்து;
கவின்பெறு தூபி கட்டி;
பவித்திரமாக மக்கள்
பார்க்கவே கார்ணிவெல்லும்;
செவிக்கினி பிரீத்தும் ஓதி;
செப்பிய பலவும் செய்வேன்!
தவிப்புறு தமிழர் வாழத்
தக்கதோர் தீர்வு சொல்லும்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கிறீனது தளராத முயற்சியும் கொழும்பு மருத்துவக்கல்லூரியின் ஆரம்பமும்

## யாழ்ப்பாண மருத்துவ வரலாறு: 21 சில குறிப்புக்கள்

○ பா. துவாரகன்

ஏறத்தாழ 5 ஆண்டுகள் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையின் (FINS Hospital) தலைமை அதிகாரியாகக் கடமையாற்றிய மருத்துவர் கிறீன் செப்ரெம்பர் 1868 இல் தலைமை நிர்வாகி என்ற பதவியிலிருந்து விலகும் கடிதத்தை ஆபத்துக்குதவி மருத்துவமனை நிர்வாகத்துக்கு அனுப்பினார். கிறீன் கடிதத்திலே பின்வரும் விண்ணப்பங்களையும் முன்வைத்திருந்தார்.

1. தனது மாணவர்கள் மருத்துவப் பயிற்சியை ஆபத்துக்குதவி மருத்துவமனையில் பெற்றுக்கொள்வதற்கு அனுமதித்தல்
2. மானிப்பாய் மருத்துவமனையும் ஆபத்துக்கு உதவி மருத்துவமனையும் மருந்துகளையும் ஏனைய பொருள்களையும் பரிமாறிக் கொள்வது. மருந்துகள் மற்றும் இதர பொருள்களுக்கான விலையை லண்டனில் அவற்றுக்கான பெறுமதியுடன் யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்து செலவையும் ஈடுசெய்யக் கூடியதாக மேலதிகமாக 75 சதவீதத்தையும் சேர்த்தல்
3. அமெரிக்க மிசனரியினர் பரிந்துரைக்கும் பரம ஏழையான நோயாளிகளுக்கு (Pauper Sick Patients) ஆபத்துக்கு உதவி மருத்துவமனையில் சிகிச்சை அளித்தல்.

கிறீன் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும், மருத்துவ நூல்களை மொழிபெயர்ப்பதிலும் மானிப்பாய் மருத்துவமனையிலும் தனது முழுமையான கவனத்தைச் செலுத்த விரும்பியே ஆபத்துக்கு உதவி மருத்துவமனையிலிருந்து பதவி விலகத் தீர்மானித்தார்.
கிறீனது கோரிக்கையைப் பரிசீலித்த மருத்துவமனை நிர்வாகம் அவரது கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு பதிற் கடிதத்தை அனுப்பியது.
அக்கடிதத்திலே கிறீனது சேவை குறித்துப் பின்வரும் பாராட்டு மொழிகள் காணப்பட்டன.

*"யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவி மருத்துவமனையை இன்றைய(1868 இல் ) உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருவதற்குக் காரணமாக இருந்த தங்களுக்கு எந்த ஒரு சலுகையையும் அல்லது எந்த ஒரு வெகுமதியையும் வழங்குவதற்கு ஆபத்துக்குதவி நண்பர்கள் கழகம் தயாராக இருக்கிறது. தங்களுக்கு மீண்டும் வசதியான போது வைத்தியசாலையின் தலைமை நிர்வாகத்தை வழங்குவதற்கு மிகவும் ஆர்வமாக உள்ளோம். எமது கழகம் தங்களது மீள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. தங்களைப் போன்ற தகுதியான ஒருவர் கிடைக்கும் வரை தலைமைப் பதவி வெற்றிடமாகவே இருக்கும்."*

இந்தக் கடிதத்துக்கு கிறீன் அனுப்பிய பதிலில் தனது நன்றியைத் தெரிவித்திருந்ததுடன் தன்னிடம் மருத்துவம் பயின்ற முதல் அணி(18481851) மாணவனாகிய மருத்துவ கலாநிதி ஜோசுவா இடன்போர்த் (Resident Surgeon) கடந்த 10 வருடங்களாக ஆபத்துக்குதவி மருத்துவமனையில் முழுநேரமாகப் பணிபுரிந்து வருவதையும் 2 வருடங்களாக அவர் மருத்துவமனையில் பெரும் சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டு வருவதையும் குறிப்பிட்டு ஜோசுவா இடன்போர்த்தின் திறமையையும் அனுபவத்தையும் கருத்திற்கொண்டு மருத்துவமனையின் தலைமை அதிகாரியாக அவரை நியமிக்குமாறு கிறீன் பரிந்துரைத்தார்.

### தமிழில் வெளிவந்த கூப்பரின் மருத்துவர் கைவாகடம்

மருத்துவர் கிறீன் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் பயன்படுத்தப்பட்ட ஆங்கில மருத்துவ நூல்களில் மிகச் சிறந்தவற்றைத் தேர்ந்தெடுத்து தமிழில் மொழிபெயர்த்தார். இங்கிலாந்து நாட்டின் புகழ்பெற்ற மருத்துவ நிபுணரான றொபேட் கூப்பர் MD (17731835) 1809 இல் எழுதிய ***Physician's VadeMecum : containing the symptoms, causes, diagnosis, prognosis, and treatment of di eases : accompanied by a select collection of formulae, and a glossary of terms*** என்ற நூல் இங்கிலாந்தில் வெளிவந்த அதே ஆண்டில் அமெரிக்காவிலும் அச்சிடப்பட்டது. குறிப்பிட்ட சில ஆண்டுகளில் 20 ஆயிரத்துக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையான இந்நூல் பல்வேறு பதிப்புக்களாக வெளிவந்திருந்தது. 1865 இல் வெளிவந்த பதிப்பை மருத்துவர் கிறீன் தமிழில் மொழிபெயர்க்கத் தேர்ந்தெடுத்தார். மருத்துவர் கிறீனது 5 ஆவது அணி மாணவனாகிய வில்லியம் பவுலிடம் (Dr. William Paul) இந்நூலைத் தமிழில் மொழிபெயர்க்கும் பணியை ஒப்படைத்தார். இந்நூலைத் தமிழிலே மொழிபெயர்த்து வெளியிடும்போது தேவையான விளக்கப்படங்களுக்கான மின்னச்சு வார்ப்புக்களை மூலநூல் பதிப்பாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள 25 ஸ்ரேலிங் பவுண் தேவைப்பட்டது. கிறீனுடைய நண்பர்களும் ஸ்கொட்லாந்து நாட்டிலிருந்த நலன்விரும்பிகளும் தேவையான நிதியைத் திரட்டி மருத்துவர் கிறீனிடம் கொடுத்தனர்.




மருத்துவர் ஜேம்ஸ் லூஸ்

19ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தில் தமிழில் ஆங்கில மருத்துவ நூல்களை வெளியிடும் போது மூல நூல்களில் உள்ள படங்களை தமிழ்ப்பதிப்பில் கொண்டுவருவது என்பது கற்பனை செய்யக் கூடிய இலகுவான பணியல்ல. இந்தப்படங்களைப் பெற்றுக் கொள்ள ஆங்கிலத்திலமைந்த நூல்களைப் பதிப்புச் செய்த அச்சகத்தாரை, மூல நூலாசிரியரைத் தொடர்பு கொண்டு மரச் செதுக்கு அச்சுருக்களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். இவற்றுக்கும் பெருந்தொகைப் பணம் தேவைப்படும். டேவிட் ஏ. வெல்ஸ் எழுதிய கெமிஸ்ரி என்ற நூலை கெமிஷ்தம் என்ற பெயரில் மருத்துவர் கிறீன் மருத்துவர்களான டானியல் சப்மன் வைத்திலிங்கம் மற்றும் எஸ்.சுவாமிநாதன் ஆகியோரது உதவியுடன் மொழிபெயர்த்தார். இது நாகர்கோயிலில் உள்ள லண்டன் மிசன் அச்சகத்தில் 1875 இல் அச்சிடப்பட்டது. இந்நூலில் இடம்பெற்றுள்ள படங்களை அச்சிடத் தேவையான மரச்செதுக்கு அச்சுருக்களுக்கான செலவை அமெரிக்காவில் வசித்த கிறீனது சகோதரி மேரி வழங்கினார் என்பது நன்றியுடன் நினைவு கூரத்தக்கது.
1869 இல் வெளியிடப்பட்ட அமெரிக்க மிசன் ஆண்டறிக்கையில் மருத்துவர் கிறீனது தமிழ் மொழிபெயர்ப்பு முயற்சிக்கான அயராத உழைப்பும் கிறீனது விலைமதிப்பற்ற தன்னார்வப் பணியும் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

"தமிழில் மருத்துவ நூல்களை வெளியிடுவதற்கு கிறீன் எடுத்துள்ள முயற்சியானது அளவிடற்கரிய பெரிய பணி. ஆங்கில மருத்துவ நூல்களில் இருந்து மொழிபெயர்க்கப்பட்ட ஒவ்வொரு வசனத்திலும் கிறீன் வேண்டிய திருத்தங்களைச் செய்து மீள அமைத்தார். மூல நூலின் கருத்து தமிழிலே சரியாக வெளிப்படல் வேண்டும் என்பதற்காக கிறீன் தனிப்பட்ட முறையில் கூடிய கவனம் எடுத்திருந்தார். புதிய பல சொற்பதங்கள் உருவாக்கப்பட்டன அல்லது ஏற்கனவே இருந்த சொற்கள் மேலும் மெருகூட்டப்பட்டன. தமிழிலே மருத்துவ நூல்களைக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக கிறீன் இடைவிடாது தினமும், வாராந்தம், மாதாந்தம் என்று வருடம் முழுவதும் இந்தப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்திருந்தார். இது மிகவும் கடினமான ஒரு பணி. ஒரு நாள் உண்மையான செய்தி மக்களைச் சென்றடையும் என்ற தூய நோக்குடன் மருத்துவ நூல்களை தமிழாக்கம் செய்யும் பெரும் சவாலை கிறீன் நிறைவேற்றினார்."

### கொழும்பு மருத்துவக் கல்லூரியின் ஆரம்பம்

யாழ்ப்பாணத்தில் அமெரிக்க மிசனரி மருத்துவர் கிறீன் மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்து 22 வருடங்களுக்குப் பின்னர் 1870 இல் கொழும்பு மருத்துவக் கல்லூரி பிரித்தானிய காலனிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டது. கொழும்பு மருத்துவப்பீடத்தில் ஆங்கில மொழிமூலம் மருத்துவக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டதால் மானிப்பாயில் தமிழில் கற்பதை விடுத்து மாணவர்கள் கொழும்பு நோக்கிச் செல்வார்கள் என்ற அச்சம் கிறீனுக்கு ஏற்பட்டது. இதனால் மாணவர்களுக்கு வழங்கும் உதவித்தொகையை அதிகரித்தார். கொழும்பு மருத்துவப் பீடம் ஆரம்பிக்கப்பட்டபோது முதலாவது அணியில் 25 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இங்கும் 3 வருடங்களைக் கொண்டதாகக் கற்கை நெறியிருந்தது. மருத்துவர் ஜேம்ஸ் லூஸ் முதலாவது அதிபராக நியமிக்கப்பட்டார். மருத்துவர் ஜேம்ஸ் லூஸ், மருத்துவர் அந்ரே மற்றும் மருத்துவர் ஈ.எல். கொச் ஆகியோர் விரிவுரையாளர்களாக இருந்தனர். இங்கு கற்பதற்கு மாணவர்களிடம் கட்டணம் அறவிடப்பட்டது. ஒவ்வொரு தவணையின் ஆரம்பத்திலும் 2 ஸ்ரேலிங் பவுணை மாணவர்கள் கட்டணமாகச் செலுத்தினர். அதேவேளை மானிப்பாயில் மருத்துவர் கிறீனது மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் இலவசமாகக் கற்றதுடன் அவர்களுக்கு உதவித்தொகையும் வழங்கப்பட்டது.




(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்றில் 7

இயல்வாணன்

மிக எளிமையான, மென்மையான, அதிர்ந்து பேசாத ஓர் ஆளுமை யோகேஸ்வரி சிவப்பிரகாசம். சிறுகதைகள் பலவற்றை எழுதியுள்ள இவர் பெண்ணிலை சார்ந்தும், ஆன்மிகம் சார்ந்தும் பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

அந்தக் காலத்தில் வெளிநாட்டு உத்தியோகம் என்பது மலேசியாவை மைய மாகக் கொண்டதுதான். பலர் மலேசியாவின் அரச துறைகளிலும், தனியார் துறைகளிலும் பணியாற்றியுள்ளனர். மலாயன் பென்சனியர்கள் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் முக்கியமான பாத்திரங்களாக விளங்கினர். அந்த வகையில் தொழில் நிமித்தம் மலேசியாவில் வசித்த சின்னத்துரை தம்பதியினரின் மகளாக யோகேஸ்வரி 13111948 இல் மலேசியாவில் (அப்போதைய மலாயா) பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை தங்களது தாயாரின் பூர்வீக கிராமமான இளவாலை யில் வசித்த நிலையில் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்திலும், மீண்டும் மலேசியா சென்று மலாயா இம்றோட் தமிழ் மகாவித்தியாலயத்திலும் கற்றார். பின்னர் மூளாயில் தனது தந்தையாரின் ஊரில் வசித்த போது பண்டத்த ரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டு சமஸ்கிரு தத்தில் சிறப்புப் பட்டம் பெற்று வெளியேறினார். 1972இல் சாவகச்சேரி மக்கள் வங்கியில் உதவி முகாமையாளராகப் பணியை ஆரம்பித்து கன்னாதிட்டி கிளை யில் முகாமையாளராகப் பதவியுயர்வு பெற்று யாழ். பல்கலைக்கழகக் கிளையில் முகாமையாளராக இருந்து 2003 இல் ஓய்வுபெற்றார்.

25.04.1965 ஆம் ஆண்டு ஈழநாட்டில் துளசிராணி என்ற புனைபெயரில் எழுதிய "கடைசியாக ஒருமுறை" என்ற சிறுகதையுடன் இவர் இலக்கிய உலகில் பிரவேசித்தார். முன்னதாக இலங்கை வானொலியின் இளைஞர் மன்றம், சுதந் திரன் பத்திரிகையின் வளர்மதி சிறுவர் பகுதி ஆகியவற்றிலும் இவர் எழுதியுள்ளார். ஈஸ்வரி, வாடாமலர், யோசி முதலான புனைபெயர்களிலும் இவர் எழுதியுள்ளார்.

தினகரன், வீரகேசரி, முரசொலி, ஈழமுரசு, ஈழநாதம், உதயன், ஈழநாடு, நமது ஈழநாடு, தினக்குரல், இளங்கதிர், மல்லிகை, ஞானம், ஜீவநதி, ஞானச்சுடர், அருள்ஒளி முதலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவரது எழுத்துகள் வெளி வந்துள்ளன.

இவரது 14 சிறுகதைகள் உணர்வின் நிழல்கள் என்ற தலைப்பில் தொகுக் கப்பட்டு 1997இல் மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந் தது. ஈன்ற பொழுதில்(1999), கணநேர நினைவலைகள் (2001), மனம் விந்தையானது தான்(2006), இன்னும் பேச வேண்டும்(2012), தாலி(2021) ஆகிய சிறுகதைத் தொகுதிகளும் வெளிவந்துள்ளன.



யோகேஸ்வரி சிவப்பிரகாசத் தின் சிறுகதைகள் தனிமனித வாழ்க் கைச் சிக்கல்களையும், சமூக நடப் பினையும், மனித நடத்தைகளின் பல்வேறு கோலங்களையும், யுத்த கால மற்றும் யுத்தத்துக்குப் பின் னான கால வாழ்முறைகளையும், புலம்பெயர் வாழ்வின் அனுபவங்க ளையும் பேசுவன. எளிமையான மொழிக்கையாட்சி, இயல்பாக பாத் திரங்களைச் சிருஷ்டித்து நடமாட விடுதல், நேர்த்தியான சம்பவ விப ரிப்பு என்பன அவரது சிறுகதை களின் தனித்துவமெனலாம்.

எண்ணிலாக்குணமுடை யோர் நடைச்சித்திரம்(2010), அரை நிமிட நேரம் - சமயக் கட்டுரை கள்(2005), முன்னோர் சொன்ன கதைகள் - இளையோருக்கான படிப்பினைக் கதைகள் (2011), உனக்கொன்றுரைப்பேன் பெண்ணி லைசார் கடித இலக்கியம்(2009), ஒளிவளர்தீபங்கள் - வலிகிழக்கின் ஆளுமைகள் பற்றிய கட்டுரைகள் (2016) முதலான நூல்களையும் அவர் எழுதி வெளியிட் டுள்ளார்.


யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

வடகோவை சபாபதி நாவலரின் நான்ம ணிகள்(2016), இருபாலை சேனாதிராய முதலியார் ஆக்கிய ஆக்கங்கள் ஆகிய நூல் களையும் அவர் தொகுத்து வெளியிட் டுள்ளார்.

யாழ். இலக்கிய வட்டம் முதலான அமைப்புகளில் இணைந்து செயற்பட்ட இவர், இலக்கிய சேவைக்காக பல விருது களையும், பட்டங்களையும் பெற்றுள்ளார். வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் வழங்கப்பட்ட கலைக்குரிசில் விருது, சந்நி தியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட ஞானச்சுடர் விருது, யாழ்முத்து விருது, சார்க் மகளிர் அமைப்பு விருது, உதயன் வெள்ளிவிழா விருது, கனகசெந்தி கதா விருது, சிரித்திரன் சுந்தர் விருது, இலக்கியத் தென்றல் விருது, இலங்கை இலக்கியப் பேரவை விருது, செம்புலக்குரிசில் விருது எனப் பல விருதுகளும், பரிசுகளும் இவரது இலக்கிய சேவைக்காக வழங்கப்பட்டுள்ளன.

தற்போது மகன் மற்றும் இரு மகள்களின் குடும்பத்துடன் இங்கிலாந்தில் வசித்து வரும் அவர் தொடர்ந்த வாசிப்போடும், எழுதும் ஆர்வத்தோடும் பயணிக் கிறார். அவரது வெளிவராச் சிறுகதைகளும், கட்டுரைகளும் தொகுக்கப்படும் போது அவரது பார்வை வீச்சின் ஆழத்தை மேலும் அறிய முடியும்.



# சிரஞ்சீவித்தனமான பாடல்

## இருந்து கதைப்பம்



கோகுலராகவன்

ஒரு பாடல் ஐம்பது வருடம் கடந்தும் பழைய பாடல் என்று யாராலும் சொல்ல முடியாத பாடலாக வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால் பாடலின் இசைய மைப்பாளர், பாடலாசிரியர், பாடியவர், மற்றும் நடித்த நடிக நடிகையர் எல் லோரும் காரணமாகி விடுகின்றனர்.

1963 இல் வெளிவந்த "கொஞ்சும் சலங்கை "படத்தில் இடம்பெற்ற "சிங்கார வேலனே தேவா" என்கின்ற பாடல்தான் அப்படியான சிரஞ்சீவித்தனமான பாடல். இது ஜெமினி,சாவித்திரி நடித்த படம். ஜெமினி நாதஸ்வர வித்துவானாக வருவார். சாவித்திரி பாடகியாக நடித்திருப்பார். படம் தோல்விப்படம். ஆனால் கொத்தமங்கலம் சுப்புவின் "தில் லானா மோகனாம்பாள்" படத்திற்கு அச்சாரம் இட்ட படம்.

"சிங்கார வேலனே தேவா" ஒரு திரைப்படப் பாடல் தான். ஆனால் காலத்தால் அழியாத பாடல்.

ஒருமுறை ஒரு சிங்களக் கல்வியியலாளர் கேட்டார் "நீங்கள் ஏன் தமிழ்த் திரையிசைப் பாடலில் விலகி இருக்கிறீர்கள்?"

இதற்கான பதில் என்னிடம் இல்லை.

அவர் அன்று "ஒவ்வொரு பூக்களுமே" என்ற பாடலைப் பாடி அன்றைய விரிவுரையைத் தொடங்கிய போது வகுப்பு "ஆவென்று" வாயைப் பிளந்து கேட்டுக்கொண்டிருந்து.

அவருக்குத் தமிழ் தெரியாது. ஆனால் தமிழ்ப் பாடல், தமிழிசை தெரியும். இதுதான் இசை யின் வெற்றி.

இதுபற்றி நிறையப் பேசலாம். ஆனால் இப்போது பாட லுக்கு வருவோமே.

எஸ்.எம்.சுப்பையா நாயுடு (மலைக்கள்ளன், திருடாதே, நாடோடி மன்னன் ,அன்னையின் ஆணை போன்ற படங் களுக்கு இசை வழங்கியவர்) இசையமைப்பில் .எஸ் . ஜானகியின் ரீங்காரக் குரலில், காருக்குறிச்சி அருணாசலம் வழங்கிய நாதஸ்வர இசையில் ஆபேரி ராகத்தில் அமைந்த பாடல்தான் "சிங்கார வேலனே தேவா".

இந்தப் பாடலில் ஜானகியின் குரலும் நாதஸ்வரமும் ஒன் றாகவே பயணிக்கின்றன.

"மலர்களில் ரோஜாவை மட்டும்
சூடாதே
வளரும் சந்தேகம்
மலரெது?
முகமெது ?"

இந்தக் கவிதை போலத்தான் ஜானகியின் குரலும், காருக்குறிச்சியவர்களின் நாதஸ்வரமும் இருக்கின்றன.

இந்த ஆபேரி இராக மெட்டு காருக்குறிச்சி அவர்கள் கோவில் ஒன்றில் "மந்திரமாவது" தேவாரத்தை வாசிக்க ஒரு பிரபல சங்கீத வித்துவானால் அமைக்கப்பட்டு கொடுக்கப்பட்ட ஒரு மெட்டு .இதை இந்தப் பாடலுக்காக காருக்குறிச்சி பயன்படுத்திக் கொண்டார். பின்னர் திரைப்படத் தயாரிப்பாளர் அந்த சங்கீத வித்துவானை அழைத்து அந்தக் காலத்தில் ஐயா யிரம் ரூபா கொடுத்த போதும் வாங்க மறுத்துவிட்டார்.

காரணம் ஏற்கனவே கொடுத்த மெட்டுக்கு, மீண்டும் கூலி பெறக்கூடாது என்றாராம். அப் படியும் மனிதர்கள் வாழ்ந்த பூமி இது .

'சிங்கார வேலனே தேவா ' பாடலை முதலில் பாட பி.லீலா, லதா மங்கேஷ்கர் ஆகியோரை இசையமைப்பாளர் நாட ,இவ்வளவு சங்கதிகளை கொண்ட பாடலை பாட இருவரும் பயந்து மறுத்து விட்டனர். பின்னர் , ஜானகியை பாட வைக்க பி.லீலா ஆலோசனை கூறி இருக் கிறார். என்னே பெருந்தன்மை,என்னே இசைஞானம்.

இந்தப் பாடலுக்கு இந்தப் பாடகிதான் பொருத்தம் என்று ஒரு பாடகி கூறுவதும் ஒரு வகை இசை ஞானம்தான்.

(சகிக்க முடியாத குரலுடன் சில இசையமைப்பாளர்கள் ஆர்மோனியப் பெட்டியால் வாய்ப்பு பெற்று பாடிக்கொண்டும் இருக்கின்றனர்.)

இந்தப் பாடல் இன்று வரை,
நாதஸ்வர வித்துவானாக்களுக்கு ஒரு வரப்பிரசாதம். இந்தப்பாடலை ஆகக்குறைந்தது ஒரு கச்சேரியிலாவது வாசிக்காத வித்துவான்கள் கிடையாது. அவ்வாறு வாசிக்காது போனால் இரசிகனுக்கும், வித்துவானுக்கும் அன்றைய கச்சேரி திருப்தியாக அமையாது. இந்தப் பாடல் நாதஸ்வரத்தில் இருபகுதிகளாக வாசிக்கும்போது அதாவது பாடகியின் குரலை ஒரு அணியும், நாதஸ்வரப் பகுதியை மறு அணியும் இரண்டாகப் பிரிந்து வாசிக்கும்போது சிறப்பு அதிகரிக்கும் ;கேட்பவரை மயக்கும்.

பாடலை இசையமைப்பாளர் வெறுமனே வரிகளால் நிரப்பாமல் ஸ்வர அடுக்குகளை நாய கனுக்கும் நாயகிக்கும் போட்டி போல வைத்திருப்பது எவ்வளவு மேன்மை.

இசை இல்லாமல் உலகம் இருக்குமா?என்று கேட்டால்....
இருக்கும்.
[illegible]டன் இருக்க வாய்ப்பே இல்லை. இந்தப் பாடலும் தமிழ் உலகை உயிர்ப் [illegible] வைத்த ஒரு பாடல்தான்.

(இன்னும் கதைப்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org